www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

11/00

දිනමුරසු වාරමලර්

செப்.21-27,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 223

## ரணிலும் புலிகளும்

## எரிந்த கப்பலும் எச்சரிக்கையும்



## கொலையும் மறுப்பும்



## கண்ணீரில் கரைந்த இரவுகள்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## வெறுங்கையும், வெற்றுக் கோஷமும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

சமாதான இயக்கம் ஒன்றை
ஆரம்பித்துள்ளதாக
அரசாங்கம் கூறிவருகிறது.

சமாதான ஊர்திகள்
பவனி வருகின்றன.
வீதி நாடகங்களில்
சமாதானத்தைப் பற்றிக் கூறி
வெளுத்து வாங்குகிறார்களாம்!

வீதி நாடகங்களில் நடிப்போர்
சிறப்பாக நடிப்பதாக கூறப்படுகிறது.
எனக்கென்னவோ அதிலே
உடன்பாடு கொள்ள முடியாதுள்ளது!

நம் அரசியல் தலைவர்களைவிட
தத்ரூபமாக இயல்பாக
நடிக்கக் கூடியவர்கள்
வேறு யாரும் கிடையாது
என்பதுதான் பொது அபிப்பிராயம்!

அரசியல்வாதிகள்
நீண்ட கால நடிகர்கள்
கைதேர்ந்த அனுபவஸ்தர்கள்!
முன்பெல்லாம்
சற்று முரட்டுத்தனமாக நடிப்பர்.
இப்போதெல்லாம்
வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல
நாசூக்காக நடிக்கக் கற்றுள்ளனர்.

"போர் என்றால் போர்"
என்று வீரவசனம் பேசிய
ஜே.ஆர். ஜெயவர்த்தனா
முரட்டுத்தனமாக நடித்தார்.

சர்வதேச அரங்கம்
கரகோசம் செய்யவில்லை.
கண்டனப் பார்வை வீசிற்று.

அதன்பின்னர்
தென்னிலங்கை அரசியல் நடிகர்கள்
தங்கள் பாணிகளை
வெகு துரிதமாக மாற்றிக் கொண்டனர்.

அதன் விளைவுதான்
இன்று நாம் கண்டுவரும்
நாசூக்கான நடிப்புக்காட்சிகள்!

எப்படியோ-
ஒன்றை மட்டும் மறுக்கவியலாது.
வடக்கு-கிழக்கு அரசியல் நடிகர்களைவிட
தென்னிலங்கை அரசியல் நடிகர்கள்
அற்புதமாக நடித்து வருகிறார்கள்.

தென்னிலங்கை
அரசியல் நடிகர்கள்
அரங்கேறிவரும் நாடகங்களில்
துணைப்பாத்திரம் மட்டுமே
வடக்கு-கிழக்கு அரசியல்வாதிகளுக்கு!

தென்னிலங்கை ஆட்சியாளர்கள்
மட்டுமல்லாமல்
எதிர்க்கட்சியினர் கூட
இயல்பான நடிப்பில் சளைத்தவர்களல்ல!
கழுவுகிற தண்ணிரில்
நழுவுகிற மீன்களாக
கனகச்சிதமாக
நடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

வேடிக்கை என்னவென்றால்
சமாதானம் வேண்டுமென்று
இரண்டு பெரிய தேர்தல்களில்
மக்கள் தெளிவாக தீர்ப்பளித்தனர்.

தீர்ப்பை நிறைவேற்றாமல்
அந்த மக்களிடமே
மீண்டும் போய்
சமாதானத்தைப் பற்றி
வசனம் பேசிக்கொண்டிருப்பதுதான்
பொல்லாத வேடிக்கை!

இது காத்திரமான முயற்சியா?
காலம் கடத்தும் முயற்சியா?

சமாதானத்தின் அவசியத்தை
அறியாத மக்கள்
இங்கு எவருமில்லை!

இப்போது தேவையானது
சமாதானம் பற்றிய முழக்கமல்ல.
சமாதானத்தை தோற்றுவிக்கும்
உருப்படியான திட்டமே தேவை!

வேண்டுமானால்
அவ்வாறான உறுதியான திட்டத்தை
கையில் எடுத்துக்கொண்டு சென்று
மக்களிடம் அங்கீகாரம் கேட்கலாம்.
விரிவாக விளக்கிக் கூறலாம்.
அதுதான் காத்திரமான முயற்சி!

ஆனால் இப்போது நடப்பதோ
வெறுங்கையுடன் சென்று
வெற்றுக் கோஷம் எழுப்பும்
காலம் கடத்தல் முயற்சிதான்!

மனமாற்றம் தேவைப்படுவது
மக்களிடமல்ல.
அரசியல் லாப நாடகங்கள்
நிறுத்தப்பட்டாலே போதும்
சமாதானமாற்றம் சாத்தியமாகிவிடும்.

அதற்கு தேவையானது
ஆட்சியாளர்கள், எதிர்க்கட்சிகள்
மற்றும் பிரச்சனையில் சம்பந்தப்பட்ட
சகல தரப்புக்களின்
மனம் திறந்த முயற்சிகள் மட்டுமே!

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## பரிசுத்த விவாகம்

தேவனாகிய கர்த்தர் "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்றதுணையை அவனுக்கு உண்டாக்குவேன்" என்றார் (ஆதி 2:18)

கடவுளே திருமணத்தை ஏற்படுத்தி முதல் திருமணத்தை நடத்தி வைத்தார். என்பதை திருமறையிலே காண்கின்றோம். மனிதர்களுடைய வாழ்க்கையில் புனித உறவும், புனித அன்பும் அரவணைப்பும், புதிய அனுபவங்களும் திருமணத்துக்கூடாக ஏற்படுகின்றன. இப்புனித திருமண வாழ்க்கையை பெற்றார்களின் சம்மதப்படி சம்பந்தம் பேசி ஏற்படுத்துவதை விட, தாங்கள் அறிந்து- புரிந்து மனம் விட்டுப்பழகி மணம் முடிப்பதையே இன்றைய வாலிப சமூகம் விரும்புகிறது.

இவ்வாறான திருமணங்கள் நடப்பதற்கு மனிதனில் காணப்படும் பாவ சுபாவ எண்ணங்களான, குலம், கோத்திரம், சாதி, சமய பேதங்கள், தடையாய் அமைந்துவிடுகின்றன. இதனால் நல்லுள்ளங்கள் நசுக்கப்பட்டு, பிரிக்கப்பட்டு, இன்னும் இன்னும் பிரிவுகளும் பேதங்களும் வளர்க்கப்பட்டுக் கொண்டு இருப்பதனால், சமத்துவம் விளங்கும் இறையரசை ஸ்தாபிக்கும் நோக்கத்திலிருந்து வழிவிலகிப் போகின்றோம்.

எனவே, விசுவாசிகளான நாம், பாவ சுபாவ எண்ணங்களுக்கு அடிமையாகி, சமூகத்தில் பேதங்களை வளர்க்காதபடி கடவுள் நிச்சயிக்கும் திருமண வாழ்க்கைக்கு, புனித உறவுகளுக்காக, ஆண்டவர் இயேசு மகிமைப்படும்படியாக நாமும் செயற்படுவோமாக.

சகோ. எஸ். யேசுநாதன், செங்கலடி.



## விபச்சாரத்தைவிடக் கொடியது புறம்

அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "புறம் பேசுவது விபச்சாரத்தை விடக் கடுமையான பாவமாகும்." மக்கள் வினவினார்கள்:

"அல்லாஹ்வின் தூதரே! புறம் பேசுவது விபச்சாரத்தை விட கடுமையான பாவமாக இருப்பது ஏன்?"

அண்ணலார் பதில் கூறினார்கள்: "மனிதன் விபச்சாரம் செய்கிறான்; பின்னர் பாவ மன்னிப்புக் கோருகிறான் எனில், அல்லாஹ் அவனது பாவ மன்னிப்பை ஏற்றுக் கொள்கிறான். ஆனால், புறம் பேசுபவனை- அவன் எவரைப் பற்றிப் புறம் பேசினானோ அவர் மன்னிக்காதவரை இறைவன் மன்னிப்பதில்லை."

மேலும் ஒரு ஹதீஸை அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

"நீ எவரைப் பற்றிப் புறம் பேசினாயோ (அவர் இல்லாத விடத்து அல்லது மரணமடைந்துவிட்டால்) அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்று இறைவனிடம் நீ இறைஞ்சுவது, புறம் பேசியதற்கான பிராயச்சித்தங்களில் ஒன்றாகும். அது, 'இறைவா! நீ என்னையும் அவரையும் மன்னித்தருள்வாயாக!' என்று இறைஞ்சுவதாகும்." என நபிகளால் (ஸல்) திருவாய் மலர்ந்தருளினார்கள்.

எம்.என்.எம். அனஸ், அக்குறணை.

# கவிதைப் போட்டி இல.220

## பரிசுக்குரிய கவிதை



### ஒன்றே போதும்

குறுந்தூர ஒட்ட ராணி
சாதனை படைத்தபோது
குதூகலித்த மானிடரே!
ஊனுறக்கம் தான் மறந்து
காடு மலை கடந்து
கனதூர மோடி வந்த
போர் புரத்து ராணிக்கு
விடிவு தந்தால் போதுமையா!

ஏ.பி.சதாசிவம்- மொரட்டுவ.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:**

### தடை ஏனோ?

தின்னத் தேனமுதம் தாவென்று கேட்கவில்லை;
வண்ணப் பட்டாடை வகை வகையாய்க் கேட்கவில்லை;
எண்ணம் போல் மணல் வீடுகட்டி மகிழ்ந்தாட,
என் வீட்டு முற்றத்தில் ஒடிவிளையாட;
என்ன தடை? ஏது விடை? எனக்கே புரியவில்லை!
சின்ன மகள் உன்னையே கேட்கிறேனம்மா!

கி. குகதாஸ்- வவுனியா.

### வருங்கால தலைவி(தி)யோ?

ஆராரோ? இவளாரோ?
ஜனநாயக நம்நாட்டின்
வருங்கால தலைவி(தி)
இவள்தானே?

ஹாமுசுரூப்- முர்வீதி, மன்னார்.

### என் கதி...!

முத்தான வீடும் சொத்தும்
மொத்தமாய்போன பின்னே,
கொத்தாக எனை சுமந்து;
கோயிலில் தஞ்சமான.
பெற்றோரின் உயிர்குடித்து
போர் அரக்கன் ஏப்பமிட
உற்றார் உற விழந்து
ஊமையென வாழ்க்கையாச்சு!

எஸ். கோடீஸ்வரன்- பொகவந்தலாவ.

### வழி என்ன?

தாயாரைப் பார்த்ததில்லை;
தாலாட்டும் கேட்டதில்லை;
வாயார உணவில்லை;
வாழ வழி தெரியவில்லை;
போரோயாக் காரணத்தால்
பொழுதெல்லாம் மரணபயம்;
தீராத என்சோகம்
தீர இங்கு என்ன வழி?

சி.மு.சுந்தரேசன்-அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

### இட(ர்)ம் பெயர்

இடர் நிறைந்த
இலங்கையில்
ஓர்
இடம் பெயர்ந்த
முல்லை!

அ.வதனா- மொரட்டுவ.

### மடிவதற்காய் வாழ்!

நடந்தால் மிதிவெடி;
ஓடினால் கண்ணிவெடி;
பார்த்தால் குண்டு வெடி;
பதுங்கினால் 'ஷெல்' அடி;
எல்லாமே மரண அடி
நினைத்தால்தான் துக்கமடி!
அதனால்-
வாழும்வரை வாழ்ந்துமடி!

சிவ கங்கா- மட்டக்களப்பு.

### சாவதெப்போ?

தனிமரமாய் தனித்திங்கு தனை மறந்து,
தளிர் ஒடிந்து நிற்பதென்ன...?
தந்தையரை தாயவளை சார்ந்தபல சோதரரை
தட்டிப் பறித்த சமரென்னும் சதியிங்கே சாவதெப்போ?

ஜெ.செ.சுலக்சினி- உவர்மலை, திருகோணமலை.

### இதுதான் கோலமோ?

"பிஞ்சே என்ன சஞ்சலம் வந்தது?
அஞ்சேல் என அணைப்பார் இல்லையோ?
கொஞ்சிக் குலாவி கும்மாளமிடும் வயதில்
வெஞ்சமர் செய்த கொடுமையின் கோலமோ?"

கா. பூபாலபிள்ளை- அலெக்சாந்திரா வீதி, கொழும்பு-06.

### மனச்சுமை!

போர் முழக்கக் காதடைப்பு,
ஊர் முழுக்க வாயடைப்பு!
உண்ண நல்ல உணவில்லை
உண்மை கூற வாயில்லை.
கண்ணிலே நீர் அழுத்தம்
சிரசினிலே துயர் அழுத்தம்.
தலைப் பாரம் தனைத்தாங்க,
இடக்கைதான் சுமை தாங்கியோ!

திருமதி ஜே.கே. இருதயநாதன்- மட்டக்களப்பு.

### அநாதையாய்....!

உண்ண உணவுமில்லை,
உறவுகளும் அருகிலில்லை.
கண்ணெதிரே கடும் யுத்தம்
பேயாட்டம் ஆடும்:
சொந்த நிலம் ஊரெல்லாம்
சுடுகாடாய் மாறும்:
உன்னைப் போல் அநாதைகளின்
பட்டியலே நீளும்!

பஷீரா முஹைடீன்- பாலையூற்று, திருமலை.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* தர்மலிங்கம் காந்தரூபன், கல்லடி.
* செல்வி எம்.வித்தியாழினி, பத்தனை
* சசிகலா துரைநாயகம், சாம்பல்தீவு
* செ.சகுந்தலா, வத்துகாமம்.
* எஸ்.யுவராணி, பிட்டகந்த.
* மு.சரவணன், பசறை.
* இரா.வினோத்குமார், ஹட்டன்.
* கே.எஸ்.சுப்பிரமணியம், நெல்லிமலை.
* அ.அரசரெத்தினம், சேனையூர்-06.
* பூ.கரதாஸ், ஆலையடிவேம்பு-03.
* வேலாயுதம் சச்சுதா, புப்புரள்ள.
* ஏ.சொரூபராஜன், ஜெர்மனி.
* இப்திகார் இஸ்மாயில், மடவளபஸார்.
* க.குகனேந்திரன், ஃபிரான்ஸ்.
* வீ.தவராசா, இலண்டன்.
* எம்.ஜெயக்குமார், இலண்டன்.
* பா.காரியப்பர், அவுஸ்திரேலியா.
* அ.லோகநாதன், சிங்கப்பூர்.
* எஸ்.இஸ்மாயில், கல்முனை.
* கு.உருத்திரன், டென்மார்க்.
* கோ.சங்கரலிங்கம், திருப்பழுகாமம்-2.
* ஏ.றினோஸியா, திஹாரிய.
* காந்தமலர் பஸ்மியா, காத்தான்குடி-06.
* ஆ.துரைசிங்கம், கனடா.
* திருமதி இ.மயூரா, சுவிற்ஸர்லாந்து.
* எம்.மதனிஸ்மாயில், நீர்கொழும்பு.
* கே.எம்.நிஸந்தா, மூதூர்.
* எம்.மஷ்ஹுர், பலாங்கொட.
* பாத்திமாரிப்கா பாரிஸ், நுவரெலியா.
* வி.டேவிட், நோர்வே.


# கவிதைப் போட்டி இல.223



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 27.09.1997

**முகவரி:** கவிதைப் போட்டி இல.223
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை



## கழுத்துக்கு கத்தி

'வெற்றி வரும் முன்னே, தீர்வு வரும் பின்னே' இராஜதந்திரியின் அலசல் நன்றாக இருந்தது. காலவரையறைகளுக்கு தலையாட்டும் தமிழ்க் கட்சிகள், கத்தி தமது கழுத்துக்கும் சேர்த்துத்தான் வரும் என்பதை ஏனோ உணரவில்லை. அல்லது தெரிந்தே சுரணையின்றி இருக்கிறார்களா?

ம.கருணாகரன், திருக்கோணமலை.

## அசத்தல் பாணை

'சபைக்கு வந்த பானை' காதிலை பூ கந்தசாமியார் அசத்திவிட்டார். சேனை போய்ச் சேர்ந்த பின்னர்தான் பானையின் கதி தீர்மானிக்கப்படும். அதுவரை சுதி தவறாமல் துதி பாடலாம் என்று போட்டாரே ஒரு போடு. கற்பனையல்ல, கச்சிதமான உண்மை ஐயா.

எஸ்.மரியதாஸ், கொழும்பு-07.

'ஜயசிக்குறுய்' இலக்கையும் களநிலவரத்தையும் அகழ்ந்து தரும் நாரதரே கொடுங்கள் கையை. மருத்துவத்தில் எக்ஸ்ரே ரிப்போர்ட் இருப்பதைத்தான் காட்டும். நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட், இருப்பதை மட்டுமல்ல, இனி நடப்பதையும் காட்டுகிறதே! புளியங்குளத்தில் புலிகளின் தயார் நிலையும், ஆயுதங்களும் பற்றி பல மாதங்கள் முன்பாக நாரதர் சொன்னதை தற்போதைய களம் உறுதிப்படுத்தி வருகிறது. சபாஷ் நாரதரே!

பி.கணேசன், கண்டி

## நிறை குடம்

சனத் ஜெயசூர்யாவை முன்னாள் அதிரடி வீரர் ஸ்ரீகாந்த் புகழ்ந்திருந்தார். உண்மையான திறமைசாலியால்தான் இன்னொரு திறமைசாலியைப் பாராட்டமுடியும். மற்றோர் திறமைகளைக் கண்டு முகம் சுளிப்போர் மத்தியிலே ஸ்ரீகாந்த் உண்மையாகவே சிறந்த மனிதர். நிறைகுடம்.

என்.நஜீம், கொழும்பு-11.

## தப்பிக்கொள்ள முயற்சியா?

டயானா தொடர்பாக தகவல் பெட்டி விவரணம் நச். அதிகமும் புகழாமல், அதிகமும் தூற்றாமல் சுருக்கமான விளக்கம். டயானா விடயத்தில் மாட்டுப் பட்டு முழித்தது பத்திரிகை உலகம். அந்த பத்திரிகை உலகால்தான் டயானாவே பிரபலமானார், அவரும் தேவதையாக புகழ்பெற்றார். என்பதை முரசுதான் சுட்டிக்காட்டியது. துரத்தி துரத்தி வெளிநாட்டு புகைப்படப் பிடிப்பாளர்கள் எடுத்த புகைப் படங்களை அன்று தொட்டு வெளியிடாத பத்திரிகைகளே கிடையாது. அதே பத்திரிகைகளே இறுதியில் தாம்மட்டும் தப்பிக்கொள்ள புகைப் படப்பிடிப்பாளர்களை ஒரு வாங்கு வாங்கியதுதான் சிரிப்பாக இருந்தது. புகைப்படப்பிடிப்பாளர்கள் டயானாவை துரத்தித் திரிந்தது தவறு என்றால், அவர்கள் பிடித்துக் கொடுத்த புகைப் படங்களை வெளியிட்டு மேலும் துரத்த உற்சாகமளித்த பத்திரிகைகளும் தமது தவறை ஒப்புக்கொண்ட பின்னரே புகைப் படப்பிடிப்பாளர்களை பற்றி பேசியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் சாத்தான் வேதம் ஓதுவது போன்றதுதான்.

கோ.ஜெகநாதன், மஸ்கெலியா.



தொடர்ந்து வரும் யுத்த அத்தியாயத்தில் எத்தனை எத்தனை கறை படிந்த பக்கங்கள். அத்தனையையும் ஒன்றுவிடாமல் தொகுத்து தரும் 'அரசியல் தொடர்' வாசகர்களால் ஆவணப்படுத்தப்பட வேண்டிய பக்கம்.

பி.கிறிஸ்ரி அன்ரனி, மட்/தாண்டவன்வெளி.

இனிய முரசுக்கு!

ஒவ்வொரு வாரமும் நீ சுமந்து வரும் அம்சங்கள் அருமையிலும் அருமை. பூலானின் சோகம் கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது.

தினகரி சொக்கலிங்கத்தின் 'நியதிகள் மாறலாம்' சூப்பர்.

திருமதி எஸ்.ராதா, இறக்குவானை.

தேனினும் இனியதாக தித்திக்கும் அன்பின் தினமுரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் என்னை கவர்ந்தவை. அதிலும் இலக்கியநயம், உடைந்த இரவு போன்றவை மிகவும் சுவாரசியமாகவுள்ளன. மேலும் பூலான் மிகவும் கவலையாகவும் ஆத்திரத்தையூட்டுவதாகவும் இருக்கிறது. என்ன செய்வது, காலத்தின் கோலம் காமப்பிரியரின் உயிரை குடிக்க வேண்டும் போல் இருக்கிறது. முரசே! உன்னை வாசித்த என்னால்தான் முடியவில்லை. கதையின் முடிவிலாவது பூலான் காமபிரியர்களின் உயிரை மண்ணிலிருந்து விண்ணிற்கு அனுப்ப வேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

ஜீவா தேவராஜா, பாரதிபுரம், கிளிவெட்டி, மூதூர்.



படிப்பகம்

www.padippakam.com

# புளியங்குளம் நோக்கிய மற்றொரு தரை நகர்வு!

## புதூரில் நடந்த கடும் மோதல்-இரு தரப்பிலுமாக 70க்கு மேற்பட்டோர் பலி!

'ஜயசிக்குறுய்' படையினர் 10.09.97 அன்று தமது தரை நகர்வு முயற்சியை மீண்டும் ஆரம்பித்தனர்.

புளியங்குளம் நோக்கி ஒரு முனையிலும், நெடுங்கேணியில் இருந்து ஒட்டிசுட்டான் பகுதி நோக்கி மறுமுனையிலுமாக இரு முனைகளில் படைகள் முன்னேற ஆரம்பித்தன.

நெடுங்கேணியில் இருந்து ஒட்டிசுட்டானுக்கு செல்வது சுலபமான காரியமல்ல. புலிகளின் அணிகளை அங்கு இழுப்பதற்காக ஒட்டிசுட்டான் நோக்கி நகர்வை ஆரம்பிப்பதுபோல படையினர் போக்குக் காட்டினர். அந்தச் செய்தியே ஒட்டிசுட்டானை நோக்கி முன்னேறுவதாக கூறப்பட்டது. ஒட்டிசுட்டான் நோக்கிய பாதையில் முன்னேற முயல்வதாக போக்குக் காட்டிய படையினர் மீது புலிகள் எறிகணைத் தாக்குதல் நடத்தினர்.

### போக்குக்காட்டினர்

ஒட்டிசுட்டான் நெடுங்கேணியில் இருந்து வடக்கு நோக்கி 11 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. புலிகளின் தளப்பிரதேசத்தின் இதய பாகமான முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் உள்ளபகுதியே ஒட்டிசுட்டானாகும்.

அந்த பதினொரு கிலோமீட்டரை கடப்பதைவிட, நெடுங்கேணியில் இருந்து புளியங்குளம் நோக்கிய 20 கிலோமீட்டர் தூரத்தை கடந்துவிடலாம். எனவே ஒட்டிசுட்டான் பகுதிக்கு செல்வது படையினரின் நோக்கமாக இருக்கமுடியாது. அவ்வாறு செல்ல முயல்வது புளியங்குள மோதலைவிட பன்மடங்கு பாரிய மோதலை சந்திக்கும் களமாகிவிடும்.

வவுனியா-யாழ் சாலையில் முன்னேறும் படையினரை எதிர்த்து நிற்கும் புலிகளின் அணிகளை வேறு புறமாக இழுக்கும் வகையில் போக்குக்காட்டும் முயற்சியே அதுவாகும். புலிகளும் அதனைப் புரிந்துகொண்டு, யாழ்-வவுனியா சாலையில் முன்னேறிய படையினரை தடுப்பதிலேயே பிரதான கவனம் செலுத்தினர்.

### கடும் சமர்

புளியங்குளம் நோக்கி முன்னேறிய படையினர்மீது புதூர் என்ற இடத்தில் வைத்து பாரிய தாக்குதலை தொடுத்தனர் புலிகள். 10.09.97 புதன்கிழமை நடைபெற்ற இப்பாரிய சண்டையில் 40க்கு மேற்பட்ட படையினர் பலியாகினர். புலிகள் தரப்பில் 13 பேர் பலியாகினர். படையினரில் 17 பேரின் சடலங்களைப் புலிகள் ஒப்படைத்தனர். பாரிய சிதைவடைந்த 13 சடலங்கள் புலிகளால் எரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஏ.கே.எல்.எம்.ஜி.-10, ஜி.பி.எம்.ஜி.-01, ஆர்.பி.ஜி. லோஞ்சர்கள்-05, 60-எம்.எம். மோட்டார்கள்-02, ரி.56 ரக துப்பாக்கிகள், மற்றும் 30 ஆயிரம் ரவைகள், இராணுவ உபகரணங்கள் என்பவை கைப்பற்றப்பட்டதாக புலிகள் தெரிவித்திருந்தனர்.

புளியங்குளம் நோக்கி முன்னேறிய படையினரை நோக்கி காட்டுப் பகுதியில் இருந்து எறிகணைத் தாக்குதல் நடத்திய புலிகள், திடீரென்று படையினரின் பக்கவாட்டில் கிழக்கு புறமிருந்து நெருங்கி தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதனால் 'ஜயசிக்குறுய்' படையணியின் முன்வரிசைப் படையணிகள் முன்னேற்றத்தை தொடர முடியாமல் போனது.

புதன்கிழமை நடைபெற்ற பாரிய சண்டையில் புலிகள் தரப்பில் தாக்குதல் அணி தளபதிகளில் ஒருவரான லெப்டினண்ட் கேனல் பூவரசன் பலியானார்.

புதன்கிழமை நடைபெற்ற மோதலின் பின்னர் இரு தரப்பும் ஷெல் வீச்சுக்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

### எம்.ஐ.24

12.09.97 அன்று இலங்கை விமானப் படைக்கு சொந்தமான எம்.ஐ.24.ரக ஹெலிக்கொப்டர் ஒன்று புலிகளின் விமான எதிர்ப்பு படையணியால் சுடப்பட்டது.

விமான எதிர்ப்பு துப்பாக்கியாலேயே ஹெலிக்கொப்டர் சுடப்பட்டது. ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்படவில்லை. பாரிய சேதத்துடன் ஹெலி தரையிறங்கியது.

எம்.ஐ.24. ஹெலிக்கொப்டரில் விமான எதிர்ப்பு ஏவுகணையை எதிர்க்கும் ஏவுகணை எதுவும் கிடையாது. அக் ஹெலிகொப்டரில் உள்ள ஏவுகணைகள் எதிரே வரும் விமானத்தை தாக்கக்கூடியவை. தரையில் உள்ள இலக்குகளையும் அந்த ஏவுகணைகளால் தாக்க முடியும். ஆனால் விமான எதிர்ப்பு ஆயுதங்களின் தாக்குதலை எதிர்கொள்ளமுடியாது.

இலங்கை அரசிடம் உள்ள விமானங்களில் கிபிர் விமானங்களில் மட்டுமே விமான எதிர்ப்பு ஏவுகணையை எதிர்கொண்டு தாக்கும் ஏவுகணைகள் உள்ளன. அன்டநோவ் விமானத்தில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை திசை திருப்பும் 'ஹீற் பலூன்கள்' உள்ளன.

### முன்னேற்றம் இல்லை

எம்.ஐ.24. ஹெலிக்கொப்டர் தாக்கப்பட்ட பின்னர் சண்டையில் தீவிரம் குறைந்தது. புளியங்குளம் நோக்கிய தரைநகர்வும் மந்த நிலையை அடைந்தது. மறுபடி 15.09.97 அன்று மீண்டும் மோதல்கள் ஏற்பட்டன. இம்மோதலில் புலிகள் தரப்பில் 5பேர் பலியாகினர். படையினர் தரப்பிலும் பாரிய இழப்பு ஏற்பட்டது.

10.09.97 முதல் ஆரம்பமான தரை நகர்வு முயற்சியின் பின்னரும் படையினர் முன்பிருந்த நிலைகளிலேயே இதுவரை தரித்து நிற்கின்றனர். முன்னோக்கி செல்ல முடியவில்லை என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

எம்.ஐ.24 ஹெலிக்கொப்டரும் சேதமடைந்தமையால் 'ஜயசிக்குறுய்' படையினரின் தரை நகர்வுக்கு விமானப்படை உதவியை போதியளவு வழங்க முடியாமல் இருக்கிறதாம்.

10.09.97 முதல் 16.09.97வரையான நிலவரப்படி 'ஜெயசிக்குறுய்' படைகளுக்கு எதிரான சண்டைகளில் புலிகள் தரப்பில் 22பேர் வரை பலியாகியுள்ளனர்.

இலங்கை விமானப்படைக்கு இஸ்ரேலிடம் இருந்து மேலும் 8 கிபிர் விமானங்கள் வழங்கப்படவுள்ளன. இந்த விமானங்கள் இந்த வருட இறுதிக்குள் வந்து சேருமாம்.

இலங்கையின் 50வது சுதந்திரதின கொண்டாட்டத்தின் முன்பாக குறிப்பிடத்தக்க இராணுவ வெற்றியை பெற்றாக வேண்டும் என்பதில் இலங்கை அரசு தீவிரம் காட்டுவதையே அதன் ஆயுதக் கொள்வனவுகள் வெளிப்படுத்தி வருகின்றன என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஈ.பி.டி.பி. அலுவலக குண்டுவெடிப்பு!

## தலா 50 ஆயிரம் கொடுக்கப்பட்டதாம்

கொழும்பில் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்பின் பின்னணி பற்றிய தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளன. உள்ளிருந்து திட்டமிடப்பட்ட சதியே காரணம் என்பது புலனாகியுள்ளது.

கதவு திறந்ததும் வெடிக்கும் வகையில் கைக்குண்டுகள் இரண்டு உட்புறமாக கட்டப்பட்டிருந்தன. இன்னொரு அறை வழியாகச் சென்று அலுவலக கதவின் உட்பக்கமாக கைக்குண்டுகள் கட்டப்பட்டிருந்தன.

ஈ.பி.டி.பி. தலைமை நிலைய செயலாளரான தம்பிராசா வடிவேல் (ராஜூ) அலுவலகத்தில் இருந்து வெளியே புறப்பட்டுச் சென்றதும், அவரது அலுவலக அறைக்குள் பின்புற அறைவழியாக பிரவேசித்து கைக்குண்டுகள் கட்டப்பட்டன. வெளியே சென்ற ராஜூ திரும்ப வந்து, அலுவலக கதவை திறக்கையில் கைக்குண்டு வெடித்தது. ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் மரணமானார்.

தம்பிராசா வடிவேல் ஈ.பி.டி.பி. இயக்க தலைவர்களில் ஒருவராவார். மட்டக்களப்பு பெரிய கல்லாறைச் சேர்ந்தவர். கடந்த 20 வருடகாலமாக அரசியலில் ஈடுபட்டுவந்தார். இந்திய படையினரிடம் ஆயுதப் பயிற்சி பெற்றிருந்தார். ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி. பயிற்சி முகாம்களில் ஆயுதப் பயிற்சி வழங்குவதற்கும் பொறுப்பாக இருந்தார்.

உள் சதியில் ஈடுபட்ட மூன்று அல்லது நான்குபேர் உடனடியாக ஈ.பி.டி.பி.யினர் உள்ளே மேற்கொண்ட விசாரணையில் மாட்டிக்கொண்டனராம். இருவர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சதியில் முக்கிய சம்பந்தம் கொண்ட இருவர் விசாரணையின் போது தப்பிச் சென்றுவிட்டனர் என்று ஈ.பி.டி.பி.யினர் பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர்.

ஈ.பி.டி.பி.யில் இருந்து விலக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட ராமேஸ்வரன் எம்.பி. கூறியதற்கு இணங்கவே உள்சதியில் ஈடுபட்டதாக கைதானவர்கள் கூறியுள்ளனர். தமக்கு தலா 50 ஆயிரம் ரூபாய்கள் தருவதாக ராமேஸ்வரன் கூறியதாகவும், முற்பணமாக ஒரு தொகை தரப்பட்டதாகவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து ராமேஸ்வரனின் செயலாளர் குணசீலன் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நிபந்தனையுடன்கூடிய பிணையில் விடப்பட்டுள்ளார்.

ஈ.பி.டி.பி. தலைமைச் செயலகத்தில் உறுப்பினர்கள் மட்டுமன்றி வெளியாரும் தங்கிச் செல்ல அனுமதிக்கப்படுவது உண்டு. அதனால் அங்கு கூட்டம் அதிகமாக இருக்கும். அதனால்தான் யாருக்கும் சந்தேகம் வராதபடி சந்தடி சாக்கில் உள்ளிருந்தே சதிவேலை செய்யப்பட்டுள்ளது.

சதிவேலைகளில் ஈடுபட்ட நால்வரும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள். ராமேஸ்வரன் ஊர்காவத்துறையில் ஈ.பி.டி.பி. பொறுப்பாளராக இருந்தபோது அவருடன் இருந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## திலீபன் நினைவு தினம்

இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த காலத்தில் 1987ம் ஆண்டு நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி லெப்டினன்ட் கேர்ணல் திலீபனின் 10வது ஆண்டு நினைவு தினம் இம்மாதம் 16ம் திகதி முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

நினைவு நாட்களை ஒட்டி 16ம் திகதி முதல் 26ம் திகதி வரை வன்னிப்பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் பல்வேறு அஞ்சலி நிகழ்வுகள், அடையாள உண்ணாவிரதங்கள் என்பன நடைபெறும் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

## அறிக்கை வெளியாகுமா?

காணாமற் போனவர்கள் பற்றி விசாரணை நடத்திய கமிஷனின் அறிக்கையை வெளியிடப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனை சர்வதேச மன்னிப்பு சபை வரவேற்றிருக்கிறது. ஆனால் இதனையிட்டு பாதுகாப்புத் துறையோடு இணைந்த வட்டாரங்களில் பரபரப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சீருடை தரித்தவர்கள் 170 பேர்களும் குற்றப்பட்டியல்களில் இடம் பெற்றிருப்பது தான் பரபரப்புக்கான காரணமாம். இவர்களுள் இருவர் உயர்தர அதிகாரிகளாம். அறிக்கை வெளியிடப்படும் பட்சத்தில் இவர்கள் அனைவரும் கட்டாய லீவில் அனுப்பப்படுவர் என்றும் கூறப்படுகிறது.

## சம்பளப் பணம் மூலம் எரித்த வீடுகளுக்கு இழப்பீடு!

மட்டக்களப்பு-வாழைச்சேனை புதுக்குடியிருப்பில் கடந்த 15.07.97 அன்று படையினருக்கும் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையில் நிகழ்ந்த மோதலொன்றின் விளைவாக குடிமக்களின் வீடுகள் பல படையினரால் எரிக்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பிரிகேடியருக்கு பரவலான முறைப்பாடுகள் தெருவிக்கப்பட்டதன் காரணமாக அவர் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து பொது மக்களுக்கு ஏற்பட்ட சேத விபரங்களை மதிப்பீடு செய்து இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுத்திருந்தார். சேத விபரங்கள் படையினராலேயே திரட்டப்பட்டன.

அதற்கமைய கடந்தவாரம் பாதிக்கப்பட்ட 36 வீடுகளுக்கு ரூபா 3 இலட்சத்து 50ஆயிரம் நஷ்டஈடு வழங்கப்பட்டது. ஆகக் குறைந்த பாதிப்புக்குரிய இழப்பீடாக ரூபா 500 உம், ஆகக்கூடிய தொகையாக ரூபா 62,750/= உம் வழங்கப்பட்டன. நஷ்ட ஈட்டுக்காக பெறப்பட்ட இப்பணத்தொகை வீடெரிப்புச் சம்பவத்தில் ஈடுபட்ட படையினரின் சம்பளத்திலிருந்தே அறவிடப்பட்டதாகும் என்று பிரிகேடியர் தெரிவித்தார்.

இழப்பீடு வழங்கும் வைபவத்திற்கு வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் திரு.கே.கதிர்காமநாதனும் அழைக்கப்பட்டிருந்தார். மேஜர் ஆர்.எம்.குமாரசிங்கவும் இவ்வைபவத்தில் சமுகமளித்திருந்தார்.

பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடும், படையினரால் செய்யப்பட்ட மதிப்பீடும் கிட்டத்தட்ட ஒத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னரும் வாகரை, பேத்தாழை போன்ற பகுதிகளில் நடந்த சம்பவங்களின் விளைவாக படையினரால் பாதிக்கப்பட்ட ஒரு சில குடும்பங்களுக்கு படையினர் சிறிய அளவான உதவிகளைச் செய்துள்ளனர்.

# கடலிலும்-தரையிலும் போரிடும் படையணி

## கடற்புலிகள் அணியில் விசேட கொமாண்டோக்கள்

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உருவாக்கப்பட்டுள்ள புதிய படைப்பிரிவுக்கு சிறுத்தைப் படையணி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

வன்னியில் சமீபகால தரைச்சண்டைகள், மற்றும் கடற்சண்டைகளில் சிறப்பாகச் செயற்பட்ட உறுப்பினர்களில் ஒரு பகுதியினரையும், புதிதாக கொமாண்டோ பயிற்சி பெற்ற உறுப்பினர்களையும் கொண்டதாக இப் படைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதாம்.

தனியான சீருடைகளும் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கடலிலும், தரையிலும் சண்டைகளில் ஈடுபடக்கூடிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சிறுத்தைப் படையணியில் கடற் சிறுத்தைகள் என்றொரு தனியான அணியும் இருக்கிறது.

புல்மோட்டையில் 09.09.97 அன்று கப்பல்மீது நடத்தப்பட்ட தாக்குதலிலும், கடற் சமரிலும் கடற்புலிகளும், சிறுத்தைப் படையணியும் இணைந்தே பங்கு கொண்டனர்.

அதுதான் சிறுத்தைப் படையணியினர் பங்குகொண்ட பாரிய முதற் சமர் என்று தெரிகிறது.

09.09.97 அன்று இரவு சிறுத்தைப் படையணியினரால் வவுனியா மன்னார் பிரதான வீதியிலும் பாரிய தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

படையினரின் காவலரண்கள்மீது நடத்தப்பட்ட அத்தாக்குதலில் 7 காவலரண்கள் அழிக்கப்பட்டதாகவும், ஒன்பது படையினர் பலியானதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். புலிகள் தரப்பில் எவ்வித இழப்புக்களும் ஏற்படவில்லை. ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டனவாம்.

தொடரான அதிரடித் தாக்குதல்களிலும், கடற்தாக்குதல்களிலும் சிறுத்தைப் படையணிகள் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று கூறப்படுகிறது.

### வன்னித் தாக்குதல்கள்

வன்னியில் ஜயசிக்குறுய் படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் தொடர்ந்து வருகின்றன.

அதேவேளை வன்னியில் பரவலான தாக்குதல்களிலும் புலிகள் ஈடுபட்டுவருகின்றனர். மணலாறு, மன்னார், கிளிநொச்சி போன்ற பகுதிகளில் புலிகளின் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

கிளிநொச்சியில் மாட்டுவண்டி ஒன்றில் பயணம் செய்த படையினர் புலிகள் வைத்த கண்ணி வெடியில் சிக்கினார்கள். 7 படையினர் பலியாகினர்.

'ஜயசிக்குறுய்' படையினரின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்திக்கொண்டே, வன்னியில் ஏனைய படை நிலைகள்மீதும் தமது தாக்குதல்களை விரிவாக்க புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் மணலாறு இராணுவ முகாம்கள் புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்து உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மன்னாரில் நிலை கொண்டுள்ள படையினரும் புலிகளின் தாக்குதலை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர்.

# யாழில் கடமையாற்றும் சிப்பாய்களின் சோகம்

## கொழும்பு ஆங்கில ஏடு விபரிப்பு!

"யாழ்ப்பாணம் வருகிறீர்கள். இங்கு சிவிலியன்கள் படும் துன்பங்களைப் பற்றிய கதைகளைத் திரட்டி, படங்களையும் பிடித்து கொழும்புக்கு கொண்டுபோய் பொதுமக்களைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதிப் பிரசுரிக்கிறீர்கள். ஆனால் நாங்களும் மனிதர்கள் தான். நாங்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களைப் பற்றி எவரும் ஏன் என்று கேட்பதுமில்லை. எங்களுக்காக அனுதாபப்படுவோரும் இல்லை."

இவ்வாறு யாழ் பலாலி இராணுவத் தளத்தின் விமான நிலையத்தில் கொழும்பு திரும்புவதற்காக- விமானத்துக்காக காத்திருந்த பத்திரிகையாளர்களிடம் அங்கு ஒரு ஒதுக்குப்புறமாக நின்றிருந்த சிலர் கேட்டனர். அவர்கள் வேறு யாருமல்ல: சிறீலங்கா ஆயுதப்படைப் பிரிவைச் சேர்ந்தவர்களே ஏறத்தாழ 300 பேர்வரை அவ்விடத்தில் ஏமாற்றத்தையும் வேதனையையும் சுமந்த வண்ணம் இருந்தனர்." இவ்வாறு 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

யாழில் கடமையாற்றும் படையினர் "ஊர்திரும்பி குடும்பத்தினருடன் இருந்துவிட்டுத் திரும்புவதற்காக 14 நாட்கள் மட்டும் விடுமுறை தரப்பட்டுள்ளது. விமானப் போக்குவரத்துச் சீரில்லாமையினால் 14 நாட்களில் ஒருநாள் விடுமுறை விமானத்தைக் காத்திருப்பதில் கழிந்து போய் விடுகிறது. சில சந்தர்ப்பங்களில் இரண்டு மூன்று நாட்கள் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுவதுண்டாம். விடுமுறை காலத்தில் ஒவ்வொரு நிமிடத்தையும் தங்கள் குடும்பங்களுடன் செலவிடக்கனவு கண்டு கொண்டிருக்கும் அவர்களுக்கு இது ஒரு பரிதாபகரமான அனுபவம்.

### முண்டியடித்தனர்

அத்துடன் இவர்களுக்கு- காத்திருப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் உணவோ, தேனீரோ, குடிநீரோ கிடைப்பதற்கும் எதுவித வசதியும் இல்லையெனத் தெரிவித்துள்ளனர்.

பகல் 3.50க்கு அன்ரநோவ் 32 விமானம் பலாலியில் தரை இறங்கியது. எண்ணை நிரப்பி, இயந்திரப் பரிசோதனைகளை முடித்துக்கொண்டு விமானம் புறப்படத் தயாரானதும் பத்திரிகையாளர்கள் 17 பேரும் முன்னதாக அனுமதிக்கப்பட்டனர். தொடர்ந்து பிக்குமார் மூவரும் அதன்பின்னர் இராணுவ அதிகாரி இருவரும் பொலிஸ் அதிகாரி ஒருவரும் சென்று இருக்கைகளில் இடம் பிடித்தனர்.

பயணத்துக்காக காத்திருந்த பொலிசாரும் சிப்பாய்களும் வரிசையில் நிற்கும்படி கோரப்பட்டனர். இதற்கிடையில் கடும் காயமுற்ற மூன்று சிப்பாய்கள் ஸ்ட்ரெச்சரிலும் மற்றும் சிறுகாயங்களுக்குள்ளான இருவரும் அனுமதிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தில் பிரதானமானதாகக் கருதப்படும் 'டிசிப்பிளின்' கட்டுப்பாடு காற்றில் பறக்கவிடப்பட்டு காத்திருந்த துருப்புக்கள் பாய்ந்து விழுந்தடித்துக் கொண்டு விமானத்துக்குள் இடம்பிடிக்க முண்டி அடித்து முன்னேறினர்.

விமானத்தின் கதவோரம் படுகாயமுற்ற மூவரும் தரையில் கிடத்தப்பட்டிருந்தனர். இவர்களில் ஒருவரை அவசரத்தில் உள்ளே ஏறிய சிப்பாய் மித்துவிட்டார். அவர் கையெடுத்துக் கும்பிட்டு அழுதார்.

விமானக்கதவு மூடப்பட்டு விமானம் ஓடுபாதையை நோக்கித்திரும்பியபோது, பத்திரிகையாளர்களிடம் முறையிட்ட துருப்புக்களில் பெரும்பாலானோர் அதே இடத்தில்- அன்றையக் கடைசி விமானத்திலும் இடம் கிடைக்காதமையினால் ஏமாற்றமடைந்த நிலையில் நின்றிருப்பதை அவதானிக்க முடிந்தது." என்றும் 'ஐலண்ட்' விபரித்துள்ளது.

# இரு பக்க நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மக்கள்!

அரசாங்கப் படையினரதும் அவற்றுடன் சேர்ந்து செயற்படும் இயக்கங்களினதும் முகாம்களைச் சூழ்ந்து வசிக்கும் மக்கள் அப்பகுதிகளிலிருந்து 500 மீட்டர் தூரத்திற்கு அப்பால் அகன்றுவிடுமாறு புலிகள் இயக்கத்தினர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் எச்சரிக்கை விடுத்தது தெரிந்ததே.

புலிகள் இயக்கத்தினர் இவ்வெச்சரிக்கை விடுத்ததிலிருந்து பொதுமக்கள் மத்தியில் பீதி நிலை உருவான அதேவேளை பாதுகாப்புத் தரப்பினர் உஷாரடைந்துள்ளனர்.

படையினரதும் பொலிஸாரினதும், படையினருடன் சேர்ந்து செயற்படும் இயக்கங்களினதும் முகாம்களைச் சூழ்ந்து வசிக்கும் மக்கள் தற்சமயம் செய்வதறியாது தவிக்கின்றனர். இப்பகுதிகளை விட்டு நகர்ந்தால் படையினரதும், பொலிஸாரினதும், படையினருடன் சேர்ந்து செயற்படும் இயக்கங்களினதும் வெறுப்பைத் தேடிக் கொள்வதோடு, பழிவாங்கலுக்கும் ஆளாக வேண்டிவரும் என்று மக்கள் பீதி கொண்டுள்ளனர்.

அதே வேளை அப் பகுதிகளை விட்டு வெளியேறாவிட்டால் புலிகள் இயக்கத்தினரின் வெறுப்புக்கும் உள்ளாகக்கூடும் என்று மக்கள் கவலை கொண்டுள்ளனர்.

புலிகள் இயக்கத்தினரின் வேண்டுகோளை ஏற்று குறித்த பகுதிகளை விட்டு யாராவது வெளியேறுகிறார்களா என்பதைப் பாதுகாப்புப் படையினர் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர்.

இதுவரையில் எவரும் புலிகள் இயக்கத்தினரின் எச்சரிக்கைக்கிணங்க தாம் இருந்த இடங்களை விட்டு அப்புறப்படவில்லை.

# படையினர் அறிவுறுத்தல்!

மட்டக்களப்பு-வாழைச்சேனைப் பகுதியிலுள்ள படையினர் சிலர் சமீப சில நாட்களாக ஜொனி வெடிகளில் அகப்பட்டுப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது விடயமாக தமக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின்படி கோரகல்லிமடுப் பகுதிக்குச் சென்று வரும் கிரானிலுள்ள படையினரைக் குறிவைத்துப் புலிகள் இயக்கத்தினர் ஜொனி வெடிகளைப் புதைக்க வைக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளதாகப் படையினர் கூறுகின்றனர்.

ஜொனி வெடிகளைப் புதைக்கும் நடவடிக்கைக்காக எல்.ரி.ரி.ஈ.யினர் பாடசாலை மாணவர்களையும் ஈடுபடுத்துகின்றனர். எனவே இத்தகைய நாசகார நடவடிக்கைகளில் அப்பாவிச் சிறுவர்களை ஈடுபடுத்துவதைத் தவிர்க்குமாறு எல்.ரி.ரி.ஈ.யினரைக் கேட்டுக் கொள்ளுங்கள் என்று வாழைச்சேனை பிரிகேடியர் சில்வா வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் திரு.எஸ்.கதிர்காமநாதனிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதுபோன்ற நடவடிக்கையில் எல்.ரி.ரி.ஈ.யினர் தமது அங்கத்தவர்களை ஈடுபடுத்துவது தமக்குப் பாதகமில்லை. ஆனால் அப்பாவிகளை இத்தகைய நாசகாரச் செயல்களில் ஈடுபடுத்துவதற்கு சமூகநல விரும்பிகள் எந்த வகையிலும் அனுமதிக்காது தடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# "யாழ் மக்களுக்கு பொதியில் நம்பிக்கை இல்லை!"
## பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு

"அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை உள்ளடக்கிய அரசியல் யாப்புக்கான வடிவமைப்பினை யாழ்.மக்கள் ஆதரிப்பதாகத் தெரியவில்லை. இவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் காலதாமதமே இதற்குக்காரணம்" என யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். பல்கலைக்கழகத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போதே இக்கருத்தை அவர் கூறினார்.

"கடந்த இரண்டரை வருடங்களாக யாழ் மக்கள், அரசாங்கத்தின் தீர்வுத்திட்டப் பொதியிலிருந்து அமைதிக்கான ஒரு வழி கிடைக்கும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் ஏமாற்றமே கண்டபலன். யாழ்ப்பாணத்திலுள்ள மக்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு தற்போது அமைதியான வாழ்க்கையே தேவைப்படுகிறது. தீர்வுப்பொதியைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை.

தீர்வுப்பொதியினை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் வீணான காலதாமதம் செய்கிறது. இவ்வாறு காலதாமதம் செய்வதனால் இது என்றுமே நடைமுறைக்கு வரப்போவதில்லை என்றே யாழ் வாழ் மக்கள் கருதுகின்றனர். தீர்வுத் திட்டத்தைப் பற்றி மக்களுக்கு விளக்கமளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரும் அதே வேளையில் அவற்றுக்குரிய மாற்றங்களைச் செய்வதற்கு அரசாங்கம் தவறி விட்டது" என்று பேராசிரியர் சுட்டிக் காட்டினார்.

# கடன் உதவி கிடைப்பதில்லை
## தோட்டத் தொழிலாளர்கள் அதிருப்தி

(கண்டி நிருபர்)

மலையக தோட்டத் தொழிலாளர்கள் பலருக்கும் கூட்டுறவு நம்பிக்கை நிதியத்தின் மூலம் வழங்கப்படும் கடன் தொகை உரிய முறையில் கிடைக்காமை காரணமாக பல்வேறு சிரமங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மலையக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் திரு ஜீ.சிவராஜ் இது குறித்து தமது கவலையையும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பிரதி அமைச்சர் திரு பெ. சந்திரசேகரன், ஜனாதிபதி ஆகியோருக்கும் உண்மையைத் தெளிவுபடுத்தி எழுதியுள்ளார்.

நம்பிக்கை நிதியத்தின் பேரில் நேரடியாக தொழிலாளர்களுக்கு கடன் தொகை கிடைக்காமையால் தாம் நிர்மாணிக்கக் கருதும் வீடுகளுக்கான பொருட்களை வாங்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவிக்கிறார். பல தோட்டங்களில் நம்பிக்கை நிதிய கடன் வீடமைப்புத் திட்டப் பணிகள் ஒன்றரை ஆண்டுகள் பூர்த்தியடைந்தும் கூட தொழிளார்கள் நம்பிக்கை நிதிய அமைப்பிடம் கடன் கேட்டால் அவர்கள் அதற்கு கொடுக்கும் விளக்கம் குறித்து தொழிலாளர்கள் பலரும் அதிருப்தியும் கவலையும் கொண்டிருப்பதாக திரு. சிவராஜ் கூறுகிறார்.

அண்மையில் மலையக தோட்டங்கள் சிலவற்றுக்குச் சென்றபொழுது இவ்வாறான ஒரு நிலையைக் கண்டு தானும் அதிருப்தியுற்றதாக அவர் மேலும் சொன்னார்.

# புகையிரத நிலையம் தகர்ப்பு!

மட்டக்களப்புக்கும் வாழைச்சேனைக்கும் இடையேயுள்ள தேவாபுர புகையிரத நிலையம் கடந்தவாரம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. காலை 10.30 மணிக்குப் பின் இரு குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து புகையிரத நிலையம் தகர்ந்து விட்டதாக ஊர் மக்கள் கூறுகிறார்கள். படைமுகாம் அமைந்துள்ள இடத்திலிருந்து சுமார் 200 மீட்டர் தூரத்திலேயே புகையிரத நிலையம் உள்ளது.

புலிகள் இயக்கத்தினர் இக்கட்டிடத்தைச் சேதப்படுத்த எதுவித வாய்ப்புமில்லையென்று அவ்வூர்வாசிகள் கூறும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இக்கட்டிடத்தைப் புலிகள் இயக்கத்தினர் பயன்படுத்தக்கூடும் என்று கவலை படையினரிடம் காணப்பட்டு வந்ததாகவும் சொல்லப்படுகிறது.

புகையிரதக் கட்டிடம் தகர்க்கப்பட்டது தொடர்பாக நிலைய அதிபர் ஏறாவூர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

# முஸ்லிம் ஆசிரியர் பற்றாக்குறை
## சட்ட நடவடிக்கைக்கு யோசனை

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க மத்திய மாகாண சபை உரிய நடவடிக்கை எடுக்காததையடுத்து சட்ட நடவடிக்கை எடுக்க இப்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

மலையகத்தைச் சேர்ந்த பெருந்தோட்டப் பாடசாலைகளில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க பல்வேறு தொழிற்சங்கங்களும் பாராளுமன்ற மலையக தமிழ் உறுப்பினர்களும் மத்திய மாகாண சபை உறுப்பினரும் எடுத்துக் கொண்ட அயராத முயற்சியின் காரணமாக இற்றைவரை சுமர் 1500 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய மாகாணத்தில்– குறிப்பாக கண்டி மாவட்டத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினால் முஸ்லிம் பாடசாலைகள் பலவும் பாதிக்கப்பட்டிருப்பதை மாகாண சபைக்கு பலர் சுட்டிக்காட்டியும் மாகாண சபை இது தொடர்பாக மௌனம் சாதிப்பதையும் அலட்சியமாக இருந்து வருவதையும் அரசியல் வாதிகள் பலரும் வேதனையோடு தெரிவிக்கின்றனர்.

ஊவா, சப்ரகமுவா, மேற்கு, வட மத்திய, வடமேல் மாகாண சபைகள் பலவும் தமது பிரதேசங்களில் இயங்கும் தமிழ்மொழி மூலப்பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க பல நடவடிக்கை எடுத்திருப்பதுடன் மத்திய மாகாணசபை மாத்திரம் இப்பிரதேச முஸ்லிம் பாடசாலைகள் தொடர்பாக கொண்டிருக்கும் அலட்சியம் குறித்து அரசியல்வாதிகள் பலரும் அதிருப்தியும் கவலையும் கொண்டுள்ள னர்.

மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், பதவி வெற்றிடங்கள் இல்லையெனக் கூறி இந்த ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியாமல் இருப்பதாகக் கூறுவது உண்மைக்குப் புறம்பானதெனவும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் றவூப் ஹக்கீம் முரசு நிருபரிடம் தெரிவித்தார்.

இது தொடர்பாக நீதி நியாயம் பெற மாகாண சபைக்கு எதிராக நீதிமன்றம் செல்ல இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

# அமைதியாக நடந்த விழா

திருக்கோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் (தேசிய) கல்லூரியின் பரிசளிப்பு விழா 4.09.1997 அன்று கல்லூரி மண்டபத்தில் அமைதியாக இடம்பெற்றது.

கலை நிகழ்ச்சிகளுடன் கூடிய விழாவாக இதனை நடத்துவதற்கு முன்னாள் அதிபர் செல்வி.இராஜேஸ்வரி தனபாலசிங்கம் திட்டமிட்டிருந்தாராயினும் திரு.தங்கத்துரை பா.உ. வின் கொலைச் சம்பவத்தில் அவரும் உயிரிழந்த காரணத்தால் புதிதாகப் பதவியேற்ற அதிபர் திருமதி சந்திரா பாலசுப்பிரமணியம் விழாவை அமைதியான முறையில் நடத்தி முடித்துள்ளார்.

மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் திரு.சுந்தரம் டிவகலாலா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தாஜி, கோயம்புத்தூர் இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத் தலைவர் சுவாமி தன்மயானந்தாஜி, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி அஜராத்மானந்தாஜி ஆகியோர் வருகை தந்து சிறப்பித்து மாணவிகளுக்கு பரிசில்கள் வழங்கி அருளுரைகளும் நிகழ்த்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து 5.9.97ல் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வளவில் அமைக்கப்பட்டுள்ள அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய விக்கிரக பிரதிஷ்டா வைபவத்தையும் சுவாமிஜிகள் நிறைவேற்றி வைத்தனர். ஆலய மகா கும்பாபிஷேகம் ஞாயிறன்று பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்களால் நடத்திவைக்கப்பட்டது..

# உழவு இயந்திரத் தாக்குதல்
## தடுக்க புதிய உத்தி!

கிழக்கில் புலிகளின் ஆளுகைக்குள் உள்ள பகுதிகளில் பொதுமக்களின் வாகனங்கள் சென்று வருவது வழக்கமாகும். அதேவேளை இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பொதுமக்கள் மாதிரி மாறு வேடத்தில் பாவனை செய்து மாற்று இயக்கத்தினரும், படையினரும் சென்று புலிகள் இயக்கத்தினர்மீது தாக்குதல் நடத்திய சில சம்பவங்கள் சமீபத்தில் நடந்துள்ளன.

இதனைத் தடுப்பதற்காக தற்சமயம் புலிகள் இயக்கத்தினர் புதிய உத்தியொன்றைக் கையாள்கின்றனர்.

உழவு இயந்திரத்தில் வருபவர்கள் புலிகளின் வீதிக் கண்காணிப்பு இடத்தை அடைந்ததும் இறங்கிச் சென்று அங்கே நின்று கொள்ள உழவு இயந்திரம் முன்னால் நகரும். உழவு இயந்திரம் மெதுவாக அவ்விடத்தைக் கடக்கும்போது மாறு வேடத்தில் யாரும் உள்ளே இல்லையென்பதை புலிகள் உறுதிப்படுத்தியபின்னர், உழவு இயந்திரத்தில் வருபவர்கள் பயணத்தைத் தொடரலாம்.

இதுவே தற்போது புலிகள் கைக்கொள்ளும் புதிய உத்தியாகும்..

சமீபத்தில் மட்டக்களப்பு-கொம்மாதுறை, தம்பானம் வெளி போன்ற பகுதிகளில் உழவு இயந்திரத்தில் மாறுவேடத்தில் சென்ற மாற்று இயக்கத்தினர் புலிகள் மீது தாக்குதல் நடத்தியது தெரிந்ததே.

# கிணற்றுக்குள் முண்டம்

மட்டக்களப்பு-சித்தாண்டியில் கடந்த 2.9.97 அன்று காலைக்கடன்களை முடிக்கச் சென்ற எஸ்.சின்னத்துரை (26) எனும் 2 பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் காணாமல் போய்விட்டார். விசாரித்ததில் படையினரே அவரைப் பிடித்துச் சென்றதாகக் கூறப்பட்டதாம்.

உடனே அவரது மனைவி படையினரிடம் சென்று கேட்டபோது, "விசாரணை செய்து விடுதலை செய்கின்றோம்," என்றனராம்.

குறிப்பிட்ட நாளன்று அவர் விடுவிக்கப்படவில்லை. மறுநாள் சென்று கேட்க "நாங்கள் அவரைக் கைது செய்யவில்லை" என்று கூறியிருக்கின்றனர். பின்னர் விளையாடச் சென்ற சிறுவர்கள் அங்குள்ள பாழுங்கிணறு ஒன்றில் தலையில்லாத சடலம் ஒன்று கிடப்பதாக கூறியுள்ளனர். இக்கிணறு படைமுகாமிலிருந்து 200 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளதாகவும் சொல்லப்படுகின்றது.

இது விடயமாக காணாமல் போனவரின் மனைவி ஏறாவூர் பொலிஸிலும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் முறைப்பாடு செய்துள்ளார்.


**ரெறாசோ ஷிப்ஸ்**
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு. கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

**மட்டக்களப்பு மாந்திரீகம்**
உங்கள் நிறைவேறாத பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சியும், வெற்றியும் பெறுவதற்கு மட்டக்களப்பு மாந்திரீக சக்தி உதவி புரியும். பரம்பரை வைத்திய நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் விபரங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். இரகசியம் வெளியாகாது.
**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD, NINTAVUR-21 SRI LANKA.

**BRIGHT**ன் தபால் மூலம் கல்வித்திட்டம்
மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத்தரப்படும் விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க
பெயர்: ..............................
விலாசம்: ..............................
**BRIGHT TRAINING CENTRE**
S-27, FIRST FLOOR, P.O. BOX. 162, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX COLOMBO 11. TEL: 434770

**விளம்பரப் பகுதி**

**மலையாள மாந்திரீகம்**
உலக மாந்திரீக சக்கரவர்த்தி பி.கே.சாமி J.D.G.A.N.& J.P ஸ்ரீதுர்க்கா தேவி மாந்திரீக உச்சாட பீடம்
இல.162, கொட்டாஞ்சேனைவீதி, மே.ஃபீல்ட் றோட், கொழும்பு-13.
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள்:
FAX-00941342464
TEL-00941431137
உள் நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:
342463, 344831

**விற்பனையாகின்றன!**
நவீன சிக்கன வெளியீடுகள்:
பொருளியல் கல்விக்கான வழிகாட்டி I+II
விலை ரூபா 270/-
* New syllabus for G.C.E. (A/L) and G.A.Q.
* Text book containing more than 600 model Questions and Answers (264 pages)
எல்லாம் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
தபால் மூலம் பெறக் காசுக் கட்டளை அனுப்ப வேண்டிய முகவரி:
Mr. A. SHANMUGALINGAM (ROYAL COLLEGE COLOMBO - 7) 55 A. ST. RITA'S ROAD, MOUNT LAVINIA.

**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
**ரிஷி. S.மணி**
மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
**S. MANI**
144 2/1, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு – 6.
T.P. 586218

**BRIGHT** SPOKEN ENGLISH SPOKEN SINHALA




ஆங்கிலம் - சிங்களம் பேச வேண்டும் என்று
**விருப்பம்!**
ஆனால், தவறாகப் பேசி விடுவோமோ என்ற
**தயக்கம்!!**
இது தானே உங்களு பிரச்சனை!
கவலையை விடுங்கள்!!
உங்களின் பிரச்சனையை நன்கு உணர்ந்த **BRIGHT** நிறுவன இயக்குனர் கலாநிதி **பொன்.சக்திவேல்** அவர்கள்




BRIGHT - SPOKEN ENGLISH - 150/-
BRIGHT - SPOKEN SINHALA - 90/-
ஆகிய நூல்களை வெளியிட்டு உள்ளார். தமிழ், சிங்கள, ஆங்கில உச்சரிப்புடன் ஆயிரத்திற்கு மேற்பட்ட நாளாந்த பாவனை வாக்கியங்களை உள்ளடக்கி உள்ளன. மேற்படி நூல்களை V.P.P. யில் பெற விரும்புவோர் இங்குள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து அனுப்பி வைக்கவும்.
நான் BRIGHT - SPOKEN ENGLISH / BRIGHT - SPOKEN SINHALA நூலை V.P.P. யில் பெற விரும்புகின்றேன்.
பெயர்: ..............................
முகவரி: ..............................
மேலதிக விபரங்களுக்கு:
**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S - 27, First Floor, P.o. Box : 162
Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770, 074 - 718592

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**
மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை.
இளம் சமுதாயதினர் மெலிந்து. கனவில் சக்தியிழந்து. ஞாபக மறதி. பயம். நடுக்கம். வெட்கம். சந்தேகம். ஏமாற்றம். பீதி. நித்திரயின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.
**SEXUAL DISORDERS**
தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும். 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில். தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.
**வெளிநாட்டில் வசிப்போருக்கு**
வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)
மனநிலை பாதிப்புக்கள். மனநோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா. தலையிடி. வாதம் பயோரியா. வெள்ளைபோதல். நீரிழிவு. கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேற்று இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.
**கொழும்பில் செப்டம்பர் 20 முதல் 30 வரை**
Dr. P. Arumugam, Ahamed Tourist inn, Bang Building No:10, Reclamation Road, (Entrance Bankshall St., Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383, 436390 கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101.
கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும்.
**ஓட்டமாவடி ஒக்டோபர் 4,5ம் திகதிகளில்**
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி,
**கல்முனையில் ஒக்டோபர் 11,12,13,14 திகதிகளில்**
T.M.M. பாமசியிலும் T.P. 065/29329
மற்ற நாட்களில் **Dr. P. Arumugam** No. 33, Tissa Weerasingam Sq., Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.


**1வது பிறந்தநாள் வாழ்த்து**



**பாத்திமா நஸ்றின்**
காத்தான்குடி 3ம் குறிச்சியில் வதியும் ஹுசைன் -நஜிமா தம்பதியினரின் செல்வப் புதல்வி பாத்திமா நஸ்றின் தனது முதலாவது பிறந்த தினத்தை 13.09.97 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை கட்டாரில் இருக்கும் அன்பு வாப்பா,உம்மா மற்றும் சவுதி மாமா, உம்மம்மா, மாமாமார் மாமிமார், சாச்சாமார் சாச்சிமார், கட்டாரில் தொழில்புரியும் ஹமீஸ் மாமா, நௌபர் மாமா, மற்றும் வாப்பா குடும்பத்தினர், பெரியம்மா, பெரியப்பாமார், அனைவரும் வல்ல அல்லாஹ்வின் அருளால் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# எரிந்த கப்பலும் விரியும் நெருக்கடியும்

**"நெருக்கடியை தருபவர்களுக்கே அதைத் திருப்பிக் கொடுக்கும்" பிரபாவின் உத்தியில் மற்றொரு கட்டமா?**

திருமலையில் உள்ள புல்மோட்டை கடற்பகுதியில் பாரிய தாக்குதல் ஒன்றை கடற்புலிகள் நடத்தி முடித்துள்ளனர்.

9.09.97 அன்று அதிகாலை 12.30 மணிக்கு தாக்குதல் ஆரம்பமானது.

ஆனால் துல்லியமான வேவு நடவடிக்கைகள் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்பாகவே ஆரம்பமாகிவிட்டன.

25.08.97 அன்றுதான் கப்பலில் இல்மனைட் ஏற்றும் வேலைகள் ஆரம்பமாகின. 30 ஆயிரம் மெற்றிக் தொன் இல்மனைட் ஏற்றிச் செல்வதாக இருந்தது.

புல்மோட்டைக் கடலுக்கு கப்பல் வந்து தரித்த உடனேயே கடற்படையின் விசேஷ கொமாண்டோக்கள் நான்கு கண்ணாடி இழைப்படகுகளில் கப்பலைச் சுற்றி வியூகம் வகுத்துக் கொண்டனர். ஒவ்வொரு படகிலும் குறைந்தது நான்கு கொமாண்டோக்கள் இருந்தனர்.

கடலிலும், தரையிலும் சண்டையிடும் விசேஷ பயிற்சி பெற்ற கொமாண்டோக்களே பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

கப்பலை சுற்றி நிற்பதுடன் ஒரு குறிப்பிட்ட பகுதிவரை ரோந்து சென்று சந்தேகப்படும்படியான படகுகளின் நடமாட்டம் இருக்கிறதா என்றும் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

அத்தனை கண்காணிப்பின் மத்தியிலும் கடற்புலிகளின் வேவுப் படையினர் எட்டத்தில் நின்று கப்பல் நிற்கும் இடம், அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளின் பலம் பற்றிய வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கடற்புலிகளின் வேவுப்படையின் மற்றொரு பகுதியினர் இல்மனைட் அகழப்படும் பகுதிகளில் இருந்தும் தகவல்களை திரட்டிக்கொண்டனர்.

கடலிலும், தரையிலும் நடந்த வேவு நடவடிக்கைகள் மூலம் கப்பல் தாக்குதலுக்கான பூரண விபரங்கள் திரட்டி முடிக்கப்பட்டன.

**கப்பல் எப்போது வருகிறது என்ற தகவல் முதல் கப்பல் எப்போது புறப்படுகிறது, கப்பலின் பெறுமதி என்ன? அதில் ஏற்றப்படும் 'இல்மனைட்' கனிப் பொருளின் பெறுமதி என்ன, கப்பல் எப்போது புறப்படுகிறது என்பதுவரையான சகல தரவுகளும் புலிகளிடம் இருந்தன.**

கப்பலுக்கு பாதுகாப்பாக நின்ற விசேஷ கடற்படைக் கொமாண்டோக்கள் முதல் மூன்று நான்கு நாட்கள் மட்டுமே கண்ணும் கருத்துமாக ரோந்துப் பணியிலும், கண்காணிப்பிலும் ஈடுபட்டனர்.

அதன்பின்னர் அவர்கள் விழிப்பு சற்றுக் குறையத் தொடங்கியது. கடலில் டைனமைட் வைத்து மீன்பிடிப்பதில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர். இரவு ரோந்தும் குறைந்துபோனது.

குறிப்பிட்டளவு இல்மனைட் கப்பலில் ஏற்றப்பட்ட பின்னர் தாக்குதல் நடத்தினால்தான் பாரிய நஷ்டம் ஏற்படும் என்று காத்திருந்தனர் கடற்புலிகள்.

கப்பலில் 27 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் இல்மனைட் ஏற்றப்பட்டது. மீதியை ஏற்றி முடித்துவிட்டு மறுநாளான 9.09.97 அன்று கப்பல் புறப்பட இருந்தது.

அதனால் 8.09.97 அன்று கப்பல் அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோருக்கு விருந்துபசாரம் நடைபெற்றது. அன்றிரவு 10 மணிக்கு விருந்துபசாரம் நடந்து முடிந்தது. அன்றுடன் கப்பல் புல்மோட்டைக்கு வந்து பதினாறாவது நாள் முடிந்திருந்தது.

கடற்புலிகளின் அணிகள் 9.09.97 அதிகாலை 12 மணிக்கு கடற்புலித் தளத்திலிருந்து புறப்பட்டன.

**கடற்புலிகளும், விடுதலைப்புலிகள் அணியின் கொமாண்டோப் பிரிவான சிறுத்தைப் புலிகள் அணியும் இருபதுக்கு மேற்பட்ட அதிவேகப் படகுகளில் விரைந்தனர்.**

9.09.97 அதிகாலை 12.10 மணிக்கு கப்பல் தரித்து நின்ற பகுதிக்குள் கடற்புலிப் படகுகள் ஊடுருவின.

கப்பலுக்கு காவலாக நின்ற கடற்படை விசேஷ கொமாண்டோக்கள் உஷாராக முன்னரே கடற்புலிப் படகுகள் அவர்களை சுற்றி வளைத்துவிட்டனர்.

அதேநேரம் கப்பலை நெருங்கிய கடற்புலிப் படகுகள் சிலவற்றில் இருந்து 20ற்கு மேற்பட்ட சிறுத்தைப் படையணியினரும், கடற்புலிகளும் கப்பலில் ஏறத் தொடங்கினார்கள்.

கப்பலில் தொங்கிய ஏணிகள் மூலமும், கப்பல் மேல் தளத்தில் கொழுவிப் பிடிக்கக் கூடிய முனைகளை கயிற்றில் கட்டி எறிந்து அக் கயிற்றில் தாவி ஏறியும் கப்பலுக்குள் புகுந்துவிட்டனர்.

கப்பலுக்குள் பாதுகாப்பாக ஐந்து இராணுவத்தினர் இருந்தனர். அத் தகவலை முன்பே பெற்றிருந்த கடற்புலிகள் கப்பல் மேல்தளத்தில் ஏறியதும் வேட்டுக்களை தீர்த்தனர்.

கப்பலுக்குள் 53 ஊழியர்கள் இருந்தனர். அதில் 33 பேர் இலங்கைத் தொழிலாளர்கள்.

கப்பலுக்குள் ஏறியதும் மேல் தளத்தில் காணப்பட்ட ஊழியர்களை படையினர் என்று நினைத்து கடற்புலிகள் அவர்களை நோக்கி வேட்டுக்களை தீர்த்ததில் நான்கு ஊழியர்கள் பலியாகினர்.

வெடிச்சத்தம் கேட்டபோது ஏனைய தொழிலாளர்களும், ஐந்து இராணுவத்தினரும் கப்பலின் கீழ்தளத்தில் இருந்தனர்.

வெடிச்சத்தம் கேட்டதும் பயந்துபோன


கடற்புலிப் படகு

தொழிலாளர்களிடம், பயப்பிடாதீர்கள், வெளியே எங்கள் ஆட்கள்தான் காவலுக்கு நிற்கிறார்கள். ஏதோ தவறுதலாக வெடி தீர்ந்திருக்கும்" என்று கூறிய இராணுவத்தினர் வோக்கி மூலம் தொடர்புகொண்டு பார்த்தனராம்.

அதற்கிடையே கப்பல் கடற்புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது. மேல் தளத்தில் நின்ற கடற்புலிகள் அங்கிருந்தபடியே சில தொழிலாளர்களின் பெயர்களைக் கூறி அழைத்தனர்.

"கப்பல் எரியப்போகிறது. வெளியே வந்து உயிர்தப்புங்கள். கெதியாக வாருங்கள்" என்று புலிகள் குரல் கொடுத்திருக்கிறார்கள்.

வெளியேவரப் பயந்த தொழிலாளர்கள் கீழ் தளத்தில் பதுங்கிக் கொண்டனர். இராணுவத்தினரும் எதிர்த்தாக்குதல் நடத்தாமல் அவர்களோடு இருந்துகொண்டனர்.

சித்திரவேல், பந்தலு உட்பட 13 தொழிலாளர்கள் மட்டுமே புலிகளின் அழைப்பை ஏற்று மேல் தளத்துக்கு வந்தனர்.

அதற்கிடையே என்ஜின் அறையை நோக்கி புலிகள் ஆர்.பி.ஜி.யால் தாக்கியதில் என்ஜின் அறை தீப்பிடித்து எரியத் தொடங்கியது. கப்பலின் உள்ளே இருள் சூழத் தொடங்கியது.

மேல் தளத்திற்கு வந்த 13 பேரையும் கடற்புலிகள் உடனடியாக தமது படகுகளில் ஏற்றினார்கள்.

கிட்டத்தட்ட 20 கடற்புலிகள் கப்பல் மேல் தளத்தில் நின்றனர். பெண் கடற்புலிகளும் அவர்களில் இருந்தனர்.

**படகில் ஏற்றப்பட்ட 13 பேரில் ஒருவர் தம்மை கொல்லப்போகிறார்களோ என்று பயந்துபோனார். "நான் தமிழன்" என்று புலிகளிடம் சொன்னாராம்.**

**அவர் அப்படிச் சொன்னதுதான் தாமதம் அவர் கன்னத்தில் விழுந்தது அறை. "சிறீலங்கா அரசுக்கு வேலை செய்யும் ஒவ்வொரு தமிழனும் துரோகிதான். கனி வளத்தை கிண்டிக் கொடுத்துக்கொண்டு தமிழன் என்றா சொல்கிறீர்?" என்று கேட்டாராம் அவரை அறைந்த கடற்புலி.**

கப்பலில் இந்தச் சம்பவங்கள் நடந்து கொண்டிருந்தபோது, ரோந்துப் படகுகளில் இருந்த விசேஷ கடற்படை கொமாண்டோக்கள் மீது கடலில் வைத்து விடுதலைப்புலிகளின் சிறுத்தை படையணி கொமாண்டோக்கள் தங்கள் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தனர்.

கடற்புலிப் படகுகள் நாற்புறமும் சுற்றி நின்று தாக்கியதால் கடற்படை கொமாண்டோக்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

ஒரு சிறிய ரோந்துப் படகை விடுதலைப் புலிகளின் சிறுத்தை அணி கொமாண்டோக்கள் கைப்பற்றினார்கள். இன்னொரு படகு பலத்த சேதமடைந்தது. அதில் இருந்த அவுட்போட் மோட்டரையும், துப்பாக்கியையும் கடற்புலிகள் கைப்பற்றினார்கள்.

கடற்படை விசேஷ கொமாண்டோக்கள் சிலர் கடலில் குதித்துவிட்டனர். மேலும் இரு படகுகள் பலத்த சேதமாகின.

பொழுது விடியத் தொடங்கியது. கப்பல் மேல் தளத்தில் நின்ற புலிகள் மீண்டும் ஒருமுறை கப்பலின் கீழ் தளத்தில் இருந்தவர்களை மேலே வருமாறு அழைத்துப் பார்த்தனர். அவர்கள் வராமல் போகவே கடற்புலிகள் கப்பலை விட்டு தம் படகுகளில் ஏறிக்கொண்டனர்.

அதிகாலை 12.30 மணிக்கு தமது தாக்குதலை ஆரம்பித்த கடற்புலிகள் அதிகாலை நான்கு மணிவரை கப்பலில் நின்றனர்.

கடற்புலிகள் தமது தாக்குதலை முடித்துக் கொண்டு சென்றபின்னர் கிட்டத்தட்ட நாலு ஐந்து மணிநேரத்தின் பின்னரே படையினரும், மேலதிக கடற்படையினரும் வந்து சேர்ந்தனர்.

அதற்கிடையே கப்பல் தொழிலாளர்கள் நீந்திக் கரைசேர்ந்தனர்.

**கப்பல் எஞ்சின் ரூமில் இருந்த வெளிநாட்டவரான மூன்று கனிஷ்ட பொறியியலாளர்கள் உட்பட ஐந்துபேர் எரிந்துகிடந்தனர். உள்நாட்டு தொழிலாளர்களில் ஒருவரது பெயர் முத்தரிப்பு (புல்மோட்டை) இன்னொருவர் ஷேக் அக்பர் (குச்சவெளி).**

உள்ளே இருந்த இராணுவத்தினரில் ஒருவர் மட்டுமே பலியானார்.

ஆனால் புலிகள் விடுத்த அறிக்கையில் கப்பல் மேல்தளத்தில் இருந்த ஐந்து இராணுவத்தினரும் பலியானதாக தெரிவித்திருந்தனர். கப்பலின் மேல்தளத்தில் வைத்து சுடப்பட்ட ஊழியர்களை இராணுவத்தினர் என்றே புலிகள் நினைத்திருக்கின்றனர்.

புலிகள் கைப்பற்றிச் சென்ற ரோந்துப் படகில் பலியாகிக் கிடந்த நான்கு விசேஷ கொமாண்டோக்களின் உடல்களையும் புலிகள் கொண்டு சென்றிருந்தனர்.

படகில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்ட 13 பேரும் கடற்புலிகளின் தளத்தில் இறக்கப்பட்டனர். அனைவரும் வீடியோ எடுக்கப்பட்ட பின்னர், கப்பல் தாக்குதலுக்கான காரணம் பற்றி அவர்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது.

**"எங்கள் கனிப் பொருள் வளத்தை ஏற்றி அனுப்பிவிட்டு, அதற்குப் பதிலாக ஆயுதம் வாங்குகிறார்கள். குறிப்பிட்ட கப்பலும் ஆயுதங்களை ஏற்றி வந்துவிட்டு, திரும்பிச் செல்லும்போது எங்கள் கனிப்பொருளுடன் செல்ல இருந்தது" என்று கடற்புலிகளால் விளக்கம் அளிக்கப்பட்டது.**

பின்னர் 13 பேரையும் தம் படகில் ஏற்றிக்கொண்டுவந்து நாயாறு கடற்பகுதியில் ஆழம் குறைந்த இடத்தில் இறக்கிவிட்டுச் சென்றுவிட்டனர்.

13 பேரில் ஒருவரான பந்தலு சிங்கள இனத்தவராக இருந்தமையால், கொக்கிளாய் இராணுவ முகாமுக்கு சென்று, இராணுத்தினருக்கு தாங்கள் யார் என்று கூறி உதவி பெற்றுக் கொண்டனர்.

கடற்புலிகளால் தாக்கப்பட்ட விசேஷ கொமாண்டோக்களின் படகு ஒன்று 9.09.97 காலையில் மூன்று கொமாண்டோக்களுடன் கரை சேர்ந்தது. மூவரும் பலியாகி இருந்தனர்.

கடற்சண்டையில் 10 விசேஷ கொமாண்டோக்கள் கொல்லப்பட்டதாக புலிகள் கணிப்புத் தெரிவித்திருந்தனர். எனினும் 7 விசேஷ கொமாண்டோக்களே பலியாகி உள்ளனர். அதில் நால்வரின் உடல்கள்தான் புலிகளால் கொண்டு செல்லப்பட்டிருந்தன.

**விசேஷ கொமாண்டோக்களிடம் இருந்த ஆர்.பி.ஜி.-01, அதற்கான ஷெல்கள்-06, பி.கே. எல்.எம்.ஜி-02, அதற்குரிய ரவைகள்-1400, எம்.56 ரகத் துப்பாக்கிகள்-06, ஒரு ரோந்துப் படகு என்பன கடற் புலிகளால் கைப்பற்றப் பட்டன.**

சண்டையில் கடற்புலிகள் தரப்பில் இரண்டுபேர் மட்டுமே சிறு காயங்களுக்கு உள்ளானார்கள்.

இத் தாக்குதல் தொடர்பாக அரசின் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிட்டன.

மிகப் பாதுகாப்பான கடற்பகுதிக்குள் தரித்து நின்ற கப்பல்மீது கடற்புலிகள் வெற்றிகரமாக தாக்குதல் நடத்திவிட்டு சென்றமை அரசுக்கு அதிர்ச்சியான விடயம் தான்.

இதேவேளை கப்பல் தாக்குதல் தொடர்பான செய்திகளை அமுக்குவதுபோல, அத் தாக்குதல் நடைபெற்ற மறுநாளே புளியங்குளம் நோக்கிய படை நகர்வு ஆரம்பிக்கப் பட்டது. அது பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன.

ஆயினும், வெளிநாட்டு கப்பல் நிறுவனங்களை திருப்திப்படுத்தவோ, நம்பிக்கை கொடுக்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**கப்பல்களுக்கு காப்புறுதி அளிக்கும் 'இன்ஸ்ரிரியூட் ஒஃப் இலண்டன்' என்னும் நிறுவனம் இலங்கையின் வடக்கு-கிழக்கு கடற்பகுதிகளில் இருந்து கப்பல்களை விலகிச் செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளது. இந்த அறிவுறுத்தலை மீறி தாக்குதலுக்கு உள்ளாகும் கப்பல்களுக்கு அந்த நிறுவனம் காப்புறுதி வழங்கமாட்டாது.**

இரண்டு வருடத்தின் முன்பாக புல்மோட்டையில் இல்மனைட் ஏற்றிக்கொண்டிருந்த ஜப்பான் கப்பல் ஒன்றை புலிகள் தாக்கினார்கள். அக் கப்பலின் பெயர் பிரின்ஸஸ் வேவ். அதாவது அலை இளவரசி. அக் கப்பலில் பணியாற்றிய மூன்று பிலிப்பைன்ஸ் மாலுமிகள் கப்பல் தீப்பிடித்ததால் காயமடைந்தனர். எனினும் தீ அணைக்கப்பட்டதோடு ஏற்றிய இல்மனைட்டுடன் அக்கப்பல் திரும்பிச் சென்றது.

நீரடி நீச்சல் மூலம் கப்பலை அடைந்த புலிகளே தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று அப்போது எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் தெரிவிக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

அத்தாக்குதலுக்கு புலிகள் உருமை கோரவில்லை. அரசும் புலிகள் தாக்கினர் என்று கூறாமல் கப்பலில் ஏற்பட்ட விபத்தே அதற்கு காரணம் என்பதுபோல காட்டிக் கொள்ளவே விரும்பியது.

புலிகள் தாக்குவதாகத் தெரிந்தால் வெளிநாட்டுக் கப்பல்கள் இங்கு வரத் தயங்கும்; வர்த்தகத் தொடர்புகள் நெருக்கடிக்கு உள்ளாகும் என்று கருதியே முன்னைய தாக்குதலை அரச தரப்பு பெரிதுபடுத்திக் காட்டவில்லை.

எதிர்பார்த்ததுபோல கப்பல் முற்றாக அழிக்கப்படாமையாலும், சர்வதேச கண்டனங்கள் ஏற்படலாம் என்று நினைத்ததாலும் புலிகளும் உரிமை கோராமல் விட்டிருந்தனர்.

ஆனால், சமீபகாலமாக வடக்கு-கிழக்கு கடற்பகுதியில் நடமாடும் கப்பல்களை தாக்குவோம் என்று புலிகள் கூறிவருகின்றனர். கொரிய கப்பல் ஒன்றையும் தாக்கியிருந்தனர்.

சர்வதேச நாடுகள் சில இலங்கை அரசுக்கு உதவிக்கொண்டு, ஒரு தலைப்பட்சமான கண்டனங்களையும், கருத்துக்களையும் வெளியிட்டு வருவது பற்றியும் புலிகள் வெறுப்படைந்துள்ளனர்.

எனவே-சர்வதேசக் கண்டனங்களுக்கு பயந்துகொண்டிருந்தால், அதே சர்வதேச உதவிகளோடு இலங்கை அரசு தன்னை பலப்படுத்திக் கொண்டுவிடும் என்ற முடிவுக்கு புலிகள் வந்து விட்டனர் என்றே தெரிகிறது.

**வடக்கு-கிழக்கு நிலவரங்கள், மக்களின் உயிரிழப்புக்கள் பற்றி வாயே திறக்காத சர்வதேச நாடுகள் சில கப்பல் தாக்குதல்கள் பற்றி தெரிவிக்கும் கண்டனங்களுக்கு செவி கொடுக்க தேவையில்லை என்பதே புலிகளின் நிலைப்பாடாக இருக்கிறது.**

இலங்கையில் போர் தொடர்ந்தால் இலங்கையுடனான வர்த்தகத் தொடர்புகளும் பாதிக்கப்படும் என்று குறிப்பிட்ட சில நாடுகள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதும் புலிகளின் நோக்கம்.

வடக்கு-கிழக்கில் உள்ள வளங்கள் சுரண்டப்படுவது பற்றி புலிகள் முன்னரும் கண்டனங்களை எழுப்பியிருந்தனர். தற்போதைய கப்பல் தாக்குதலுக்கும் அதனையே பிரதானமான காரணமாக கூறியுள்ளனர்.

ஆயினும், இலங்கை அரசின் வர்த்தக தொடர்புகளை நெருக்கடிக்கு உள்ளாக்குவது, தம் வர்த்தக நலன்களை முதன்மைப் படுத்தி அதன் பொருட்டு இலங்கை அரசுக்கு உதவும் நாடுகளுக்கு, போர் இங்கு தொடர்ந்தால் உங்கள் வர்த்தக நலனே இங்கு பாதிக்கப்படும் என்று உணர்த்துவது, வடக்கு-கிழக்கு கடற்பகுதி இலங்கை அரசின் ஆளுமைக்குள் இல்லை என்று காட்டுவது ஆகிய நோக்கங்களும் கப்பல் தாக்குதல்களின் பின்னணியில் உள்ளன.

'நெருக்கடியை தருபவர்களுக்கே அதைத் திருப்பிக் கொடுப்பது' என்பது பிரபாகரன் அடிக்கடி கூறும் ஒரு உத்தியாகும்.

வெளிநாட்டுச் சக்திகள் இலங்கை அரசுக்கு உதவுவது இரண்டு காரணங்களுக்காக.

**ஒன்று: இலங்கை ஒரே நாடாக இருந்தால்தான் தமது சந்தை வாய்ப்புக்களை இங்கு பரவலாக்கலாம்.**

**இரண்டு: இலங்கை அரசை கைக்குள் போட்டுக்கொள்வதன் ஊடாக இங்கு தமது வர்த்தகத் தொடர்புகளை விரிவாக்கலாம்.**

எந்த நலன் கருதி இலங்கை அரசுக்கு வெளிநாட்டு சக்திகள் உதவுகிறதோ, அந்த நலன்களே தொடரும் யுத்தத்தால் பாதிக்கப்படும் என்ற நெருக்கடியைக் கொடுப்பதுதான் பிரபாகரனின் உத்தி என்று தோன்றுகிறது.

கடலில் தம் பலத்தை மேலும் விரிவாக்கும் வகையில் புதிய கடற்புலி அணிகளையும் புலிகள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே கடல் நெருக்கடி தொடரும் என்றே தெரிகிறது.


தாக்கப்பட்ட கப்பல் மூழ்கியதாலும், ஏற்றப்பட்ட இல்மனைட் நாசமானதாலும் பல நூறு கோடி ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

ஏற்றப்பட்ட இல்மனைட்டின் பெறுமதி மட்டும் 102 கோடி ரூபாய்கள் என்று புலிகள் கூறியுள்ளனர்.

கப்பலின் பெறுமதி கிட்டத்தட்ட 100 கோடியே 30 இலட்சம் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. ■

நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



**தலைநகரில் உள்ள** தனியார் மருத்துவமனைகளில் தொட்டதற்கெல்லாம் எக்ஸ்ரேயும், இரத்தப் பரிசோதனையும் செய்யச் சொல்வதே வழக்கமாகிவிட்டது பாருங்கோ. நீரிழிவு நோயாளர் ஒருவர் நாரஹேன்பிட்டியிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனை ஒன்றில் இரத்த, சிறுநீரகப் பரிசோதனைக்கு உட்பட்டார். சீனி அளவை எக்கச்சக்கமாய் காட்டியது பரிசோதனை முடிவு. அந்த மனிதர் கதிகலங்கிப்போனார். பின்னர் வேறொரு மருத்துவமனையில் பரிசோதனை செய்தபோது நேரெதிரான முடிவு கிடைத்ததாம். பின்னதுதான் சரியானதாம். இரத்த, சிறுநீரக பரிசோதனைக்கு பேர்போனதாகக் கூறப்படும் மருத்துவமனையில் ஏன் இந்தக் கோளாறு? உஷாராகத்தான் இருக்கவேணும்!

**கொழும்பு-யாழ்** வான் பயணத்துக்கு ரிக்கெட் எடுக்க இரவிரவாக சனம் காத்துக்கிடக்கிறது. மறுபுறம் கொழும்பு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் முன்பும் சனம் காத்துக்கிடக்கிறது. அந்தச் சனம் வெளிநாடு செல்லக் காத்திருக்குதுகள். யாழ்ப்பாணம் செல்லுறதும் ஒன்றுதான்: வெளிநாட்டு வேலை பெற்றுச் செல்வதும் ஒன்றுதான்போல கிடக்கு. தரகர்கள் பையில் ஐயாயிரம் தள்ளினால் உடனடியாக யாழ் செல்ல கையில் ரிக்கெட். சம்பத்திய மார்க்கெட் நிலவரம் அதுதான். ரேட் மேலும் உயரும் வாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ளனவாம்.

**யாழ் குடாநாட்டில்** நீலக்கட்சி அலுவலகத்தில் வேலை வாய்ப்புப் படிவங்கள் விநியோகிக்கப்படுவது தெரிந்த சங்கதிதானே? இப்போது அதில் ஒரு சிறிய மாறுதலாம். நீலக்கட்சி உறுப்பினர் படிவம் வரும் முன்னால்: வேலை வாய்ப்பு விண்ணப்பப் படிவம் தரப்படுமாம் பின்னால். முதல் படிவத்தை நிரப்பிக் கொடுத்தால்தான் மற்றப் படிவம் ஏற்கப்படுமாம். சமீபத்தில் வேலை வாய்ப்புப் படிவம் கேட்டுப்போன ஒருவரிடம் கட்சிப் படிவத்தை நீட்டப்போக, நீட்டப்பட்டவர் கைநீட்டும் அளவுக்குப் போய்விட்டாராம். அங்கு நின்றவர்கள்தான் மத்தியஸ்தம் செய்து நீலக்கட்சி அமைப்பாளரை சேதமில்லாமல் காப்பாற்றினார்களாம்.

**தேனக அவலச் சாவுகள்** விடயத்தில் காக்கியார் கை நீள்கிறதாம். முன்னர் பெற்ற தொகைகளுக்காக விசாரணைகளில் மறைமுகமாகத் தலையிட்டுக் கடன் அடைக்கிறார்களாம். வெகுஜனப் பிரதிநிதிகள் அறிக்கை விட்டதோடு சரி. அவைக்கும் எலக்ஷன் காலத்தில் நிதி கொடுக்கும் வள்ளல்கள்தானே மாட்டுப்பட்டிருக்கினம்! வெகுஜனப் பிரதிநிதிகள் உண்மையானவை என்டால் போதிய தகவல்களை திரட்டி "இன்னார் இன்னார்மேல் நடவடிக்கை எடு. இன்னாரை சஸ்பெண்ட் பண்ணு" என்டு பட்டியல் போட்டு கேட்டிருக்கலாம். அது நடக்காவிட்டால் சனத்தை இறக்கி போராட்டம் நடத்தியிருக்கலாம். சும்மா விசாரணை கோரி சனத்துக்கு ஷோ அல்லோ காட்டுகினம்!

**பெண் காக்கி உடைக்காரர்** ஒருத்தருக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற கட்டிளம் பருவத்தான் ஒருத்தன் பகிடி பண்ணிப் போட்டு போனதைக் கண்டனான். பக்கத்தில் வந்த நண்பர் சொன்னார்: "ரெண்டு எழுத்து பெண் தரப்பாரிடம் உப்பிடி செய்திருந்தால் மோட்டார் சைக்கிள் மட்டும்தான் தப்பியிருக்கும்!"

**சிலாபம் முன்னேஸ்வரம்** கோயிலில் சகல அறிவிப்புக்களும் சகோதர மொழியில்தான் செய்யப்படுகிறதாம். வெளியிடங்களில் இருந்து செல்லும் சகோதர மொழி தெரியாத பக்தர்கள் முழிக்கிறார்களாம்.

**திருவான மலை** நகர தலைவர் அடுத்த தேர்தலுக்காக இப்போதே திருவிளையாடல் காட்டத் தொடங்கிப்போட்டார். மாதாந்தப் படியும் வேண்டாம் என்டு போட்டாராம். இது தமிழ்நாடு அரசியலில் இருந்து படிச்சப் பின்பற்றும் 'ஸ்டண்ட்'. அங்கும் செல்வி ஒரு ரூபாய் ஊதியம் வாங்கிக்கொண்டு ஊரைச் சாப்பிட்டது தெரியுமல்லோ?

**ரூபவாகினித் தலைவர்** இனப்பிரச்சனை பற்றி கச்சிதமான கருத்துக்களை கூறியிருக்கிறார். அத்தனையும் மெத்த நியாயமான பேச்சு. அக்குவேறு ஆணிவேறாய் புட்டுபுட்டு வைச்சுப்போட்டார். ஆனால் கேட்டுக்கொண்டிருந்த பார்வையாளர்கள்தான் பிடித்துக் கொண்டுவந்து இருக்கவைத்ததுபோல, கடனே என்று குந்தியிருந்த மாதிரித் தெரிந்தது.

இவ்வாரம் ஒரு கவிதை. கவிஞர் வாலி மொழிபெயர்த்த ஆங்கிலக் கவிதை.

"ஒரு மனிதன்
விழாமலே வாழ்ந்தான்
என்பது பெருமையல்ல;
விழுந்தபோதெல்லாம்
எழுந்தான்
என்பதுதான் பெருமை!"



படிப்பகம்

www.padippakam.com

1/8

# கொள்ளை ஆசையால் குறி தவறிய பாய்ச்சல்!

## இந்தியப்படை கொடுத்த 24 மணிநேர அவகாசம்!

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை


வரதராஜப் பெருமாள்

வேறு ஒரு இயக்கம் செய்யும் காரியத்தை அதன் பின்னணி, சரி பிழைகள் பற்றி ஆராயாமல் ஒரேயடியாக விமர்சிப்பதும், பின்னர் அதே காரியத்தை தாமே செய்வதும் இயக்கங்களின் வழக்கம்தான்.

தம்மால் முடியாததை இன்னொரு இயக்கம் செய்து முடித்துவிட்டதே என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடாகவும், பிறிதொரு இயக்கம்மீது விமர்சனம் வைத்தாக வேண்டும் என்ற ஒரே நோக்கம் கொண்டதுமாகவே அவ் விமர்சனங்கள் அமைகின்றன.

இதற்கு விதிவிலக்கான உதாரணங்கள் அதிகம் காணப்படவில்லை.

வன்னியில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நடத்த வசதியாக நிறுவப்பட்ட டொலர் பாம், கென்பாம் குடியேற்ற வாசிகளான காடையர்கள்மீது புலிகள் தாக்குதல் நடத்தினர்.

அத் தாக்குதலின் நியாயத்தை வெளிப்படுத்தி ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க வெளியீடான 'ஈழச் செய்தி'யில் கட்டுரை ஒன்று வெளியாகி இருந்தது.

சாதாரண சிங்கள மக்கள்மீது தாக்குதல் நடத்தப்படவில்லை.

குற்றவாளிகளாக கருதப்பட்ட காடையர்களுக்கு ஆயுதம் வழங்கி குடியமர்த்தினார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனே. அக்காடையர்கள்தான் தாக்கப்பட்டனர், கொல்லப்பட்டனர். அது தவிர்க்க முடியாததே என்று 'ஈழச் செய்தி'யில் தெரிவிக்கப்பட்டது.

'ஈழச்செய்தி' ஆசிரியராக அப்போதிருந்தவர் ரமேஷ். பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகமாக இருந்த பத்மநாபா ரமேசிடம் அவ்வாறான செய்திகளை வெளியிடுவது எங்களைப் பற்றிய தவறான எண்ணத்தை முற்போக்கு சக்திகளிடம் உருவாக்கிவிடும். எனவே இனிமேல் அவ்வாறான செய்திகளை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பின்னர் வடக்கு-கிழக்கு மாகாண சபையில் ஆளும்கட்சியாக இருந்தபோது திருமலையில் இருந்த சிங்களக் குடியேற்றங்கள்மீது தாக்குதல் நடத்தினார்கள்.

### இரகசிய உத்தரவு

திருமலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்மீது ஈ.பி.ஆர்.எல்.எஃப். நடத்திய தாக்குதலுக்கு இந்தியப் படையினர்தான் பின்னணியில் நின்றனர்.

திருமலையில் இந்தியப் படையினர் வந்திறங்கியதும் நகரில் இருந்த சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் திருமலை கோட்டைக்குள் இருந்த இராணுவ முகாமுக்குள் சென்றுவிட்டனர். கிட்டத்தட்ட மூவாயிரம்பேர் அவ்வாறு சென்றிருப்பர்.

அக் கோட்டைக்கு சமீபமாக இருந்த காவலரணில் நின்ற இந்தியப் படையினர் இரண்டுபேரை கோட்டைக்குள் இருந்து வந்து வெட்டிப்போட்டுவிட்டுப் போய் விட்டார்கள்.

இதனையடுத்து இந்தியப் படையினருக்கு சிங்கள குடியேற்றவாசிகள்மீது ஆத்திரம் ஏற்பட்டது.

திருமலையில் அப்போது நின்ற ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களையும், ஏனைய இயக்க உறுப்பினர்கள் சிலரையும் இந்தியப் படை அதிகாரி ஒருவர் அவசரமாக அழைத்தார்.

"திருமலை நகரிலும், நகரைச் சார்ந்த பகுதிகளிலும் உள்ள சிங்களக் குடியேற்றங்களை அப்புறப்படுத்துங்கள். உங்களுக்கு 24 மணிநேர அவகாசம் தருகிறேன். நெருப்பு வரக்கூடாது. வேட்டுச் சத்தம் கேட்கக்கூடாது. வேலையைக் காட்டுங்கள்"

இந்திய அதிகாரி கூறிய இரகசிய உத்தரவு அதுதான்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தைச் சேர்ந்த சங்கரன், கிறிஸ்டி ஆகியோரின் தலைமையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ இயக்க உறுப்பினர்கள் காரியத்தில் இறங்கினார்கள்.

திருமலையில் உள்ள கணேசன் சந்தியில் சிங்களவர் ஒருவருக்குச் சொந்தமான தேனீர்கடை ஒன்றிருந்தது.

தாக்குதலுக்கு முதலில் இலக்கானது அக் கடைதான். தேநீர் கடை நடத்திய சிங்களவரும், இன்னொரு சிங்களவருமாக இரண்டுபேர் கடைக்குள் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டனர்.

இச் செய்தி எங்கும் உடனடியாகப் பரவியதால் நகரில் இருந்த சிங்கள மக்கள் இலங்கை இராணுவ முகாம்களை நோக்கி உயிர்தப்ப ஓடினார்கள்.

சிங்கள மக்களின் வீடுகள் சிலவற்றுக்குள் புகுந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் கொளுத்திவிட்டு எறியும் கைக் குண்டுகளை வீசினார்கள்.

சில வீடுகளுக்குள் ஒளிந்திருந்த சிங்களமக்கள் சிலரை கழுத்தை வெட்டி விட்டு, மலசலகூட குழிக்குள் அவர்களது உடல்களைப் போட்டனர்.

அநுராதபுரச் சந்தியில் இருந்த ரமணி ஹாட்வேயார் என்னும் கடையும் தாக்கப்பட்டது. இதனை அறிந்த அநுராதபுரம் சந்தியில் இருந்த சிங்கள மக்கள் இடம் பெயர்ந்து சென்றனர்.

வில்லூண்டிச் சந்தியில் ராக்ஸி ஒன்றில் வந்துகொண்டிருந்த சிங்களப் பயணி ஒருவரும், சாரதியும் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

திருமலையில் அபேபுர, மக்கோ, லவ்லேன், விஜிதபுர, சிறிமாபுர ஆகிய பகுதிகளில் இருந்த சிங்கள மக்கள் 24 மணிநேரத்திற்குள் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர்.

இத் தாக்குதல் காரணமாக 20க்கு மேற்பட்ட சிங்கள மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்பட்டது. எனினும் பலரது உடல்கள் மலசலக் குழிகளுக்குள் வெட்டிப் போடப்பட்டதாலும், போதிய விசாரணைகள் நடத்தப்படாமையாலும் சரியான விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

### கொள்ளை ஆசை

இத் தாக்குதலில் பெரிதும் பலியானவர்கள் அப்பாவிச் சிங்கள மக்கள்தான். கலவரங்களை தூண்டிவிடும் காடையர்கள், மோசமான குற்றவாளிகள் மற்றும் மக்களுக்கு அடிக்கடி தொல்லைகொடுக்கும் சமூக விரோதிகள் ஆகியோர் தாக்குதலில் சிக்காமல், இலங்கை இராணுவ முகாம்களுக்கு தப்பி ஓடிவிட்டனர்.

அவர்கள் தப்பிஓட முடிந்தது எப்படி? என்பதற்கான காரணம் சுவாரசியமானது.

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தேவையானவர்களை இனம் கண்டு மடக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை.

அவர்களது கவனமெல்லாம் சிங்கள மக்கள் தங்கள் வீடுகளில் விட்டுச் செல்லும் உடமைகளைக் கொள்ளையடிப்பதில்தான் இருந்தது. அந்த ஆசை ஏற்பட்டதும் செய்ய வேண்டிய முக்கிய வேலையை மறந்து போனார்கள்.

பெறுமதியான பொருட்கள், மற்றும் தளபாடங்கள் போன்றவற்றை கொள்ளையிட்டு வாகனங்களில் ஏற்றிச்சென்றனர்.

கொள்ளையடிப்பதிலும், அகப்பட்டதைச் சுருட்டுவதிலும் அவர்கள் தாமதித்துக் கொண்டிருந்தமையால் குடியேற்றத் திட்டங்களுக்குள் இருந்த மோசமான சமூகவிரோத நபர்கள் சுலபமாக தப்பி ஓடிவிட்டனர்.

ஓடமுடியாமல் வீடுகளுக்குள் பதுங்கி இருந்த சாதாரண ஆட்கள்தான் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

சிங்கள குடியேற்றங்கள்மீது தாக்குதல் நடத்தப்படும் செய்தியை அறிந்ததும் திருமலை கடற்படை முகாமில் இருந்த கடற்படையினர் பாதுகாப்பு வழங்கும் நோக்கத்தோடு புறப்பட்டனர்.

அதனைக் கண்டுவிட்ட இந்தியப் படையினர் கடற்படை முகாமை நோக்கி தமது டாங்கிகளை நிறுத்திவைத்ததுடன், கடற்படை முகாம் வாயிலை நோக்கி எச்சரிக்கைக்காக ஒரு குண்டையும் தீர்த்தனர்.

அத்தோடு முகாமில் இருந்து புறப்பட்டு வரும் முயற்சியை கடற்படையினர் கைவிட்டு விட்டனர்.

கடற்படையினர் எச்சரிக்கை செய்யப்பட்டு தடுக்கப்பட்ட விவகாரத்தை இலங்கை அரசு பெரிதுபடுத்தாமல் விட்டதால் அது ஒரு பிரச்சனையாக மாறவில்லை.

இத்தாக்குதலில் முன்வரிசையில் நின்ற சிலர் பெரும் பணக்காரராகிவிட்டார்கள். அவர்களில் ஒருவர் சங்கரன். இவர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். திருமலை மாவட்ட பொறுப்பாளராக இருந்தவர்.

கொள்ளையடித்த பொருட்களை வைத்து திருமலையில் ஒரு மரவியாபாரக் கடையைத் திறந்தார் சங்கரன். கொஞ்சக் காலத்தின் பின்னர் சங்கரன், கிறிஸ்டி ஆகியோரும் வேறு சிலரும் கொள்ளையடித்த பணத்தில் கூட்டாகச், சேர்ந்து வெளிநாட்டுக்குப் போய்விட்டார்கள்.

இவர்கள் கொள்ளை ஆசையால் தப்ப விட்ட சமூகவிரோத நபர்கள் சிலர்தான் இந்தியப் படை வெளியேறிய பின்னர் மீண்டும் வந்து மக்களுக்கு தொல்லை கொடுத்தனர்.

இந்தியப் படையினர் தாமே நேரடியாக இறங்கியும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் சிலவற்றை அப்புறப்படுத்தினர்.

திருமலை கேணியடி தொடுவாய்ப் பிள்ளையார் கோவில் காணிக்குள் இடம்பெற்றிருந்த அத்துமீறிய குடியேற்றமும் இந்தியப் படையினரால் அப்புறப்படுத்தப்பட்டது.

இந்தியப் படையினர் திருமலையில் நின்றபோது திருமலையில் இருந்த சிங்கள மக்கள் பட்டினவீதியால் மட்டுமே நடமாட அனுமதிக்கப்பட்டனர். இலங்கை இராணுவத்தினரும் அவ் வீதியால் மட்டுமே சென்றுவர முடிந்தது.

### கொலையும் கண்டனமும்

யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஆனந்தராசா புலிகள் இயக்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை முன்னர் விபரித்திருந்தேன்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உட்பட சகல இயக்கங்களாலும் கடுமையாக விமர்ச்சிக்கப்பட்ட, கண்டிக்கப்பட்ட நடவடிக்கைகளில் அதுவும் ஒன்றாகும்.

1989ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால் ஒரு ஆசிரியர் சுட்டுக்கொல்லப்பட்டார். யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களால் பெரிதும் மதிக்கப்பட்ட சண்முகலிங்கத்தை ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் சுட்டுக் கொன்றனர்.

நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்திற்காக ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் யாழ் இந்துக் கல்லூரி அருகே சென்றபோது, புலிகள் இயக்கத்தினரால் தாக்கப்பட்டனர். ஈ.பி.ஆர்.எல்.எஃப். நாடாளுமன்ற வேட்பாளர் யோகசங்கரியை தீர்த்துக்கட்டவே புலிகள் திட்டமிட்டிருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் யோகசங்கரியை தரையில் படுக்கவைத்து காப்பாற்றினார்கள்.

யாழ் இந்துக்கல்லூரிக்குள் மறைந்து நின்றுதான் புலிகள் சுட்டிருக்கவேண்டும் என்று சந்தேகப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் இந்துக்கல்லூரியை நோக்கி சரமாரியாகச் சுடத்தொடங்கினார்கள்.

கல்லூரி மண்டபத்தில் இருந்த மாணவர்கள் கீழே படுத்து உயிர்தப்பிக் கொண்டனர். சில் மாணவர்கள் காயமடைந்தனர்.

ஆசிரியர் சண்முகலிங்கமும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச் சம்பவத்தை அடுத்து ஆசிரியர்களும், மாணவர்களும் கொதித்தெழுந்தனர். மாணவர்கள் பாடசாலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு தம் கண்டனத்தை தெரிவித்தனர்.

இதனையடுத்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் ஒரு அறிக்கை வெளியிட்டனர். ஈழமாணவர் பொதுமன்றம் என்ற பெயரில் அந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

### மறைமுக மிரட்டல்

மாணவர்களையும், ஆசிரியர்களையும் மிரட்டுவது போலவே அந்த அறிக்கை காணப்பட்டது. அறிக்கை பின்வருமாறு கூறியது:

"ஆசிரியர்களே! மாணவர்களே! நாம் மாணவர்களின் சீருடைகளில் இரத்தக்கறையையோ, கரும்பலகைகளில் துப்பாக்கித் துவாரங்களையோ, அல்லது வகுப்பறைகளில் ஆசிரியர்களின் சவப்பெட்டிகளையோ பார்க்க விரும்பும் வக்கிர உணர்வு படைத்தவர்கள் அல்ல.

அராஜக தமிழ்ழ விடுதலை புலிகள் தமது அதிகார வெறிப் போராட்டத்தில் ஏனைய இயக்கப் போராளிகளை, அப்பாவிப் பொதுமக்களை, ஆசிரியர்களை மாணவர்களை பணயம் வைத்துள்ளார்கள்.

அப் பணய நாடகத்தின் ஒரு அங்கமே யாழ் இந்துக்கல்லூரிச் சம்பவம். புலிகள் கல்லூரியில் நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாலேயே ஆசிரியர்கள் பலியாக வேண்டி ஏற்பட்டது. அப்பாவி ஆசிரியர்களும், மாணவர்களும் காயமடைய வேண்டி ஏற்பட்டது.

இக் கொலைச் சம்பவங்களுக்கு எதிராகப் பேரராடுவதும், ஆட்சேபனை கிளப்புவதும் ஆசிரியர் மாணவர்களது உரிமை. ஆனால் இக் கொலைகளின் சூத்திரதாரிகளுக்கு ஆதரவாக எம்மீது பழிசுமத்தி, பாடசாலைகளை பகிஷ்கரிக்க மாணவர்களை தூண்டிவிடுவதும், கல்வியைச் சீர்குலைப்பதும் அனுமதிக்க முடியாத செயலாகும்." என்று அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்துக்கு நாடாளுமன்றத் தேர்தலில் ஆதரவு மேலும் வீழ்ச்சியடைய இச் சம்பவமும் ஒரு காரணமாக அமைந்தது.

### பலத்த தோல்வி

1989 பெப்ரவரி 15ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம், இரா.சம்பந்தன், வி.ஆனந்தசங்கரி, சூசைதாசன், வி.யோகேஸ்வரன் ஆகியோர் தோல்வி கண்டனர். இவர்கள் அனைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாவர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணியின் பட்டியலில் போட்டியிட்ட ஏனைய இயக்கங்களால் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார் அ.அமிர்தலிங்கம் என்று கூறியிருந்தேன் அல்லவா.

தேர்தலில் தோல்வி கண்ட அமிர்தலிங்கம் அவர்கள் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பு இருந்தது.

மிகச் சொற்ப வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றி வாய்ப்பை தவறவிட்டமையால், தேசியப் பட்டியல் மூலம் அவர் பாராளுமன்றம் செல்லவேண்டும் என்றும், பாராளுமன்றத்தில் அவர் குரல் ஒலிப்பது அவசியம் என்றும் கூட்டணியினரும் நினைத்தனர்.

இதனை அறிந்துவிட்டார் வடக்கு-கிழக்கு முதலமைச்சர் வரதராஜப் பெருமாள். அமிர்தலிங்கத்தை எப்படியாவது தோல்வி காணச் செய்யவேண்டும் என்பதில் ஒற்றைக்காலில் நின்றவர் அவர்தானே.

அமிர் பாராளுமன்றம் சென்றுவிட்டால் அவரது பேச்சுக்களும், செய்திகளும் பத்திரிகைகளில் மறுபடி பெரிதாக வரத் தொடங்கிவிடும். தனது குரல் அமுங்கி விடும் என்று பயந்துபோனார் வரதராஜப் பெருமாள்.

இனியும் மறைமுக முயற்சிகள் சரிப்பட்டு வராது என்று நேரடியாகவே தாக்குதலில் இறங்கினார் பெருமாள்.

"மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் பின்னகதவு வழியாக பாராளுமன்றத்துக்குள் நுழையப் பார்க்கிறார்கள்" என்று பேட்டி கொடுத்தார் பெருமாள்.

அமிர்தலிங்கத்தை மேலும் நெருக்கடியில் சிக்கவைக்க, தேசியப் பட்டியல் மூலம் மலையகத் தமிழர் ஒருவருக்கு இடம் தருவதே தமது விருப்பம் என்றும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அறிக்கை விட்டது.

அமிர்தலிங்கம் மனம் உடைந்து போனார். தேசியப் பட்டியல் மூலம் எம்.பி.யாகும் எண்ணத்தை கைவிட்டு விட்டார். (தொடர்ந்து வரும்)

## புலிகளின் இசை நிகழ்ச்சியும்-கொரிய மாலுமிகளும்



↑ புலிகள் இயக்கத்தினரால் 08.07.97 இல் மொ ரன் பொங் என்னும் கப்பல் கடத்திச் செல்லப்பட்டது. அக் கப்பலில் இருந்த கொரிய மாலுமிகளும் ஊழியர்களும் புலிகளின் முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். அவர்களை மகிழ்விக்க புலிகள் இயக்க இசைக்குழுவால் நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சியில் கொரிய மாலுமி ஒருவர் பாடுகிறார். ஏனையோர் இசை நிகழ்ச்சியை ரசித்துக் கேட்கின்றனர். பின்னர் இவர்கள் அனைவரும் புலிகளால் விடுவிக்கப்பட்டமை தெரிந்ததே.



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது- இராஜதந்திரி

# முன்னுதாரணம் காட்டியுள்ள பிரிட்டன் அணுகுமுறை

டயானா இளவரசியின் பிரிவால் துயரக்கடலில் மூழ்கியிருந்த பிரிட்டன், உலகின் கவனத்தைக் தன்பால் ஈர்த்திருந்தது.

பூகோளம் முழுவதுமே டயானாவின் அந்திமச் சடங்குகளை நோக்கியிருந்தது.

எனவே டயானாவின் இறுதிச்சடங்கு உலகில் அவர் எவ்வளவு தூரம் ஒரு பிரபலம் மிக்க பெண்ணாக வாழ்ந்து மறைந்தார் என்பதைப் பறைசாற்றியிருந்தது.

டயானாவின் மறைவு குறித்த செய்திகளை வெளியிட்ட அதேசமயம் அங்கு நிலவும் அதிகாரமற்ற முடியாட்சியின் தன்மை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிட்டிஷ் அரசுக்கும் முடியாட்சிக்குமுள்ள தொடர்புகள் என்பவை குறித்த தகவல்களும் மரணச் சடங்குச் செய்திகளுடன் இரண்டறக் கலந்து வெளியாகியிருந்தன.

டயானாவின் மரணத்தினால் உலகின் கவனத்தை ஈர்த்திருந்த பிரிட்டன், தற்சமயம் அதன் அரசியல் நடவடிக்கையொன்றின் மூலமாகவும் உலக கவனத்தைப் பெற்றுள்ளது.

ஸ்கொட்லாந்துப் பிரதேசத்தின் பாராளுமன்ற நிர்வாகத்தை அங்கீகரித்து, அப்பிரதேசத்திற்கு கூடுதல் சுயாட்சி வழங்கப்பட்டுள்ளதே அந்த அரசியல் நடவடிக்கையாகும்.

உலகில் பெரும்பாலான நாடுகளைத் தனது கொடியின் கீழ் கொண்டிருந்த நாடே பிரிட்டனாகும்.

நாளடைவில் தனது ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளுக்கு சுதந்திரத்தை வழங்கி, இந்த ஆண்டில் ஹொங்கொங் நாட்டையும் சீனாவிடம் பிரிட்டன் மீளக் கையளித்திருந்தது.

எனவே தனது ஆதிக்கத்திலிருந்து கடல் கடந்த நாடுகளுக்கு சுதந்திரத்தை வழங்கியுள்ள அதேசமயம், பிரிட்டனிலும் அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொள்வதில் பிரிட்டிஷ் அரசு முன்வந்துள்ளது.

**இதனடிப்படையில் ஸ்கொட்லாந்து பிரதேசத்துக்கெனப் புறம்பான பாராளுமன்றமும், அப்பிரதேச நிர்வாகத்தின் கீழ் வரி சேகரிப்பதற்கான அதிகாரமும் சர்வஜன வாக்கெடுப்பொன்றின் கீழ் கடந்த வாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.**

ஐக்கிய இராச்சியம் என்றே பிரிட்டன் அழைக்கப்படுகின்றது. (United Kingdom)

**இந்த ஐக்கிய இராச்சியம் என்ற சொற்பதம் வேல்ஸ், இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து ஆகிய மூன்று பிரதேசங்களை ஒன்றிணைப்பதாகவே இருக்கின்றது.**

இம் மூன்று பிரதேசங்களும் பிரிட்டன் என்ற ஒரு நாட்டின் கிழ் அடங்குகின்ற போதிலும் வெவ்வேறு தனித்துவங்களை- கலாசார, பழக்க- வழக்கங்களை, வரலாற்று ரீதியாகக் கொண்டுள்ளன. இந்நிலையில் தமது தனித்துவங்களைப்பேணும் விதத்திலேயே இவற்றின் சுயநிர்ணயம் பிரிட்டனில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்தின் அதிகாரங்கள் பலவும் பிரிட்டிஷ் அரசின் ஆதரவுடன் சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள அதே சமயம், வட அயர்லாந்துப் பிரச்சனையையும் தீர்க்கக்கூடிய பேச்சுக்களும், அரசியல் அணுகுமுறைகளும் தொடர்ந்து வருகின்றன.

அண்மையில் டயானா இளவரசி இறந்தபோது வட அயர்லாந்தின் ஐரிஷ் குடியரசு இராணுவமும் தனது அனுதாபச் செய்தியை வெளியிட்டிருந்தது.



பிரிட்டன் பிரதமர்-வெற்றிப் பெருமிதம்

அச் செய்தியில், "டயானா இளவரசி எமது தாக்குதல் பட்டியலில் இருக்கவில்லை. எனவே அவருக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகிறோம்." என்று ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் அரசியல் பிரிவான 'ஸின்பெயி'னின் தலைவர் ஜெரி அடம்ஸ் கூறியிருந்தார்.

இது தவிர அண்மையில் பிரிட்டிஷ் அரசுடன் வட அயர்லாந்துப் பிரச்சனை தொடர்பாக பேச்சுவார்த்தைகளுக்கு இணங்கியிருந்த ஐரிஷ் குடியசு இராணுவம், போர் நிறுத்தத்துக்கு முன் வந்திருந்தது.

ஆயினும் ஐரிஷ் பிரச்சனை தீர்க்கப்படும்வரை எவ்விதத்திலும் ஆயுதங்களைக் கைவிடப்போவதில்லை என்பதையும் ஐ.ஆர்.ஏ. அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளது.

**இந்நிலையில் சர்வதேச அரங்குகளில் சிக்கலான அரசியல் நிலவரம் தொடர்பாக நிகழும் ஒவ்வொரு சம்பவமும், மற்றும் அரசியல் ரீதியான அணுகுமுறைகளும் இலங்கைக்குப் படிப்பினையின்மேல் படிப்பினையாக தொடர்ந்து இருந்து வருகின்ற போதிலும், அவற்றை இலங்கையின் ஆட்சியாளர்கள் கருத்திற்கொள்வதாக இல்லை.**

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்திருந்தது. அதன்பின்னர் நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபைத்தேர்தல்களிலும் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றிபெற்றிருந்தது.

இத் தேர்தல்களில் சமாதானம், இனப்பிரச்சனைத் தீர்வு என்ற கோஷங்களே பொதுஜன ஐக்கிய முன்னணியினால் முன்வைக்கப்பட்டு, அவற்றுக்கு மக்களின் ஏகோபித்த ஆதரவும் கிடைத்திருந்தது. ஆனால் அரசு இப்போது மக்களின் கண்களுக்கே மண்தூவுவது போல தெருக்கூத்துக்கள், நாடகங்கள் மூலம் மக்களிடம் சமாதானச் செய்திகளை எடுத்துச் செல்வதையே அவதானிக்கமுடிகின்றது.

கடந்தகால அரசியல் நிலவரங்களையும், இனரீதியான கசப்பான அனுபவங்களையும் நோக்கும்போது, பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்குள் பேரினவாதிகள் என்ற கூட்டம் எண்ணிக்கையில் சிறுபான்மையாகவே இருந்துள்ளது. இருந்தபோதிலும் அதன் நடவடிக்கைகள், தந்திரங்கள் என்பன மிகவும் உறுதியானவையாகவும், பூதாகரமானவையாகவுமே இருந்துவந்துள்ளன.

**நாட்டின் பெரும்பான்மை மக்கள் சமாதானத்துக்காகவும், இனப்பிரச்சனைத் தீர்வுக்காகவும் தமது ஆணையை ஐயம் திரிபற வழங்கியுள்ள நிலையில் அவர்களிடமே சமாதானத்தின் தேவையையும், இனப்பிரச்சனைத் தீர்வையும் பற்றி உதட்டளவில் மட்டும் பேசும் ஆட்சியாளர்களின் போக்கு வேதனையானதாகவும், வேடிக்கையானதாகவுமே இருக்கின்றது.**

இந்நடவடிக்கையின்மூலம் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மக்களல்ல, அரசாங்கமே பின்னிற்பது தெளிவாகியுள்ளது. அத்துடன் ஆட்சியிலிருப்போரின் இழுத்தடிப்பே அவர்களது தெருக்கூத்தாகவும் பிரதிபலிப்பதையே நோக்க முடிகின்றது.

அரசியல் தீர்வு எவ்வாறானதாக அமையவேண்டுமென்பதில் தெளிவில்லை. ஆனால் அடுத்தாண்டுக்கான இராணுவச் செலவினம் மேலும் பல கோடிகள் உயரலாம் என்று நீதி, அரசியலமைப்பு விவகார துணை நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் வரவு செலவுத்திட்டம் பெருமளவு ஒதுக்கீட்டை இராணுவச் செலவுக்கே மேற்கொண்டு வருகின்றது.

இதன் காரணமாக இராணுவ நடவடிக்கைகளும் அதிகரித்தவண்ணமே செல்கின்றனவே தவிர அரசியல் அணுகுமுறைகள் பின்னடைந்தே வருகின்றன.

இராணுவச் செலவினம் என்று கோடி கோடியாகப் பணம் ஒதுக்கப்படுகின்றபோதிலும், அந்த ஒதுக்கீட்டில் பெரும்பாலானவை நஷ்டத்திலேயே முடிவடைகின்றன.

இராணுவச் செலவாக ஒதுக்கப்பட்ட பெருந்தொகைப்பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட விமானங்கள், டாங்கிகள், கப்பல்கள் என்பவையே போரில் சேதமாக்கப்பட்டு வருகின்றன.

இவைதவிர பாதுகாப்புச் செலவாக ஒதுக்கப்படும் பணத்தில் ஒரு பகுதி உயிரிழக்கும் ஆயிரக்கணக்கான படைவீரர்களுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளாகவும் செல்கின்றன.

இந்நிலையில், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர, யுத்தத்தைப் புரிவோருடனேயே பேச வேண்டுமே தவிர வேறு சக்திகளோடல்ல.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் அரசியல் அபிலாஷைகள் ஆட்சியாளர்களால் தட்டிக்கழிக்கப்பட்டுவரும் அதேசமயம், அப்பிரதேசத்தில் இடம்பெறும் யுத்தமும் அரசியல் அணுகுமுறைகளுக்கு இடையூறாகவே இருக்கின்றது.

**இந்நிலையில் இலங்கை அரசு ஜனநாயகம் பற்றி எவ்வளவுதான் பேசினாலும், ஒரு முதிர்ச்சியுடைய அரசியல் நடவடிக்கையைக் கட்டியெழுப்பி இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியாதிருப்பதையே காணமுடிக்கின்றது.**

எனவே ஸ்கொட்லாந்துக்கு சுயநிர்ணயம் என்பது இலங்கைக்கு மற்றுமொரு படிப்பினையாகவும், முன்னுதாரணமாகவும் இருக்கின்றது என்பதை மட்டுமே சுட்டிக்காட்ட முடியுமே தவிர, அதனை ஒரு முன்மாதிரியான அரசியல் நடவடிக்கையாகக் கொள்வது ஆட்சியாளர்களிடமே தங்கியிருக்கிறது.

# ரணில் வீசும் பந்தும் திருப்பி அடிக்கும் அரசும்

"புலிகளுடன் அரசு பேசவேண்டும்" என்று ரணில் கூறிவருகிறார்.

"புலிகளுடன் பேச ஐ.தே.கட்சியுடன் அரசியல்தீர்வு விடயத்தில் இணக்கம் காணப் படவேண்டும்." என்று ஜனாதிபதி கூறியிருக் கிறார்.

இரு தரப்புமே புலிகளுடன் பேசியாக வேண்டும் என்பதை மறுக்கமுடியாத நிலையில் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைக்கு பின்னர் புலிகளுடன் பேசும் அவசியமே இல்லை என்று அரசு கூறியது.

'அரசியல் தீர்வு யோசனைகளைக்கூட புலிகளுக்கு அனுப்பிவைக்கப்போவதில்லை' என்றும் திட்டவட்டமாக அரச தரப்பு தெரிவித்திருந்தது.

ஆனால் இப்போதோ "அரசியல் தீர்வு பற்றி புலிகளுடன் பேசத் தயார், ஆனால் தீர்வுத்திட்டம் இறுதியான பின்னர்தான் பேசலாம்" என்று ஜனாதிபதிகூட கூறியிருக் கிறார்.

**'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ்ப்பாணத்தில் வெற்றிக் கொடி பறக்கவிடப்பட்டபோது ஐ.தே.கட்சியும் படையினருக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் முண்டியத்தது என்பதை மறக்க முடியாது.**

என்றாலும் தம்மால் முடியாத காரியத்தை பொதுஜன முன்னணி அரசு செய்து முடித்துவிட்டதே என்ற வருத்தம் உள்ளூர ஐ.தே.கட்சிக்கு அப்போது இருந்தது.

யாழ் குடாநாட்டில் யுத்தம் நடத்தப்பட்ட முறையையும், அங்கு நடைபெற்ற மாபெரும் மனித இடம்பெயர்வையும் சுட்டிக்காட்டக் கூட ஐ.தே. கட்சி முன்வரவில்லை. அப்படிச் செய்தால் யாழ் வெற்றியைத் தொடர்ந்து தென்னிலங்கையில் ஏற்பட்ட வெற்றிப் பெருமிதம் தமக்கு எதிராக திரும்பிவிடுமோ என்றுதான் ஐ.தே.கட்சி மௌனமாக இருந்தது.

வடக்கு-கிழக்கில் யுத்தம் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்டுவருகின்ற பாதிப்புக்கள், குறிதவறிய குண்டுவீச்சு சம்பவங்கள், பாலியல்வல்லுறவுகள், மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பாக இன்று வரை ஐ.தே.கட்சி வாய்திறப்பதே இல்லை.

"தமிழர்களுக்காக அதிகம் கவலைப்படுகிறார்கள், புலிகள் வெற்றிகொள்ளப்படுவதை விரும்புகிறார்கள் இல்லை" என்ற அபிப்பிராயம் சிங்கள மக்களிடம் ஏற்படாத வகையில் நடந்துகொள்ளத்தான் ஐ.தே.கட்சி விரும்புகிறது.



**முல்லைத்தீவு முகாம் தாக்குதல், ஜயசிக்குறுய் படையினர்மீதான புலிகளின் தாக்குதல்கள் ஆகியவற்றின் பின்னர்தான் புலிகளுடன் பேசவேண்டும் என்ற கோரிக்கையை ஐ.தே.கட்சி முன்வைக்க ஆரம்பித்தது.**

அதுகூட "போர் மூலம் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். அது முடியாவிட்டால் பேச்சு மூலம் தீர்க்கவேண்டும்" என்றுதான் கூறுகிறார்கள்.

அந்தக் கூற்றில் மறைந்துள்ள உட்பொருள் என்ன? போரில் அரசால் வெல்ல முடியவில்லை. அதுதான் பேச்ச் சொல்லுகிறோம். அதாவது இந்த அரசால் போரில் வெல்ல முடியவில்லை என்பதை நிரூபிக்க விரும்புகிறார்களே தவிர, போர் என்ற வழிமுறையே தவறானது என்று கூறவில்லை.

**இனப்பிரச்சனை ஒரு அரசியல் பிரச்சனையாகும். இதற்கு அரசியல் தீர்வு தான் ஒரே வழியாகும். இராணுவத் தீர்வு என்பது தவறான வழிமுறையாகும். இந்த வழிமுறை ஒருபோதும் வெற்றியைத் தராது என்று புரிந்துகொண்டு பேசுகிறவர்களாக, மக்களுக்கும் அதனை புரியவைக்கிறவர்களாக ஐ.தே.கட்சியினர் இல்லை.**

**போர் மூலமும் தீர்வு காணலாம் தான், ஆனால் இந்த அரசால் அது முடியவில்லையே, அதனால்தான் புலிகளுடன் பேசச் சொல்லுகிறோம் என்ற அர்த்தத்தோடுதான் ஐ.தே. கட்சி பேசுகிறது.**

அரசும், புலிகளும் பேச்சை ஆரம்பித்து அப் பேச்சுவார்த்தை தோல்விகண்டு விட்டால், உடனே ஐ.தே.கட்சி என்ன சொல்லும்?

இந்த அரசுக்கு போர் நடத்தவும் தெரியவில்லை. பேச்சுவார்த்தை மூலம் புலிகளை வழிக்கு கொண்டுவரவும் தெரியவில்லை என்று கூறிவிடலாம்.

அதுமட்டுமல்ல, போர் நிறுத்தம் தேவையில்லை. போர் நடந்து கொண்டிருக்கும் போதே பேச்சும் நடத்தலாம் என்பதுதான் ஐ.தே.கட்சியின் நிலைப்பாடாகும்.

படையினரின் அதிருப்தியையும் சம்பாதிக்காமல், புலிகளை போரில் தோற்கடிக்க தடையாக இருக்கிறார்கள் என்று சிங்கள மக்களிடமும் அபிப்பிராயம் ஏற்பட்டு விடாமல், நீங்கள் சொல்லித்தானே போரை நிறுத்தினோம், இல்லாவிட்டால் போரில் ஒரு கரை கண்டிருப்போம் என்று அரசும் சொல்ல வாய்ப்பில்லாமல் இருக்கக்கூடியதாக தனது நிலைப்பாட்டை முன்வைத்திருக்கிறது ஐ.தே.கட்சி.

போரின் மத்தியில் பேச்சு நடத்துவது என்பது காரிய சாத்திமில்லாத ஒன்று என்பது ஐ.தே.கட்சிக்கு தெரியாமல் இல்லை.

பேச்சு ஆரம்பித்தால்கூட அப்பேச்சு முறிவுக்கு போர் நிலவரங்கள் வழிவகுக்கும் என்ற நம்பிக்கையோடுதான் ஐ.தே.கட்சியினர் அரசை பேச்சுக்கு அனுப்பிவைக்க விரும்புகின்றனர்.



**புலிகளின் பலமும், தம்மை போர் மூலம் ஓரம் கட்டுதல் சாத்தியம் இல்லை என்பதை கள நிலவரங்கள் மூலமாக புலிகள் நிரூபித்துள்ளதையும் தனது அரசியல் நோக்கங்களுக்கு சாதகமாக பயன்படுத்தவே ஐ.தே.கட்சி விரும்புகிறது.**

அரசியல் தீர்வு பற்றிய தனது திட்டவட்டமான முடிவைத் தெரிவிக்காமல் நழுவிச் செல்லவும், இலங்கையின் எதிர்க்கட்சி தான் தீர்வுக்கு தடை என்ற அபிப்பிராயம் உலக அரங்கில் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவுமே ஐ.தே.கட்சி முயன்று வருகிறது.

போரில் வெற்றி பெற்று, அந்த வெற்றிக் கொடியின் நிழலில் அடுத்த தேர்தலைச் சந்திக்க திட்டமிட்டுள்ள அரசு புலிகளுடன் பேச முன்வராது என்பதும் ஐ.தே.கட்சிக்கு தெரியும்.

அதனால்தான் 'புலிகளுடன் பேச வேண்டும்' என்று கூறி பொதுஜன முன்னணி அரசின் விக்கெட்டுக்கு பந்து வீசிப்பார்த்தார் ரணில்.

ஆனால் அரச தரப்பும் அப்படி ஒன்றும் சுலபமாக விக்கெட்டை பறிகொடுக்கக்கூடியதல்ல. ரணில் வீசிய பந்தை அவர்களை நோக்கியே திருப்பி அடித்திருக்கிறது.

'புலிகளுடன் பேசவேமாட்டோம்' என்று சொன்னால் 'சமாதான இமேஜ்' சேதமாகும். அதுதவிர போரில் புலிகளின் பலம் நிருபிக்கப்பட்டுவருவதால் "அவர்களுடன் பேசவே தேவையில்லை, வெற்றி பெற்றே தீருவோம்" என்று கூறினால் அதனை வரட்டுப் பிடிவாதம் என்றே வெளியுலகம் கருதும்.

அதனால் பேசமாட்டோம் என்று கூறாமல், ஐ.தே.கட்சி தீர்வுக்கு உடன்பட்டால் அதன் பின்னர் பேசலாம் என்று ஒரே போடாக போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**அரசு புலிகளுடன் தற்போது பேசச் செல்லாது என்ற நம்பிக்கை ஐ.தே.கட்சிக்கு எந்தளவுக்கு இருக்கிறதோ, அதேயளவு நம்பிக்கை ஐ.தே.கட்சி அரசியல் தீர்வுக்கு ஒத்துழைக்காது என்ற விடயத்தில் அரசுக்கும் இருக்கிறது.**

இரு தரப்பும் முன்வைக்கும் நிலைப்பாடுகள் 'பாம்பின் கால் பாம்பறியும்' என்ற நிலையில்தான் அமைந்துள்ளன.

புலிகளுடன் பேசுமாறு ரணில் கூறுவது நியாயமான கூற்றாக இருக்கலாம். ஆனால் நியாயமான தீர்வு கருதி கூறப்படும் கூற்றல்ல என்பதுதான் கவனிக்கப்பட வேண்டியது.



படிப்பகம்

# கொள்ளை ராணி பூலான்தேவி 62

தருவது ரசிகன்

கிராமத்தவர்கள் சிதறி ஓடினார்கள். பூலானைப் பற்றிய உண்மையும், பொய்யும் கலந்த கதைகள் பலவற்றை அவர்கள் முன்னரே கேள்விப்பட்டிருந்தனர். அதனால் பூலான் சுடத்தொடங்கியதும், தாங்கள் கேள்விப்பட்டிருந்த கதைகள் எல்லாம் அவர்களின் நினைவுக்கு வந்தன.

பூலானின் துப்பாக்கிக் குண்டுகள் இரண்டுபேரை பதம்பார்த்தவுடன், கூட்டமாக வந்தவர்களுக்கு கிலி பிடித்துவிட்டது.

**கடந்த வாரம்**

**பூலானும், பிக்கு என்பவனும் தப்பிச் சென்று தெஹங்கான் என்ற கிராமத்தை அடைகின்றனர். பூலானை இனம் கண்டு தாக்கவந்த கிராமத்தவர்களை சுட்டுவிரட்டுகிறாள் பூலான். பூலான் தப்ப உதவிய பண்டிதரை ஸ்ரீ ராம் சுட்டுக்கொல்கிறான். இனி....**

புறமுதுகிட்டு ஓடுகிறவர்களைப் பார்த்து பூலான் நகைத்தாள், நகைத்தாள்... நகைத்துக் கொண்டேயிருந்தாள்: தன் கண்களில் கண்ணீர் வரும்வரை நகைத்தாள்.

பூலான் நகைப்பதைப் பார்த்த பிக்குவுக்கு சின்னதாக ஒரு கலக்கம் வந்துவிட்டது. பூலானுக்கு மனநிலை பாதித்துவிட்டதோ என்றுதான் கலக்கம் ஏற்பட்டது. பூலானை நிதானப்படுத்த நினைத்த பிக்கு அவளிடம் கூறினான்:

"நாம் விரைவாக இங்கிருந்து சென்றுவிடவேண்டும். இவர்கள் நேராக பொலிசாரிடம்தான் போவார்கள்."

மனம்விட்டுச் சிரித்த சிரிப்பில் அவளது மனதில் இருந்த பாரத்தில் பாதி குறைந்தது போலிருந்தது பூலானுக்கு.

பிக்கு சொன்னதை ஆமோதிப்பது போல தலையசைத்த பூலான், "போகலாம், பாதையைக் காட்டு!" என்றாள்.

அக்கிராமத்தின் எல்லையைக் கடந்ததும் பற்றைகளும், மரங்களும் அடர்ந்த பகுதியூடாகவே அடுத்த கிராமத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது.

யார் கண்ணிலும் படாமல் மறைந்து செல்லக்கூடிய பாதையாக இருந்தமையால் தப்பிச் செல்ல இலகுவாக இருந்தது.

எதிரே யாராவது வருவது போலத் தெரிந்தால் பூலானும், பிக்குவும் பற்றைகளுக்குள் பதுங்கி இருந்துவிட்டு, பின்னர் பயணத்தைத் தொடர்ந்தனர்.

பூலான் சேலை அணிந்திருந்தமையால் முட்பற்றைகளைத் தாண்டிச் செல்லும்போது சிரமப்பட்டாள். முட்செடிகள் சேலையைப் பிடித்திழுத்தன.

தடிப்பான சீருடையுடனும், கால்களில் கனமான பூட்சுகளுடனும் இப்படியான பாதைகள் வழியாக மல்லாவுடன் பூலான் பயணம் செய்திருக்கிறாள். அப்போது சிரமம் எதுவும் தெரியவில்லை.

பிக்கு சமயோசிதமாக செய்த ஏற்பாடுதான் இப்போது பூலானுக்கு உதவிக்கொண்டிருந்தது. பண்டிதர் வீட்டில் இருந்து தப்பி வரும்போது வெறுங்கால்களுடன்தான் பூலானும், பிக்குவும் ஓடி வந்தனர்.

கூட்டத்தினரைச் சுட்டு விரட்டிய போது, அவர்களில் பலர் தங்கள் காலணிகளையும் விட்டு விட்டுத்தான் ஓடினார்கள்.

அவர்கள் பண்ணையார் வகுப்பினர் என்பதால் அநேகமாக எல்லோரும் காலணிகள் அணிந்திருந்தனர். அவர்கள் விட்டுச் சென்ற காலணிகளில் தனக்குத் தோதானதை அணிந்துகொண்ட பிக்கு பூலானுக்குத் தோதாகவும் ஒரு சோடி காலணிகளை எடுத்துக் கொடுத்து அணியச் செய்தான்.

காலணிகள் இல்லாவிட்டால் முட்பற்றைகளைத் தாண்டிச்செல்வது முடியாமல் இருந்திருக்கும்.

மாலை மங்கிக்கொண்டிருந்த நேரத்தில் நர்ஹன் என்ற கிராமத்தைச் சென்றடைந்தனர்.

அக்கிராமத்தவர்களுக்கு மல்லா பல உதவிகளைச் செய்துள்ளதாக பிக்கு கூறினான். அதனால் தமக்கு அங்கு ஆபத்து நேராது என்று பூலான் நம்பினாள்.

கிராமத்தின் நுழைவாயிலில் பூலானுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. சிறிய கோவில் ஒன்று அங்கு இருந்தது.

"அது என்ன கோயில்?" என்று கேட்டாள் பூலான்.

பிக்கு சொன்ன பதிலால் பூலானின் மனம் சில்லென்று குளிர்ந்துபோனது.

"துர்க்கையம்மன் கோவில்" என்றான் பிக்கு. கிராம வாயிலில் நின்று துர்க்கையம்மனே அபயக்கரம் நீட்டி தன்னை வரவேற்பது போலிருந்தது.

கோயிலை நோக்கிச் சென்ற பூலான், தன் துப்பாக்கியை துர்க்கையம்மன் விக்கிரம் முன்னால் வைத்துவிட்டு, அப்படியே தரையில் விழுந்து வணங்கினாள்.

"உன் புண்ணியத்தில் உயிர் தப்பி வந்திருக்கிறேன் அம்மா. நான் அநாதையாகிவிட்டேன். எனக்கென்று யாரும் இல்லைதாயே. நீதான் இருக்கிறாய். எனக்குப் பலம் கொடு. என் மனதுக்கு உரம்கொடு. என்மல்லாவைக் கொன்றவர்களை, என்னை இப்படி சீரழியச் செய்தவர்களை பழிவாங்கும்வரை எனக்கு உயிர் கொடு!" என்று மன்றாடினாள்..

பூலானுக்குப் பின்னால் பிக்கு நின்றுகொண்டிருந்தான். அவனும் கண்களை மூடிப் பிராத்தித்துக் கொண்டிருந்தான்.

முதலில் அவனுக்குத்தான் அந்த சத்தங்கள் கேட்டன. பலர் நடந்துவருவது போன்ற காலடிச் சத்தங்கள்.



பூலான்

பூலானை உஷார்படுத்த பிக்கு நினைத்தபோது, பூலானுக்கும் அந்தக் காலடிச் சத்தங்கள் காதில் விழுந்துவிட்டன.

அவர்கள் இருவரும் கோயிலுக்குள் வந்துவிட்டதால் வெளியே யார் வருகிறார்கள் என்பது பார்வைக்கு எட்டவில்லை.

"யாரது?" என்று குரல் கொடுத்தபடி தன் துப்பாக்கியை கையில் எடுத்துக்கொண்டாள் பூலான்.

பதிலுக்கு, "யார் உள்ளே?" என்று வெளியே இருந்து கேள்வி வந்தது.

கேள்வியில் இருந்த அதட்டல் கலந்த அதிகாரத் தொனியைப் புரிந்து கொண்டதும் பூலானின் புருவங்கள் உயர்ந்தன. பிக்குவைப் பார்த்தாள். அவன் முகத்திலும் சந்தேக ரேகைகள் தெரிந்தன..

"யார் உள்ளே? வெளியே வாருங்கள். இல்லாவிட்டால் சுடுவோம். வெளியே வா!" என்று உத்தரவிட்டார்கள்.

சந்தேகமே இல்லை, பொலிசார்தான் என்று தெரிந்துவிட்டது.

மல்லா ஒருமுறை தன்னிடம்சொன்னதை நினைத்துக்கொண்டாள் பூலான்.

"எதிரிக்குக் கொடுக்கும் கால அவகாசம் எமக்குத்தான் கெடுதி. எதிரியை கலங்கடிப்பதில்தான் எமது வெற்றி இருக்கிறது. தப்ப முடியாவிட்டால் தாமதிக்கவே கூடாது. தாக்கவேண்டும்!"

பூலான் ,தன் துப்பாக்கியை உயர்த்தினாள்.

சட்டென்று தன் மனதில் தோன்றிய யோசனைப்படி, "விக்ரம், மல்ராம், பாபுசிங் எல்லோரும் தாக்குங்கள். விடாதீர்கள் அவர்களை!" என்று வெளியே கேட்கக்கூடியதாக உரத்துக் கத்தினாள் பூலான்.

பிக்குவே ஒரு நொடி குழம்பி, பின்னர்தான் பூலானின் திட்டத்தை புரிந்துகொண்டு தானும் கத்தினான்: "சுடுங்கள் விடாதீர்கள்!. சுடுங்கள்!"

பூலான் வெளிப்பக்கம் நோக்கி முதல் வேட்டைத் தீர்த்தாள். உள்ளே பலர் இருப்பதுபோல நம்பவைக்க பல பக்கங்கள் நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தாள்.

பொலிசாரும் உள்நோக்கி இரண்டு வேட்டுக்களைத் தீர்த்தனர். பொலிசார் மூன்று பேர்தான் இருந்தனர். பொலிஸ் குழுவுக்கு தலைமை தாங்கி வந்திருந்த சார்ஜன்ட் பயந்துபோனான்.

"உள்ளே பலர் இருக்கிறார்கள் போலிருக்கிறது. நாமோ மூன்றுபேர்தான் இருக்கிறோம். போய்விடலாம். நம் ஆட்களை அழைத்துக்கொண்டு வருவோம்!"

சுடுவதை நிறுத்திவிட்டு பின்வாங்கிச் சென்றனர் பொலிசார். அவர்கள் சுடுவதை நிறுத்திவிட்டு பதுங்கியிருக்கலாம் என்று நினைத்த பூலான் மேலும் சில வேட்டுக்களைத் தீர்த்தாள்.

பிக்கு சுவரோடு சுவராக ஒட்டிச் சென்று வெளியே எட்டிப்பார்த்தான். தூரத்தில் காக்கி உடைகள் சென்றுகொண்டிருப்பதைக் கண்டான்.

எல்லாப்புறமும் கண்களால் அலசிவிட்டு பூலானை நோக்கி கட்டைவிரலை உயர்த்திக் காட்டினான்.

பூலானுக்கு அப்போதுதான் நிம்மதிப் பெருமூச்சே வெளிப்பட்டது.

மற்றொரு புறம் கவலையாகவும் இருந்தது. உள்ளே பலர் இருப்பதாக பொலிசாரை நம்பவைப்பதற்காக 23 ரவைகளை பூலான் தீர்த்து முடித்திருந்தாள்.

## பாகம் 2

இரண்டே இரண்டு ரவைகள்தான் அவளிடம் மிஞ்சியிருந்தன. அக் கிராமத்தில் தாங்கள் இருப்பதை பொலிசார் அறிந்துவிட்டதால் தொடர்ந்து அங்கு தங்குவதும் பாதுகாப்பில்லை என்று பூலான் நினைத்தாள்.

அதனால் அக் கிராமத்துக்குள் செல்லாமல், கிராமத்தை ஒட்டி இருந்த காட்டின் வழியாக இருவரும் செல்லத் தொடங்கினார்கள்.

ஓர் இரவும், ஒரு பகலும் காட்டின் வழியாக தொடர்ந்து நடந்து ஜமுனா நதியின் இன்னொரு கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

பசியும், தாகமும், தூக்கமின்மையும் ஒன்று சேர்ந்து பூலானையும், பிக்குவையும் உயிர் எடுத்துக்கொண்டிருந்தன.

பிக்குவைப் பார்க்க பூலானுக்கு பரிதாபமாக இருந்தது. அவன் நினைத்திருந்தால் தன் வழியில் தனியாகத் தப்பிச் சென்றிருக்கலாம்.

'தன்னுடன் வருவதால்தான் அவனுக்கும் ஆபத்து ஏற்படுகிறது. அவனை யாருக்கும் அடையாளம் தெரியப்போவதில்லை. அதனால் தனியாகச் சென்றால் எவ்வித தடையும் இல்லாமல் அவன் தப்பிப் போயிருக்கலாம்' என்பதைப் பூலான் அறிந்தே இருந்தாள்.

காட்டின் ஊடாக நடத்துவரும்போது பிக்குவிடம் "நீ விரும்பினால் தனியாகச்செல். நான் எப்படியாவது போய்க்கொள்கிறேன்!" என்று பூலான் சொன்னாள்.

அப்படிச் சொன்னாளேதவிர பிக்குவும் இல்லாவிட்டால் தனியாகச் செல்வது சிரமம் என்பதையும் உணர்ந்தே இருந்தாள்.

"போகத்தான் போகிறேன். ஆனால் அதற்குமுன் உங்களை ஒரு பத்திரமான இடத்தில் விட்டுவிட்டுத்தான் போவேன். மல்லாஜி போட்ட உப்பைத் தின்று வளர்ந்தவன் நான். அந்த நன்றியை மறக்கமாட்டேன்," என்றான்.

பூலான் நெகிழ்ந்து போனாள். "எங்கே போவாய்? என்ன செய்வாய்?" என்று கேட்டாள்.

"என் கிராமத்திற்கு செல்லுவேன். நான் கொள்ளைக் கோஷ்டியில் இருந்தது அங்கு யாருக்கும் தெரியாது. அங்கு எனக்கொரு காதலி இருக்கிறாள். இந்த வாழ்க்கையில் எனக்குச் சலிப்புத் தட்டிவிட்டது," என்று கூறினான் பிக்கு.

"என்னொடு வரும்போது உனக்கு ஆபத்து நேர்ந்துவிட்டால் என்ன செய்வது? உன் காதலியைச் சந்திக்க உயிர் இருக்க வேண்டாமா?"

"ஸ்ரீராம் சுட்டுத் தள்ளியிருந்தாலும் செத்துப் போயிருப்பேன்தானே? என் மல்லாஜி உங்கள்மீது உயிரையே வைத்திருந்தார். அவருக்காக உங்களுக்கு உதவிசெய்யும்போது செத்துப்போனால் சந்தோசம்தான். நன்றிக்காக உயிரையும் கொடுக்கலாம்." என்றவனை பிரமிப்போடு நோக்கிய பூலானின் கண்கள் பனித்தன.

இப்படியான ஒரு விசுவாசியைப் பெற்ற மல்லா கொடுத்துவைத்தவன் என்று நினைத்துக் கொண்டாள்.

பிக்கு தூண்டிவிட்ட மல்லாவின் நினைவுகளை அசைபோட்டபடியே நடந்துவந்ததால் பூலானுக்கு பசிக்களை பெரிதாகத் தெரியவில்லை.

ஜமுனா நதிக்கரையில் தண்ணீர் அருந்திவிட்டு அங்கிருந்த வேப்பமரம் ஒன்றின்கீழ் இருவரும் அமர்ந்து ஓய்வெடுத்தனர்.

சற்றுநேரத்தில் பிக்கு எழுந்து வேப்பமரத்தின்மீது தாவி ஏறத்தொடங்கினான். மர உச்சிக்குச் சென்றவன் அங்குமிங்கும் பார்வையால் அலசினான்.

அவன் கண்கள் அகல விரிந்தன. தூரத்தே பொலிசார் பலர் நடமாடிக் கொண்டிருப்பதை அவன் கண்டான்.

மேலே இருந்தபடியே சைகை மூலமாக ஆபத்தை தெரிவித்தான் பிக்கு. பூலான் சற்றும் தாமதிக்காமல் தன் துப்பாக்கியை எடுத்து பிக்குவிடம் நீட்டினாள். பின்னர் சேலையை வரிந்து கட்டிக்கொண்டு மரத்தில் தாவி ஏறினாள்.

மேலே நின்ற பிக்கு தன் மனதில் நினைத்துக்கொண்டான், 'பத்து மல்லாக்களுக்கு சமம் இந்தப் பெண். சந்தேகமேயில்லை கொள்ளை ராணிதான்!'

சுற்று முற்றும் பார்த்த பூலான் தாங்கள் இருவரும் தப்பிச்செல்ல வேறு வழியே இல்லை என்பதைப் புரிந்துகொண்டாள்.

'மாட்டிக்கொண்டோமோ? இத்தனை தூரம் தப்பிவந்தும் புண்ணியமில்லாமல் போச்சே!' என்று நினைக்க சற்று விரக்தியாய் இருந்தது.

அந்த மரம் சடைத்து வளர்ந்து அடர்த்தியாக இருந்தது. நன்கு உற்று நோக்கினால்தான் அவர்கள் இருவரும் மறைந்திருப்பதைக் காணமுடியும்.

அவர்கள் இருந்த மரத்தை நோக்கி நாலைந்து பொலிசார் துப்பாக்கிகளுடன் வந்து கொண்டிருந்தனர்.

பூலானின் இதயம் தட் தட் என்று அடித்துக் கொண்டிருந்தது.

இருப்பதோ இரண்டு ரவைகள். வருவதோ நான்கு பொலிஸ்காரர்கள்.

துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டால் ஆங்காங்கே நிற்கும் பொலிஸ்காரர்களும் ஓடிவந்துவிடுவார்கள்.

என்ன செய்யலாம்?

துர்க்கையம்மனை வேண்டிக்கொண்டாள் பூலான்.

வந்த பொலிஸ்காரர்கள் மரத்தின் கீழ் நின்று மேல் நோக்கினார்கள்.

(தொடர்ந்து வரும்)

# டயானாவின் இறுதி நாள்

இளவரசி டயானாவும் டோடியும் பயணம் செய்த ஜெட் விமானம் 30.08.97 சனிக்கிழமை பிற்பகல் 3.30க்கு பாரிஸ் நகருக்கு மேற்கே சார்டினியா விமானத் தளத்தில் வந்திறங்கியது. எப்படியோ மோப்பம்பிடித்து அங்கு வந்திருந்த புகைப்படப் பிடிப்பாளர்கள் டயானாவையும், டோடியையும் அவர்களது இறுதி மூச்சுவரை-9 மணி நேரம் இடைவிடாமல் துரத்திக்கொண்டே திரிந்துள்ளனர்.

சார்டினியா விமானத் தளத்திலும் படப்பிடிப்பாளர்கள் பெருந்திரளாகக் குழுமியிருந்தனர். பாரிஸ்நகரின் மத்தியிலுள்ள டோடி குடும்பத்துக்கு சொந்தமான ரிட்ஸ் ஹொட்டலுக்கு அவர்கள் 4.30க்கு வந்து சேர்ந்தனர். ஹொட்டலுடன் இணைந்த சகல தெருக்களிலும் வகை வகையான கமராக்களுடன் படப்பிடிப்பாளர்கள் காத்துக்கிடந்தனர். ஆக



காருக்குள் ஏறியபோது எடுக்கப்பட்ட படம்

இருமணி நேரம் மட்டுமே அவர்கள் ஹொட்டலில் இருந்தனர்.

டோடி தனியாக ஹொட்டலை அடுத்துள்ள ஒரு நகைக் கடைக்குச் சென்று 205,400 டொலர் (1கோடியே 21 இலட்சத்து 18 ஆயிரத்து 600 ரூபாய்கள்) பெறுமதியான ஒரு வைர மோதிரத்தை வாங்கி வந்து டயானாவிடம் தனது நினைவுப் பரிசாக வழங்கினார். இதற்கு முன்னரே டயானா, தனது காலஞ் சென்ற தந்தையாரின் சேட்கை பொத்தான்கள் ஒரு சோடியையும் சிகரெட் கிளிப்பர் ஒன்றையும், ('டயானாவிடமிருந்து அன்புடன்..' என்ற வாக்கியங்கள் பொறித்த) டோடிக்கு அன்புப் பரிசாகக் கொடுத்தாராம்.

அன்று மாலை 7 மணிக்கு இருவரும் ஹொட்டலை விட்டுப்புறப்பட்டனர். மேற்கு பாரிஸிலுள்ள அல்ஃபயட்டின் வாசஸ் தலத்துக்குச் சென்றனர். அங்கு படப்பிடிப்பாளர்கள் குழுமியிருந்தனர். அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் படப்பிடிப்பாளர்களுக்குமிடையில் கடுமையான வாக்குவாதம் இடம் பெற்றது.

மத்திய பாரிஸிலுள்ள பெனொயிட் உணவு விடுதிக்கு இருவரும் செல்ல விருந்தனர். அங்கும் ஏற்கனவே படப்பிடிப்பாளர் தொகை மிகக் கூடுதலாக இருப்பதை அறிந்து அந்த எண்ணத்தைத் தவிர்த்தனர். மீண்டும் ரிட்ஸ் ஹொட்டலுக்கே திரும்பி அங்கேயே உணவை முடித்துக் கொண்டனர்.

ஞாயிறு அதிகாலை 12.20க்கு ரிட்ஸ் ஹொட்டலின் பின் வாயிலால் வெளியேறி பென்ஸ் காரில் ஏறிக் கொண்டனர்.

காத்திருந்த புகைப் படப்பிடிப்பாளர்களின் மோட்டார் சைக்கிள்கள் பின்தொடர டயானாவும், டோடியும் தம் இறுதிப் பயணத்தை ஆரம்பித்தனர். புறப்படும் போது அதுதான் தங்கள் கடைசிப் பயணம் என்பது அவர்களுக்கு எங்கே தெரிந்திருக்கப் போகிறது. ஆனாலும் சிலருக்கு தங்கள் மரணத்திற்கான அறிகுறிகள் உள்ளுணர்வில் தெரியத்தொடங்கும் என்று சில உளவியல் நிருபர்கள் கூறுகின்றனர்.

டயான்வும், டோடியும் நீண்டநாட்கள் காதலர்களாக இருந்தும்கூட மரணமாகும் தினத்தன்றுதான் இருவரும் பெறுமதியான பரிசுகளை பரிமாறிக் கொண்டதுகூட உள்ளுணர்வின் தூண்டுதல் தானே?!

# இளவரசியின் கடைசிப் பயணம்

இளவரசி டயானாவின் மரணத்துக்கு காரணம் யார்? கார்ச் சாரதி ஹென்றிபோலா? துரத்திச்சென்ற 'புகைப்படப்பிடிப்பாளர்களா?

ஹென்றிபோல் வயது 41. டோடி குடும்பத்தினருக்கு சொந்தமான ரிட்ஸ் ஹொட்டலில் உயர் பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றியவர். கார் ஓட்டுவதில் கில்லாடி..

புகைப்படப்பிடிப்பாளர்கள் தங்களைப் பின்தொடர்வதையும், ஹொட்டலின் வெளியே கமராக்கள் சகிதம் காத்திருப்பதையும் டயானாவும், டோடியும் அறிந்திருந்தனர்.

தாம் திருமணம் செய்யப்போகும் செய்தியை விரைவில் வெளியிட இருந்தமையால், தம்மை இணைத்து புகைப்படம் எடுப்பது பற்றிக்கூட அவர்கள் கவலைப்படவில்லை. ரிட்ஸ் ஹோட்டலில் இருந்து சென்று இருவரும் தங்கவிருந்த இடத்தை புகைப்படப் பிடிப்பாளர்கள் பின்தொடர்ந்து வந்து கண்டுபிடித்துவிடக்கூடாதே என்பதுதான் அவர்கள் கவலை.

அதனால்தான் புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு தண்ணிகாட்டக் கூடிய வேகத்தில் கார் ஓட்டக்கூடிய ஹென்றிபோலை சாரதியாக கொண்டு சென்றனர்.

காரில் ஏறும்போது புகைப்படப் பிடிப்பாளர்களை நோக்கிய ஹென்றிபோல் "இன்று எங்களை உங்களால் பிடிக்கமுடியாது." என்று சவால்விட்டாராம்.

கார்க்கள் ஏறியதும் 'கிளிக் கிளிக்' கமராக்கள் வெளிச்சங்களை கக்கின. டயானா முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

கார் புறப்பட்டது. பாரிஸ் சாலையில் மணிக்கு 150 கிலோமீட்டர் வேகத்தில், போக்குவரத்து சிக்னல்களையும் அலட்சியம் செய்து விரைந்தது.

கார் விபத்தில் சிக்கிய சாலைத் திருப்பத்தை அண்மிக்க முன்பாக பின்னால் துரத்திவந்த மோட்டார் சைக்கிள்களில் ஒன்று காரைத் தாண்டிவிட்டது. மோட்டார் சைக்கிளின் பின்புறம் இருந்தவர் காருக்குள் இருந்தவர்களை கமராவால் 'கிளிக்' செய்தார்.

தம்மை ஒரு மோட்டார் சைக்கிள் முந்திவிட்டதைப் பார்த்த ஹென்றிபோல் டென்ஷனாகிப்போனார். தனது திறமையை டயானாவும், டோடியும் குறைத்து மதிப்பிடப் போகின்றனரே என நினைத்து டென்ஷனாகியதில் சாலைத் திருப்பத்தை வளைக்கத் தவறினாரா?

அல்லது கமரா வெளிச்சம் கண்களை உறுத்தியதால் நிலை தடுமாறினாரா? என்பதுதான் கேள்வி.


சாலைத் திருப்பத்தில் வேகத்தை குறைத்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம். ஒரே வேகத்தில் திரும்பியிருந்ததால்தான் கார் நிலைதடுமாறி தூணில் மோதியிருக்கிறது என்பது மட்டும் உண்மை.

இரத்தப் பரிசோதனையின் முடிவின்படி சாரதி ஹென்றிபோல் நிறைபோதையில் இருந்திருக்கிறார். அவரது இரத்தத்தில் 0.18 கிராம் /டெசி லீட்டர் மதுச் செறிவு இருந்துள்ளது.

இவ்வாறான நிலையில் கண்பார்வை மங்கும். கார் செலுத்தும்போது கட்டுப்பாடும் பாதிக்கப்படும். சாதாரண சந்தர்ப்பத்தைவிட ஹென்றிபோல் மது அருந்தியிருந்த அளவானது விபத்துக்கான சந்தர்ப்பம் ஏற்பட 3 மடங்கு சாதகமானதாகும் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

எனவே சாரதியின் நிறைபோதையும் விபத்துக்கான காரணிகளில் முக்கியமான ஒன்றாகியுள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நிறைபோதையில் சாரதியாக அனுப்பி விட்டார்களே என்ற பழிச்சொல்லில் இருந்து தப்ப டோடியின் தந்தை மொஹமட் அல் ஃபயட் முயற்சி செய்தார். "ஹென்றிபோல் குடித்திருக்கவில்லை"



மதுக்கோப்பையுடன் ஹென்றிபோல்

என்று கூறினார்.

அதனால் இரத்தப் பரிசோதனை முடிவுகளில் மாற்றம் செய்யவும் தனது பணபலத்தை பயன்படுத்த நினைத்தாராம். முதலில் செய்யப்பட்ட மரணவிசாரணையில் நம்பிக்கை இல்லை என்று மறுபடி செய்யச் சொன்னார்கள்.

எப்படி முயன்றும் உண்மையை மறைக்க முடியாத நிலையில் இறுதியில் மொஹமட் அல்ஃபயட் தனது வாயாலேயே உண்மையை ஒப்புக்கொண்டார். "ஹென்றி போல் குடித்திருந்தார்" என்று சொல்லிவிட்டார் மொஹமட் அல்ஃபயட்.

ஹென்றிபோல் பற்றி திரட்டப்பட்ட தகவல்களும் அவர் ஒரு மதுப்பிரியர் என்பதை அடித்துச் சொல்கின்றன.

துரத்தல் ஒரு காரணம். சாரதியின் போதை இன்னொரு காரணம். இரண்டும் தான் டயானாவின் உயிருக்கு உலை வைத்தன என்று கூறுகிறார்கள் ஆய்வாளர்கள்.

www.padippakam.com



# முள்ளில் விழுந்த ரோஜா

← பன்னிரண்டு வயதுச் சிறுமியாக டயானா இருந்த போது எடுக்கப் பட்ட படம் இது. சிறு வயதிலேயே அழகு மிளிரும் குட்டித் தேவதையாகவே இருந்தார் டயானா.

டயானாவின் தந்தையார் ஜோன்னி ஸ்பென்சர் பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் ரிச்மாண்ட் என்னும் பகுதியின் எட்டாம் பிரபுவாக இருந்தார். டயானாவின் தாயாரான பிரான்செஸ், தன் கணவர் ஸ்பென்சரை 1969ல் விவாகரத்துச் செய்தார்.

ஸ்பென்சர் பிரபு தன் பிள்ளைகளுடன் சான்ரிங்ஹாம் என்ற இடத்திலுள்ள மாளிகையில் குடியேறினார். அதே தெருவில் பிரிட்டிஷ் மகாராணி குடும்பத்துக்குச் சொந்தமான மாளிகையும் இருந்தது.

அதனால் ஸ்பென்சர் பிரபு வீட்டுக்கு வரும் இளவரசர் சாள்ஸும், அவர் தம்பி ஆண்ட்ருவும் டயானாவுடன் கண்ணாம்மூச்சி விளையாடுவார்கள். சிறு வயதில் டயானாவுக்கு சாள்ஸைவிட ஆண்ருவைத்தான் பிடிக்குமாம்.

பின்னர் டயானா பருவப் பெண்ணாகிவிட்டார். அதனால் சாள்ஸ், ஆண்ரு ஆகியோர் டயானா வீட்டுக்குச் செல்வதை நிறுத்திக்கொண்டனர். டயானாவின் சகோதரியான ஜேன் ஸ்பென்சரின் திருமணத்தின் போதுதான் நீண்டநாட்களுக்குப் பின்னர் டயானாவைக் கண்டார் சாள்ஸ். பார்த்தார், பார்த்தார், பார்த்துக் கொண்டே இருந்தார்.

'அந்தக் குட்டிப் பெண்ணா இவள்?' வியந்தார். காதலில் வீழ்ந்தார். கைப்பிடித்தார். பின்னர் அந்த அழகு ரோஜாவை தனிமையில்விட்டு கமீலா, லேடி டரியான் போன்ற பெண்களுடன் அலைந்தார். டயானாவின் அன்புத் தேடல்கள், சோக முடிவுகள் என்பதற்கு சாள்ஸும் ஒரு முக்கிய காரணமானார். சாள்ஸ் என்ற முள்ளில் விழுந்த ரோஜாதான் டயானா.

## தகவல் பெட்டி







## இலட்சியத் தம்பதிகள்

← அபுஹாசனுக்கு ஷகிதாவை பிடித்துவிட்டது. ஷகிதாவுக்கும் அபுஹாசன்மீது மகா பிரியம்தான். ஒரே ஒரு தடை உயரம்தான். இருவருமே குள்ளம்தான். ஆனால் அபுஹாசன் மகா குள்ளம்.

அபுஹாசனின் உயரம் மூன்றரை அடி. வயது 27. ஷகிதாவின் உயரம் நாலு அடி. வயது 24.

ஷகிதா வீட்டில் மின்சாரத் திருத்த வேலைக்கு அபுஹாசன் வந்தபோதுதான் இருவரது கண்ணும் கண்ணும் கலந்து பயங்கரமான காதல் மின்சாரம் உற்பத்தியானதாம்.

"உயரப் பிரச்சனையை சமாளித்துக் கொள்ளலாம், எனக்கு அவர்தான், அவருக்கு நான்தான்" என்று ஷகீதா ஒற்றைக்காலில் நின்றதால் காதலுக்கு ஜே. இருவரும் இப்போது இலட்சியத் தம்பதிகளாகிவிட்டனர்.

## துண்டிக்கப்பட்ட கை

## மருத்துவமனையில் விபரீதம்

↑ தனியார் மருத்துவமனைகள் வாங்கும் தொகைக்கு ஏற்ப, அவை வழங்கும் சேவை திருப்திகரமாக இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது.

தவறான சிகிச்சைகளும் ஆபத்தான நிலைக்கு நோயாளர்களை கொண்டு செல்கின்றன என்பது அதிர்ச்சியான தகவல்.

தமிழ்நாட்டில் நடந்துள்ள ஒரு சம்பவம் நெஞ்சை உலுக்குகிறது.

தமிழ்நாட்டில் திருச்சியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் வயிற்றுப்போக்குக்காக 11 மாத ஆண்குழந்தையான நிரஞ்சன் அனுமதிக்கப்பட்டான்.

வயிற்றுப்போக்கை தடுக்க ஊசிபோட்டபோது தவறான இடத்தில் ஊசியை செலுத்திவிட்டனர். சிறிது நேரத்தில் குழந்தையின் கை வீங்கத் தொடங்கிவிட்டது. டாக்டர் கிங்ஸி என்பவர் வந்து பார்த்துவிட்டு 'பிரச்சனை இல்லை' என்று சொல்லிவிட்டுப் போனாராம்.

ஆனால் குழந்தையின் கை கருநீலமாக மாறியதுடன், ஆங்காங்கே கொப்புளங்களும் ஏற்பட்டன. இரண்டு நாட்களின் பின்னர் கையில் இரத்த ஓட்டமும் நின்று போனது. இறுதியாக 3.11.96ல் குழந்தையின் கை துண்டிக்கப்பட்டது. சுத்த இரத்தம் செல்லும் குழாய்க்குள் ஊசி மூலம் மருந்து செலுத்தப்பட்டதே விபரீதம் ஏற்படக் காரணம் என்பது கண்டறியப்பட்டது.

குழந்தைக்கு அசையக்கூடிய செயற்கைக் கை பொருத்த அமெரிக்கா செல்லவேண்டும். ஒன்றரை ஆண்டுக்கு ஒரு முறை செயற்கைக் கையை மாற்றவேண்டி இருக்குமாம். இதற்கெல்லாம் சேர்த்து இந்திய பண மதிப்பில் 98 இலட்சம் ரூபாய் தேவைப்படுமாம்.

தவறான சிகிச்சை செய்த மருத்துவமனையிடம் 98 இலட்சம் ரூபா நஷ்டஈடு கோரி சமீபத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. ஒரு பிஞ்சை முடமாக்கிய பாவிகளை என்ன செய்யலாம்?

எதற்கும் ஊசிபோடல் விடயத்தில் இங்கும் விழிப்பாக இருக்கவேண்டும்.

## மலர்க்கடலும் அனுதாப அலையும்

→ டயானாமீதான அபிமானம், பிரிட்டிஷ் அரச குடும்பம்மீதான வெறுப்பு இரண்டும் கலந்த நிலையில் அனுதாப அலை வீசியடித்தது. டயானாவின் இல்லமான 'கென்சிங்டன் பலஸ்' மாளிகை முன்பாக அஞ்சலிக்காக குவிந்த மலர்வளையங்களே இவை. எட்டத்தில் நின்று பார்க்கையில் மலர்க்கடல்போல தெரிந்ததாம்.

உலகில் இதுவரை நடைபெற்ற பிரபலங்களின் மரணச்சடங்குகளில் இவ்வாறு மலர்க்கடலாக மலர்வளையம் குவிந்தது இதுதான் முதற்தடவை என்கிறார்கள். உதிர்ந்த மலருக்கு மலராஞ்சலி!



↓ பிரபலங்கள், நடிகர், நடிகைகள் பற்றி பிரமிப்போடு பேசுகிறோம். அவர்களுக்கு என்ன ராஜ வாழ்க்கை என்று பெருமூச்சு விடுகிறோம். ஆனால் அவர்கள் படும்பாட்டை நன்கு அறிந்தால் நாம்தான் கொடுத்துவைத்தவர்கள் என்பது உறுதியாகிவிடும்.

நினைத்த நேரத்தில் வெளியே திரிய முடியாது. கடைத் தெருவுக்குக்கூட காலாற நடந்து செல்ல முடியாது. இப்படியாக ஏகப்பட்ட பிரச்சனைகள்.

படத்தில் பெட்டிபோன்ற குட்டி இல்லத்தில் ஒயிலாகச் சாய்ந்திருப்பவர் ஒரு ஹொலிவுட் நடிகை. ஏன் இப்படி இருக்கிறார்? பட்டுப்போன்ற மேனியில் சூரிய ஒளி பட்டே பல நாட்கள் ஆகிவிட்டதாம். கடற்கரைக்கு சென்றாலோ, குறைந்த ஆடையுடன் வீட்டு முற்றத்தில் ஹாயாகக் கிடந்து சூரிய ஒளியை மேனியில் தவழ விட்டாலோ யாராவது கண்டுவிடக்கூடும். கமராக்கள் எங்காவது ஒளித்திருந்து கிளிக் செய்யலாம்.

ரசிகர்கள் தொல்லை, மற்றும் கமராக்காரர்கள் தொல்லையில் இருந்து பாதுகாப்புத் தேடத்தான் இந்த ஏற்பாடு. இந்த இல்லத்தின் பெயர் ருசிகரமானது. இதன்பெயர் 'இனிப்புப் பெட்டி'. ஆங்கிலத்தில் கூறுவதானால் 'சுவீற்பொக்ஸ்'. எங்கு வேண்டுமானாலும் தூக்கிக் கொண்டு போய் வைக்க இயலும். கதவை மூடிவிட்டால் உள்ளே இருப்பவரைத் தெரியாது. பெட்டி போலத் தெரியும். சூரிய ஒளி புகக்கூடிய கூரை அமைப்புக் கொண்டது. ஹொலிவுட் நடிகைகள் மத்தியில் இந்த இனிப்புப் பெட்டிகளுக்கு பயங்கர கிராக்கி. ஆளுக்கு ஒன்று வாங்கி வைத்திருக்கிறார்கள்.

கிசு கிசு மற்றும் பரபரப்பை விரும்பும் நடிகைகள் மட்டும் இதுபோன்ற ஏற்பாடுகளை நாடுவதில்லை. கமராக்கள் பார்க்கட்டும் என்றே அழகு காட்டுவர். பின்னர் கோபப்படுவதுபோல நடிப்பர்.


## சூரியக் குளியல்



↓ நீள நீளமாக இவர்கள் வாயில்வைத்து வாசிப்பதுதான் நவீன இசைக்கருவி. உலகின் முன்னணி இசைக்குழுக்களில் ஒன்றான 'ஜாஸ்' இசைக்குழுவினர்தான் இவர்கள். சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்தவர்.

நவீன இசைக்கருவிகளை பூங்கா ஒன்றுக்குள் வைத்து வாசித்து பயிற்சி பெறும்போது எடுக்கப்பட்ட படமே இது. தம்பிடித்த அதே சமயம் இதம் பதம் தவறாமல் வாசிக்க வேண்டுமாம். மூச்சுமுட்டும் வேலைதான். என்னதான் நவீன கருவிகளாக இருந்தாலும் அந்தக் கால தாரை, தம்பட்டம், கொம்பு, சங்கு போன்ற ரகங்களில்தானே இருக்கின்றன.

## புதிய ரக ஊதுகுழல்





படிப்பகம்

* 'ஒன்ஸ்மோர்' படத்தைத் தொடர்ந்து, கஸ்தூரி ராஜா இயக்கும் 'என் ஆச ராசாவே' படத்தில் நடிக்கவுள்ளார் நடிகர் திலகம். இந்தப் படத்தில் நடிகர் திலகம் தெருக்கூத்துக் கலைஞராக நடிக்க விருக்கிறார்.

* முக்தா சீனிவாசன் மகன் முக்தா சுந்தர் தற்போது 'கண்களின் வார்த்தைகள்' என்ற படத்தை இயக்கி வருகிறார். இதற்கு முன்னர் இவர் 'கோடை மழை' என்ற படத்தை இயக்கியுள்ளார்.

* சென்ற ஆண்டின் சிறந்த நடிகைக்கான தேசிய விருது 'மாச்சிஸ்' என்ற இந்திப் படத்தில் நடித்ததற்காகத் தபுவிற்குக் கிடைத்தது. தற்போது 'மாச்சிஸ்' தமிழில் 'தீப்பொறி' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டு வருகிறது.

## மினி சினி

* முதன் முறையாக மலையாளப்படமொன்றில் கதாநாயகியாக நடிக்கவிருக்கிறார் சுவலட்சுமி. முன்னணி மலையாள நடிகர் ஒருவரான திலீப் ஹீரோவாக நடிக்கும் இப் படத்திற்கு இளையராஜா இசையமைக்கிறார்.

* கேபாலச்சந்தர் 'நேருக்கு நேர்' படத்தை அண்மையில் பார்த்தார். அதில் நடித்துள்ள சிவகுமாரின் மகன் சூர்யாவைப் பாராட்டி விட்டுத் தனது அடுத்த படத்திற்கு அவரை கதாநாயகனாக ஒப்பந்தம் செய்துவிட்டார்.

* 'லவ்பேர்ட்ஸ்' படத்தில் இடம்பெற்ற 'சம்பா... சம்பா' என்று தொடங்கும் பாடலைப் பாடியவர் அஸ்லம் முஸ்தபா. இவர் அண்மையில் 'எக்ஸ்கியூஸ் மீ' என்ற அல்பம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

* கமல் 'அவ்வை சண்முகி' படத்தை இந்தியில் 'சுதிரி 420' என்ற பெயரில் தயாரித்து, இயக்கி, நடித்து வருகிறார் என்பது தெரிந்ததே. சமீபத்தில் இப்படத்திற்காக கமல், ஆஷா போன்ஸ்லேயுடன் இணைந்து பாடலொன்றைப் பாடியுள்ளார்.

* சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் 'ஆஹா' படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகும் சுலேகா,- அந்தப் படம் வெளிவருவதற்குள் மூன்று கன்னடப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்.

* 'பூமணி' படத்தை அடுத்து 'பூந்தோட்டம்' படத்தையும் முரளியை வைத்தே இயக்கி வரும் மு.களஞ்சியம், இதற்கடுத்து நெப்போலியன் கதாநாயகனாக நடிக்கும் படத்தை இயக்கவுள்ளார்.

* 'லவ் டுடே' படத்தில் சுவலட்சுமியின் தோழியாக முஸ்லிம் பெண் வேடத்தில் நடித்தவர் சிநேகா. மக்கள் திலகத்தின் பல படங்களில் வில்லனாக நடித்த மறைந்த நடிகர் ஜஸ்டினின் மகள் தான் இவர்.

## கரணின் 'ஸ்டைல்'

மெல்ல மெல்ல கதாநாயகன் பதவியை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளத் தொடங்கி விட்டார் கரண். 'நம்மவர்' படத்தில் கமல் மூலம் வில்லனாக அறிமுகமாகிய கரண் 'காதல் கோட்டை' மூலம் புகழ் ஏணியில் ஏறினார். 'கலர் கனவுகள்' படத்தில் குஷ்புவின் ஜோடியாக நடித்துக்கொண்டிருக்கிறார்.


இப்போது மற்றொரு படத்தில் கதாநாயகனாக ஒப்பந்தமாகியுள்ளார். படத்தின் பெயர் 'ஸ்டைல்'. கரண் தவிர இப்படத்தில் மற்றொரு கதாநாயகன் சஞ்சீவ்குமார். 'காதல் பள்ளி' படத்தில் இவர் நடித்துள்ளார். ஸ்வேதா, சுப்ரஜா இருவரும் கதாநாயகிகளாக நடிக்கின்றனர்.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம், செந்தில், சார்லி, சின்னி ஜெயந்த், ஸ்ரீவித்யா ஆகியோரும் நடிக்கின்றனர். இயக்கம்: அபிமன்யு. இசை: சிற்பி. பாடல்கள்: வைரமுத்து.


## பக்த ரஜினி

ரஜினிகாந்த் ஆன்மீகத்தில் மலையளவு நம்பிக்கை உள்ளவர் என்பது தெரிந்த விஷயம் தான். கடவுள் பக்தியும் எக்கச்சக்கம்.

ரஜினிகாந்த் அருணாச்சலேஸ்வரரின் பக்தர் அதனால்தான் தனது படத்திற்கே 'அருணாச்சலம்' என்று பெயர் வைத்திருந்தார். 'அருணாச்சலம்' படத்தில் 'ருத்ராட்சை கொட்டை' ஒன்றுதான் ரஜினிக்கு உதவுகிறது. இப்போது அருணாச்சலேஸ்வரரின் ருத்ராட்சைக் கொட்டையை தன் கழுத்தில் அணிந்திருக்கிறார் ரஜினி. இதுவரை காலமும் கழுத்திலோ, கையிலோ எதையும் அணியாத ரஜினி இப்போது தான் முதல் முறையாக கறுப்புக் கயிற்றில் ருத்ராட்சைக் கொட்டையைக் கட்டி கழுத்தில் தொங்கவிட்டிருக்கிறார்.



ஜீவா
படம்: ஆசை



பாண்டியராஜன்-சங்கீதா
படம்: அட்ரா சக்கை அட்ரா சக்கை

முகப்பில்
ரம்பா
பாலகிருஷ்ணா

## பொய் பேசும் அரிச்சந்திரன்

அரிச்சந்திரன் கதையையே தலைகீழாக மாற்றப்போகிறார்கள். அன்றைய அரிச்சந்திரன் தலையே போனாலும் உண்மையைத் தவிர வேறொன்றும் பேசாதவன். உயிரே போனாலும் உண்மை பேசாத ஒரு நவீன அரிச்சந்திரனை திரையில் காட்டப் போகிறார்கள். நவீன அரிச்சந்திரனாக நடிக்கப்போகிறவர் கார்த்திக். படத்தின் பெயர்: 'அரிச்சந்திரா' கார்த்திக் ஜோடி மீனா.

சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிக்கும் அரிச்சந்திராவை இயக்கப்போவது செய்யாறு ரவி. இசை: இளையராஜா. ரகுவரன், வடிவேலு, நாகேஷ், விவேக், ஜனகராஜ் ஆகியோரும் நடிக்கிறார்கள். முழுக்க முழுக்க நகைச்சுவையை அள்ளிவழங்கக் கூடியதாக கதை பின்னப் போகிறார்களாம்.


மன்சூர் அலிகான்-கீர்த்தனா
படம்: வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு

## நக்மாவுக்குத் தடை

'பிஸ்தா' படத்தின் அமோக வெற்றியின் பின்னர் நக்மா-கார்த்திக் ஜோடிக்கு மவுசு ஏறியது. இருவரும் தொடர்ந்து இணைந்து நடித்திருந்தால் குறைந்தது அரை டஜன் படங்களில் இப்போது ஜோடியாக நடித்துக் கொண்டிருப்பார்கள். நக்மாவுக்கு அவரது ஆசைக் காதலர் கொடுத்த நிர்ப்பந்தம்தான் தொடர்ந்து இணைய முடியாமைக்கு காரணமாம்.

நக்மாவின் காதல் நாயகரான அந்தக் ஹீரோவுக்கு கார்த்திக் பற்றி நன்கு தெரியுமாம். ஒரு காலத்தில் கார்த்திக்கை வைத்து ஒரு படமும் சொந்தமாகப் படம் தயாரித்தவர் அவர். அப்போதே கார்த்திக்கின் திருவிளையாடல் அத்துப்படியாம். அதுதான் நக்மாவை கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார். "எப்போதாவது இணைந்து நடித்தால் போதும், தொடர்ந்து நடித்தால் வதந்திகள் வரும், என் மனம் நோகும்" என்று பக்குவமாய் எடுத்துச் சொல்லிவிட்டாராம்.

இந்த விடயம் எப்படியோ கார்த்திக் காதுக்கு எட்டியதாம். எட்டவைத்ததும் நக்மாதானாம். போனால் போகட்டும் போடா ஸ்டைலில் சிரித்தாராம் கார்த்திக்.

## ஜீவாவின் கொள்கை

எத்தனையோ படங்களில் நடித்தும் தனக்கொரு தனியிடம் கிடைக்கவில்லையே என்று ஏங்குகிறார் நடிகை ஜீவா. சமீபத்தில் வெளியான ஒன்ஸ்மோர் படத்திலும் சற்றுத் தாராளமாகவே நடித்திருந்தார். இயக்குநர் விரும்பும் எல்லைவரை கவர்ச்சிகாட்டத் தயார் என்பதுதான் ஜீவாவின் தாராளமயக் கொள்கை.

தற்போது 'ஆசைத்தம்பி' படத்தில் நடித்துவருகிறார். அதிலும் கவர்ச்சி வேடம்தான். ஜீவாவின் உடல் அமைப்பைப் பார்த்த அப்பாஸ் "நீங்க மொடலிங் துறையில் இருந்திருந்தால் எங்கோ போயிருப்பீங்க?" என்றாராம். அப்பாஸ் புகழ்ந்ததால் உருகிப் போய்விட்டார் ஜீவா.

## காதோடு சொல்லுகிறோம்

இரண்டெழுத்தில் பெயர் உள்ள மனோகரமான தமிழ் சினிமா பின்னணி பாடகரின் குரலை புதிய படங்களில் அதிகம் கேட்டிருக்கமாட்டீர்கள். ஊர் உலகில் உள்ள சகல கெட்ட பழக்கங்களையும் ஒன்றுவிடாமல் தெரிந்தும், கற்றும் வைத்திருக்கிறாராம். அதனால் தான் அவருக்கு வாய்ப்புக் கொடுக்க இசையமைப்பாளர்கள் தயங்குகிறார்களாம்.

சங்கீத நடிகையின் வீட்டில் ஒரே அடிதடியாம். கிராமராஜனையோ, அல்லது தன் பின்னால் அலையும் தொழிலதிபரான இளைஞர் ஒருவரையோ திருமணம் செய்து கொண்டு ஒதுங்கிப்போக விரும்புகிறாராம் நடிகை. தாய்க்குலம் அதனை அடியோடு விரும்பவில்லையாம். அதுதான் அடிதடி. எங்குபோய் முடியமோ?

கஸ்தூரமான நடிகைக்கு இங்கிலீசில் பேசுவது என்றால் கொள்ளைப் பிரியம். 'நான் படித்துவிட்டு நடிக்க வந்தவளாக்கும்' என்று பந்தா பண்ணுவதில் கில்லாடியாம். இவரது லொள்ளுத் தாங்காமல்தான் சில நடிகர்கள் இவரைத் தங்கள் படங்களில் நடிக்க சிபாரிசு செய்வதில்லையாம்.

ஜெயலலிதாவை ஒரு கை பார்க்கிறேன் என்று அரசியலில் குதித்துள்ள அந்த இரண்டெழுத்து நடிகையால் அவர் சேர்ந்துள்ள கட்சிக்குள் உள்ள சில பிரமுகர்களுக்கிடையே பூசல்கள் தோன்றியிருக்கிறதாம். மாலையானால் போதும் லலல்லா என்று உற்சாக பான மயக்கத்திற்கு சென்றுவிடுகிறாராம். அந்த நேரம் பார்த்து அவருடன் அரசியல் பேசச் செல்லும் பிரமுகர்களுக்கு இனிப்பான உபசாரம் கிடைக்கிறதாம்.

## ரோஜாவின் ஆசை

நடிகைகளுடன் சேர்ந்து நின்று புகைப்படம் எடுக்க ரசிகைகள், ரசிகர்கள் ஆசைப்படுவார்கள்.

நடிகைகளும் அப்படி ஆசைப்படுவதுண்டு. நடிகை ரோஜா ஸ்ரீதேவியின் பரம ரசிகை. அவருடன் ஒரு படத்திலாவது சேர்ந்து நடிக்க விரும்பியிருந்தார். ஸ்ரீதேவி திருமணம் செய்து கொண்டு படவுலகுக்கு டாட்டா காட்டிவிட்டதால் ரோஜாவின் கனவு உதிர்ந்துபோனது.

சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் ஸ்ரீதேவியைக் கண்டதுதான் தாமதம், ஓடிப்போய் அருகில் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டாராம் ரோஜா. ஆசையில் பாதி நிறைவேறியது.

## அஜித் குத்துக்கரணம்

காதல் விவகாரங்கள் முதல் கால்ஷீட் விவகாரம் வரை அஜித் செய்துவரும் குளறுபடிகள் ஏராளம். அதனால் பல படவாய்ப்புக்கள் அவர் கையைவிட்டு போய்விட்டன. அஜித் பெயரைக் கேட்டாலே தயாரிப்பாளர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடுகிறார்கள்.

இதற்கிடையே தமிழ்ப்பட உலக படைப்பாளிகள், தொழிலாளர்கள் பிரச்சனையிலும் நிலையில்லாமல் தடுமாறுகிறார் அஜித்.

முதலில் படைப்பாளிகள் பக்கம் நின்றார். பின்னர் கமலுடன் சேர்ந்து "தொழிலாளர்கள்தான் என் உயிர்" என்று அறிக்கைவிட்டார் அஜித். சமீபத்தில் மறுபடியும் படைப்பாளிகள் பக்கம் தாவியிருக்கிறார்.


www.padippakam.com
படிப்பகம்

# நடிகரைப் பகைத்து சரிந்துபோன நடிகை பிரபலமாகி இன்று காணாமல் போனவர்

'இயக்குநர் திலகம்' இயக்கிய படமொன்றில் அறிமுகமாகிய இந்த நான்கு ... பிரமிளமான நடிகை 'இயக்குநர் சிகரம்' இயக்கிய படத்தில் நன்கு ... கேற்ற'மாகிப் புகழ்பெற்றார்.

...றிமுகமான முதல் படத்திலேயே முத்துராமனுடன் படுக்கை அறைக்காட்சி ... நெருக்கம் காட்டியவர் இந்த நடிகை. 'இயக்குநர் சிகரத்தின்' படத்தில் ...டையின்றி குப்புறப்படுத்திருப்பதுபோல துணிந்து நடித்து பரபரப்பூட்டினார். ...றிமுக இயக்குநரின் மற்றொரு படம் ஒன்றில் இந்த நடிகை நடித்தபோது ...மொழிகளிலும் பிஸியாக இருந்தார். அதனால் அறிமுக இயக்குநர் ...ற்கே கால்ஷீட் கொடுப்பதற்கு பிரச்சனை ஏற்பட்டது.

...தற்கு காரணம் நடிகையின் தாயார். "இப்போது என் மகள் புகழ் பெற்ற ... இந்த புகழுக்கு அடிப்படை நீங்கள்தான் என்றாலும், நல்ல சம்பளம் ...க்கலாமே. முதல் படத்தில் கொடுத்த சம்பளத்தையே கொடுத்தால் ...?" என்று கேட்டிருக்கிறார்.

...ரி நேரில் வாருங்கள். பேசிக் கொள்ளலாம்" என்று இயக்குநர் ...ந்திருக்கிறார்.

...யக்குநர் இருந்த ஸ்டூடியோவுக்கு மகளுடன் அம்மாவும் போயிருக்கிறார். ... இயக்குநரோடு அவரது சகோதரரும் (தயாரிப்பு விஷயங்களை அவர் கவனிப்பார்) இருந்திருக்கிறார். கால்ஷீட் விவகாரம் குறித்து சகோதரர் ...விடம் பேசிக்கொண்டிக்கையில், இயக்குநர் நடிகையைப் பார்த்த மகிழ்ச்சியில் ... தோள்மேல் கைபோட்டபடி தனியே அழைத்துப்போனார்.

...ங்கே சகோதரர் நடிகையின் அம்மாவோடு முதலில் சாதாரணமாகப் ...கொண்டிருந்தார். நாம் அறிமுகப்படுத்திய நடிகையின் அம்மாதானே ...இளக்காரத்தில் மரியாதைக் குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்த, ...புகழ்பெற்ற நடிகையின் அம்மா' என்ற எண்ணத்தில் அவரும் காரமாகப் ...வார்த்தைகள் தடிதடியாக வந்து விழுந்தன.

...டத்தட்ட அடிதடி அளவுக்கு நிலமை மோசமானது. அவர்கள் போட்ட ...ல் ஸ்டூடியோவில் உள்ளவர்கள் எல்லாம் திரண்டுவிட்டனர்.

...து நேரம் தமது அறிமுக நடிகையுடன் குஷாலாக இருக்கலாம் என்று ... போன இயக்குநருக்கு, வெளியே ஏதோ பெரும் கலவரம் நடப்பதுபோலச் ... கேட்க பதற்றத்தோடு வெளியே ஓடிவந்தார்.

...தே பதற்றத்தோடு பிரமிளமான நடிகையும் ஓடிவர, வெளியே இருப்பவர்கள் ...ம் தன்னை ஒரு மாதிரியாகப் பார்ப்பதை உணர்ந்தார். அலங்கோலமான ...ல் ஆடைகள் இருந்ததை கவனித்த நடிகை அறை ஒன்றுக்குள் ஓடி சரி ...கொண்டு வந்தார்.

... ஜாலி 'மூட்'டை சகோதரர் கெடுத்து விட்டாரே என்ற ...தில், இயக்குநர் தன் சகோதரருடன் சண்டைபோட்ட ...யையும், அவரது அம்மாவையும் பத்திரமாக திருப்பி ... ஏற்பாடு செய்தார். விருந்தில் விபரீதம் ...சம்பாதித்த பணத்தை பத்திரமாக முத ...செய்ய நினைத்த பிரமிளமான ... கோவை அருகே ...கு பயன்படும் ... பெல்ட் ...கும் சிறு ...ச்சாலை ...தொடக்...

அது சரியாக நடத்தப்படவில்லை.

அதனால் சினிமாவுக்கு தொடர்பில்லாத ஒருவரை மணந்துகொண்டார். அப்படியே சினிமாவைவிட்டு ஒதுங்கலாம் என்று பார்த்தார். மணவாழ்க்கையும் சரியாக அமையவில்லை.

மீண்டும் சினிமாவில் நடிக்க வந்தார். பெரிய நடிகர் ஒருவரின் மருமகளாக ஒரு படத்திலும், சோரம்போன மனைவியாக ஒரு படத்திலும் நடித்தார்.

அந்த நடிகரின் சொந்தப் படமொன்றில் நடிக்க வெளிநாடு போனார். போன இடத்தில் தன்னை மன்னர் பரம்பரை என்று நடிகர் அறிமுகம் செய்து கொண்டார். அங்குள்ள வி.ஐ.பி.க்கள் ஒழுங்கு செய்த விருந்திலும் கலந்து கொண்டார்.

விருந்து ஏற்பாடு செய்த வி.ஐ.பி.க்கள் சபலிஸ்டுக்களாக இருந்தனர். அவர்களை திருப்தி செய்ய வேண்டும் என்பதற்காக பிரமிளமான நடிகையை அவர்களுக்கு 'கம்பனி' கொடுக்கச் சொன்னார்.

நடிகையோ, "நான் அயல்நாடு வந்தது உங்களது படத்தில் நடிப்பதற்காக. நீங்கள் கை காட்டுபவர்களுக்கு படுக்கை விரிப்பதற்கல்ல" என்று சொல்ல, நடிகருக்கு அது அவமானமாகிவிட்டது.

## மாட்டிவிட்டார் நடிகர்

தாயகம் திரும்பியதும் நடிகையின் நடவடிக்கைகளைக் கண்காணித்துக் கொண்டிருந்த நடிகர், சமயம் பார்த்து போலிசுக்கு தகவலொன்றைச் சொன்னார். அதன்படி நடிகையின் வீட்டுக்குச் சென்ற பொலிஸ், நடிகை விபச்சாரம் செய்ததாக நீதிமன்றத்தில் நிறுத்தியது. (பத்திரிகைகளிலும் பெரிதாக செய்தி வந்தது) பிரபல நடிகை ஒருவர் விபச்சாரம் செய்ததாக பகிரங்கப்படுத்தப்பட்டது அதுவே முதல் முறை. நடிகையின் வாழ்க்கை அத்தோடு சரிந்து போனது.

பின்னர் மலையாளப் படங்களில் நடிக்கப்போன நடிகை அங்கு சரியான வேடம் அமையாமல் செக்சியான வேடங்களில், படுக்கையறைக் காட்சிகளில் நடிக்கத் தொடங்கினார். அப்படியே முத்திரை குத்தப்பட்டு விடுவோமோ என்று பயந்து மீண்டும் தமிழின் பக்கம் வந்தார். எந்த வேடமானாலும் நடிக்கிறேன் என்று வில்லியாக நடித்தார்.

தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் வீடுகளுக்கு போனால் பிரச்சனை என்று, படப்பிடிப்பு நடைபெற்ற இடங்களுக்கு சென்று, 'தான் எதற்கும் தயார்' என்றரீதியில் வாய்ப்புக் கேட்டார். அவரது அணுகுமுறையைக் கண்டு ஒதுங்கியவர்கள், பதுங்கியவர்கள் உண்டு. தங்கள் பலவீனத்துக்கு பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புக் கொடுத்தவர்களும் உண்டு.

தவறான முத்திரை குத்தப்பட்ட பின் வருமானத்திற்காக அந்தத் தவறையே தொழிலாகச் செய்தபோது மறுபடி விபச்சாரக் குற்றத்தில் கைதானார். அதற்குபின் யாரும் அவரை நடிக்க அழைக்கவில்லை.

மலையாளத்தில் சொந்தமாக 'செக்ஸ்' படமொன்று எடுத்துப் பார்த்தார். நிம்மதி எல்லாம் போனது. இன்று எங்கோ ஒரு மூலையில் இருக்கிறார்.



ஜெகபதிபாபு-மகேஸ்வரி
படம்: பென்லி (தெலுங்கு)

...ந்திப்பு வாயளவில் மட்டும் ... ரசிகர்களையும், ரசிகை... ...ழாமல், ரசிகர்கள்மீது உண்மையான ...திருக்கிறார் விஜய். ...ிற்றுக்கிழமை தோறும் ...ல் காலை 11 ...தியம் ஒரு ...சிகர்களை ...னம்விட்டு ...ார் விஜய் ...சேர்ந்து ... படமும் ...கொள்...

## வில்லங்கமான ஒரு கேள்வி

நடிகை கஸ்தூரியிடம் தமிழக சஞ்சிகை ஒன்று கேட்டிருந்த வில்லங்கமான கேள்விகளுக்கு அவர் கொடுத்துள்ள நச் நச் பதில்.

**கே: ஒரு வட இந்திய சினிமா பத்திரிகையில் பழைய நடிகை ஒருத்தர் சொல்லியிருந்தாங்க, "படுக்கை என்பது ஒரு நடிகைக்கு தவிர்க்க முடியாத விஷயம்" என்று. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

க: ஒவ்வொரு தொழிலுக்கும் அதுக்கே உரிய குணாம்சங்கள் உண்டு. கிரிக்கெட்டில் எத்தனை வதந்திகள். பெட்டிங் பண்ணினாரு, நாட்டுக்கு துரோகம் பண்ணினாரு, நடிகை பின்னாடி அலைஞ்சாரு என்றெல்லாம் எத்தனை செய்திகள். டயானா கிஸ் பண்ணின சீனை இன்டர்நெட்டில் நானே தேடித் தேடிப்பார்த்தேன். ஸோ, சினிமாவில் இதையெல்லாம் எப்படி தவிர்க்க முடியும் மற்றத் துறைகளில் இருப்பதுபோலத்தான் இங்கும் 'செக்ஸ்' இருக்கிறது. மனித வீக்னஸ் என்பது பொதுவானது.



கார்த்திக்-நக்மா
படம்: பிஸ்தா

## தேவாவின் தொழில் பக்தி

தமிழ், கன்னடம், தெலுங்கு என்று மும்மொழிகளிலும் இசையமைத்து வருகிறார் தேவா. மூன்று மொழிப் படங்களுக்கும் எப்படி நேரம் ஒதுக்குகிறார்? ஒவ்வொரு படத்திற்கும் இத்தனை நாள் என்று திட்டமிட்டு அதற்குள் இசையமைத்து முடித்துவிடுகிறாராம். இதனால் இழுத்தடிப்பு இல்லாமல் வேலையை முடிக்கக் கூடியதாக உள்ளதாம்.

"என்னைப் பொறுத்தவரையில் எப்போதுமே இசை... இசை... இசை... என்று இசைக்காகவே வாழ்பவன். அதுதான் என்னுடைய உலகம். நாம் செய்யும் தொழிலில் அதிக கவனம் வைத்தால்தான் அந்தத் தொழில் மூலம் நல்லவை கிடைக்கும்" என்கிறார் தேவா. தற்போது அவர் கைவசம் இருபது படங்கள் இருக்கின்றன.

## எதிர்பார்ப்பு

செங்கோட்டை, சுபாஸ், அடிமைச் சங்கிலி என்று மூன்று படங்களும் தொடர்ந்து தோல்வி கண்டதால் அர்ஜுன் மார்க்கெட் சரிவு கண்டிருக்கிறது. இது ஒன்றும் அவருக்கு புதுமையல்ல. முன்பும் மார்க்கெட்டில் சரிவு ஏற்பட்டு பின்னர் நிமிர்த்திக் கொண்டார்.

தனது இயக்கத்தில் அடுத்து வரவுள்ள தாயின் மணிக்கொடி படத்தைத்தான் அர்ஜுன் புளியங்கொப்பாக நினைத்திருக்கிறார். படம் வந்தால்தான் வசூல் கொட்டுகிறதா, அல்லது மார்க்கெட்டை மேலும் முட்டிச் சரிக்கிறதா என்று தெரியும்.

## பறந்தார் அப்பாஸ்

வி.ஐ.பி. படவெற்றியால் அப்பாஸைவிட பிரபு தேவாதான் அதிக பலன் அடைந்திருக்கிறார். புதிய பட வாய்ப்புக்கள் ஏராளமாகக் குவிகிறதாம். அப்பாஸ் மார்க்கெட் அப்படி ஒன்றும் சரிவு காணவில்லை. நல்ல நிலையில்தான் இருக்கிறது. ஆனாலும் புதிய வாய்ப்புக்கள் அதிகம் வரவில்லையாம்.

அதனால் இந்தியில் வந்த வாய்ப்புக்களையும் ஒப்புக்கொண்டுள்ளார் அப்பாஸ். மும்பாய்க்கு பறந்து போயிருக்கிறார். அவர் பின்னாலேயே பறந்து போயிருப்பவர் யார் தெரியுமா? நீங்கள் நினைத்தது சரிதான், சிம்ரான்!

## உடன்பிறவா சகோதரிகள்

தேவயாணி, மந்த்ரா இருவரும் இணைந்து நடித்த படம் 'பெரிய இடத்து மாப்பிள்ளை'. ஹிட்டாக ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படத்தில் இணைந்து நடித்த போது இருவரும் உயிர்த்தோழிகளாக மாறிவிட்டனராம்.

எலியும் பூனையுமாக இருக்கும் நடிகைகள் மத்தியில் இவர்கள் நட்பு வித்தியாசமாக இருக்கிறதாம். உடன்பிறவாச் சகோதரிகளாக தொடர்ந்து பழகிவருகிறார்களாம்.

## அடுத்தது யாருக்கு

ரஜினியின் அடுத்தபடம் யாருக்கு? விக்ரமனுக்குத்தான் என்கிறது சினிமா உலக பட்சி.

விக்ரமனின் 'பூவே உனக்காக' படத்தைப் பார்த்ததில் இருந்தே விக்ரமனுக்குத் தனது படமொன்றைக் கொடுக்க வேண்டும் என்று ரஜினி முடிவு செய்திருந்தார். இப்போது 'சூரியவம்சம்' நன்றாக ஓடுவதால், விக்ரமனுக்குத் தனது படத்தைக் கொடுக்க முடிவு செய்துவிட்டார் என்கிறார்கள்.

இது விஷயம் விக்ரமனுக்குச் சொல்லப்பட்டு, ரஜினிக்காக கதை விவாதத்தில் இருந்து வருவதாகத் தகவல். ஆனாலும் ரஜினியே தன் வாயால் உறுதிப்படுத்தினால்தான் உத்தரவாதம். அதுவரை சஸ்பென்ஸ்தான்.

## பாலகிருஷ்ணா ரெடி

ஆந்திர முன்னாள் முதல்வரும், பிரபல நடிகருமான என்.டி.ராமராவின் மகன்தான் பாலகிருஷ்ணா. தெலுங்கு படவுலகில் வெற்றிக் கொடி நாட்டியுள்ள பாலகிருஷ்ணா விரைவில் தமிழ்ப் படம் ஒன்றிலும் கதாநாயகனாக நடிக்கப்போகிறார். (முரசின் முகப்பில் இருப்பவர்தான் பாலகிருஷ்ணா)

பாலகிருஷ்ணா தெலுங்கில் நடித்த பல படங்கள் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெற்றிபெற்றிருந்தன. 'விஜயபிரதாபன்' என்றொரு படம் தமிழில் மொழி மாற்றப்பட்டிருந்தது. பாலகிருஷ்ணா நடித்த அப்படம் 'கம்யூட்டர் கிராபிக்ஸ்' வித்தைகள் மூலம் தமிழ்ப் பட ரசிகர்களிடம் பலத்த வரவேற்பையும் பெற்றிருந்தது.

தெலுங்கில் இருந்து ஏற்கனவே தமிழுக்கு வந்துள்ள முன்னணி நாயகன் நாகார்ஜுனா. படம் ரட்சகன். அடுத்து வரப்போகும் தெலுங்கு முன்னணி நாயகன் பாலகிருஷ்ணாதான். மலையாளத்தில் இருந்து மம்முட்டி, மோகன்லால், ஜெயராம் என்று பல நாயகர்கள் தமிழுக்கு வந்து வெற்றிக்கொடி நாட்டியுள்ளனர்.

லேடீஸ் ஸ்பெஷல்

# தேனீர் பிரியர்கள் கவனிக்கவும்

காலையில் கண்விழித்தவுடன் காபி அல்லது தேனீர் பருகாவிட்டால் அன்றையப் பொழுது விடிந்த பொழுதாக ஆகிவிடாது. காலைக் கடன்களை முடிப்பதே அவர்களுக்கு சிரமமாகப் போய்விடும். உண்மையில் காபியும் ரீயும் நமக்கு நன்மை புரிவதைவிட தீமையையே விளைவிக்கின்றன.



காபியும் தேனீரும் பருகிய சற்று நேரத்துக்கெல்லாம் நமது நரம்புகள் புடைத்தெழுகின்றன: புத்துணர்ச்சி தோன்றி நம்மை உற்சாக மூட்டுகின்றன. ஆனால் எவ்வளவுக்கெவ்வளவு எமது உணர்வுகள் உற்காக மடைகின்றனவோ அதைவிடப் பன்மடங்கு நமது நரம்பு மண்டலம் பாதிப்படைகிறது. காபி-டீ அருந்தி இருமணி நேரத்துக்குள் நமக்கு அயர்வு ஏற்பட்டுவிடுகிறது.

மீண்டும் ஒரு காபியோ அல்லது டீயோ உள்ளே போனால் தான் பழையபடி உற்சாகம் ஏற்படுகிறது. இவ்வாறு நமது நரம்புகள் தூண்டப்படுவதும் செயலிழந்துபோவதும் மாறி மாறி நிகழ்வதால் விரைவில் நிரந்தரப் பாதிப்பு தலை எடுத்துவிடுகிறது.

காபியிலும் டீயிலும் 'கஃபீன்' எனும் நஞ்சு சேர்ந்திருக்கிறது. இது உடலில் மெல்ல மெல்லச் சேர்ந்து பின்னாளில் வேண்டாத விளைவுகளை ஏற்படுத்திவிடுகிறது.

இரவில் தூக்கமின்மை தலைவலி, உடலில் கொழுப்பின் அளவின் சேர்க்கையில் பாதிப்பு, இரத்தத்தில் சீனித்தன்மையை அதிகரித்தல், உயர் இரத்த அழுத்தம், இருதய நோய்கள், மலட்டுத்தன்மை போன்றவற்றை உண்டாக்கும்

சாதாரணமாக ஒருவர் 3 கோப்பை காப்பி அல்லது டீக்குமேல் அருந்துதல் கூடாது. இரத்த அழுத்தம், இருதயநோய் மற்றும் நீரிழிவு போன்ற நோய்கள் உள்ளவர்களும் சிறு நீரகப் பிரச்சனை உள்ளவர்களும் காபி மற்றும் டீ குடிப்பதை கட்டோடு நிறுத்தி விடுவதே நல்லது.

கள்ளு, சாராயம் போன்றவற்றை உட்கொள்ளப் பழகியவர்கள் உடனடியாக அப்பழக்கத்தை விட்டுவிட்டால், தலைவலி, நரம்புத் தளர்ச்சி போன்ற துன்பங்களுக்கு ஆளாக வேண்டி ஏற்படும். அதுபோலவே காபி, டீ பாவிப்போரும் திடீரென அப்பழக்கத்தை நிறுத்திக்கொண்டால் சிறுசிறு தொல்லைகளுக்குட்படவேண்டி வரும். ஆகவே பழக்கத்தைப் படிப்படியாகக் குறைப்பதே நல்லது. தண்ணீரை வேண்டிய அளவு பருகலாம்.

300 மில்லி கிராம் 'கஃபீன்' தினசரி உட்கொள்வதே அதிகம் என்று மேலைத்தேய ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். காபி-தேனீர் ஆகியவற்றில் எவ்வளவு 'கஃபீன்' இருக்கிறது என்பதை இவ்வட்டவணை காட்டுகிறது:

| பதார்த்தங்கள் | கஃபீன் | அளவு |
|---|---|---|
| உடன் கரையும் காபி (INSTANT COFFE) | ஒரு கோப்பை | 60-100 மி/கிராம். |
| வறுத்துத் திரித்த காபி | ஒரு கோப்பை | 80-150 மி/கிராம் |
| கஃபீன் நீக்கிய காபி | ஒரு கோப்பை | 3-6 மி/கிராம். |
| சாயமாக வடித்த தேநீர் | ஒரு கோப்பை | 60-100 மி/கிராம். |
| உடன் கரையும் தேநீர் | ஒரு கோப்பை | 80-100 மி/கிராம். |
| சொக்கலேற் பானம் | ஒரு கோப்பை | 50 மி/கிராம் வரை. |
| கோலா பானங்கள் | ஒரு கோப்பை | 15-40 மி/கிராம். |
| சொக்கலேற் பால் | ஒரு கோப்பை | 120 மி/கிராம். |

## தண்ணீரும் மருந்தாகும்

சில வேளைகளில் உடலில் நீர்த்தன்மை மிதமிஞ்சிய அளவில் குறைந்து விடுகிறது. அப்போது செயலாற்றும் நிலை இழந்து மந்த நிலை ஏற்பட்டு விடுகிறது. உடலில் நீர்த்தன்மை வற்றுவதனால் இரத்த ஓட்டத்தின் வேகம் குறைந்துவிடுகிறது. இதனை நிவர்த்திசெய்ய போதுமான அளவு நீர் அருந்துவதே ஒரே வழியாகும்.

தினசரி 8முதல் 10 தம்ளர் தண்ணீர் அருந்தினால் இரத்த ஓட்டம் எப்போதும் சீராக இருக்கும் என்றே ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பதனிடப்பட்ட பழச்சாறு அல்லாத செயற்கை முறைக் குளிர்பானங்களை அருந்துவதால்- அருந்திச் சிறிது நேரத்தில் தாகம் அதிகரிக்கவே செய்யும். ஆகவே கொதித்து ஆறிய நீருக்கு நிகராக எதையும் சொல்வதற்கில்லை.

சீரகம் ஒரு மேசைக் கரண்டி அளவு எடுத்து ஒரு அளவான மண் பானையில், தண்ணீர் கொதிக்க வைக்கும்போது அதில் போட்டு, கொதித்து ஆறியபின் குடித்து வந்தால் உடல் உஷ்ணத்தைச் சமப்படுத்தும் என்பது கேரளநாட்டு மருத்துவர்களின் நம்பிக்கை.

கேரளாவில் சாதாரணமாக ஒவ்வொரு வீட்டிலும் இந்த 'ஜீரா வெள்ளம்' (சீரகத் தண்ணீர்) எப்போதும் பருகப்படுகிறது.

## வெற்றி பெற்றவர்



முரசின் பட்டுச்சேலைப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்தான்: எஸ். கிறிஸ்டீனா 10, கிருஸ்ணன் கோயில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை CJ

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 27-09-1997

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

## டயானாவின் வாழ்க்கையில்

புவனா

உலகிலேயே மக்களை அதிகம் கவர்ந்த ராஜகுடும்பம் பிரிட்டிஷ் அரச குடும்பம்தான். உலகின் பல நாடுகளை அடிமைப்படுத்தி அங்கிருந்த வளங்களைச் சுரண்டிய நாடு பிரிட்டன்.



சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் என்று ஆதிகத் திமிருடன் தன்னை அழைத்துக்கொண்ட நாடல்லவா?

அதனால் பிரிட்டன் ராஜகுடும்பத்தில் நடைபெறும் செய்திகள், ஏனைய நாட்டு ராஜகுடும்பச் செய்திகளைவிட பல நாட்டு மக்களால் ஆர்வத்துடன் கவனிக்கப்பட்டன.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் 1950களில் ஒரு புயல் வீசியது. எலிஸபெத் மகாராணியின் தங்கை மார்க்ரெட், கப்டன் பீட்டர் என்பவரை காதலித்தார்.

பீட்டர் ஏற்கனவே திருமணமாகி விவாகரத்து செய்திருந்தார். பீட்டரை தனது தங்கை மணப்பது தங்கள் தகுதிக்கு குறைவானது என்று போர்க்கொடி உயர்த்தினார் எலிஸபெத் மகாராணி.

மார்க்ரெட்டும் பீட்டரும் நெருங்கிப் பழகியிருந்தனர். காதல் லீலைகளிலும் கரை கண்டனர். எனினும் எலிஸபெத்தின் தடையை மீறி பீட்டரைக் கைப்பிடிக்க மார்க்ரெட்டால் முடியவில்லை.

மாளிகைக்குள் அடைந்துகிடந்த மார்கரெட்டிற்கு தனிமை வதைத்தது. அரச குடும்ப புகைப்படக்காரரான அந்தோனி ஆம்ஸ்ட்ராங்க் என்பவர் மார்க்ரெட்டின் காதல் பார்வையில் சிக்கினார்.

அந்தப்புரத்துக்குள் மலர்ந்த காதல் இரகசியமான நெருக்கங்களுடன் வளர்ந்தது. பிரமாண்டமான பக்கிங்ஹாம் மாளிகைக்குள் தனிமையான சந்திப்புக்களுக்கா இடமில்லை? சந்தித்தனர்; தித்தித்தனர்; இறுதியில் மாட்டிக் கொண்டனர்.

வேறு வழியில்லாமல் மார்க்ரெட்டிற்கும் புகைப்படப்பிடிப்பாளருக்கும் திருமணம் செய்துவைக்கப்பட்டது. கப்டன் பீட்டரை திருமணம் செய்வதை எலிஸபெத் தடுத்தார் அல்லவா? அதற்கு பழிவாங்கத்தான் கப்டன் பீட்டரைவிட தகுதி குறைந்த ஒருவரை மார்க்ரெட் காதலித்து கைப்பிடித்தாராம்.

திருமணமானபின்னர் மார்க்ரெட்டுக்கும், ஆம்ஸ்ட்ராங்குக்கும் இடையே இருந்த தகுதி வேறுபாடுகள் தலைதூக்க ஆரம்பித்தன.

ஆம்ஸ்ட்ராங் வேறு இளம் பெண்களை நாடினார். மார்க்ரெட்டும் வேறு பல இளம் வாலிபர்களுடன் பொழுதைப் போக்கினார். இவர்கள் இருவரது காதல்லீலைகளும் பத்திரிகைகளில் புகைப்படங்களோடு வெளிவரத் தொடங்கின.

இறுதியில் மார்க்ரெட்டும், ஆம்ஸ்ட்ராங்கும் விவாகரத்துச் செய்து கொண்டனர். தன் தங்கையின் குணம் அறிந்த எலிஸபெத் மகாராணி ஒரு உத்தரவு போட்டார். "மார்க்ரெட் இன்னொரு திருமணம் செய்தால் அவருக்கு வழங்கப்படும் அரச நிதி கிடைக்காது," என்று அறிவித்தார்.

அதனால் மார்க்ரெட் மறுமணம் செய்து கொள்ளவில்லையே தவிர, காதல் லீலைகளை இரகசியமாகத் தொடரவே செய்தார்.

அதன்பின்னர் எலிஸபெத் மகாராணியின் மகள் இளவரசி ஆன் (இளவரசர்கள் சாள்ஸுக்கும், ஆண்ட்ரூவுக்கும் இடையில் பிறந்தவர்) கப்டன் மார்க் பிலிப்ஸ் என்பவரை மணந்துகொண்டார்.

இளவரசி ஆன் எதற்கெடுத்தாலும் குற்றம் காண்பவர். பொது இடங்களில்கூட தன் கணவரின் செயலில் குறைசொல்லத் தயங்கமாட்டார். கப்டன் மார்க் பிலிப்ஸ் சந்தேகப் பேர்வழி. இளவரசி ஆன் வேறு சிலருடன் உல்லாசம் அனுபவிப்பதாக சந்தேகப்பட்டார் மார்க் பிலிப்ஸ். எதிரும் புதிருமாக இருந்த இருவரும் இறுதியில் விவாகரத்து செய்து கொண்டனர்.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் அறிவுஜீவி என்று வர்ணிக்கப்பட்டவர் இளவரசர் சாள்ஸ். பக்கிங்ஹாம் மாளிகைக்குள் அடிக்கடி வந்துபோகும் கமீலா பார்க்கர் என்ற பெண்ணை சாள்ஸ் காதலித்தார். பிரிட்டிஷ் அரச குடும்பத்துக்கு வேண்டப்பட்ட பிரிகேடியர் பார்க்கரின் மனைவிதான் கமீலா.



கமிலா பார்க்கர்

அடிக்கடி மாளிகைக்கு வந்த கமீலாவும் இளவரசர் சாள்ஸும் மாளிகையின் அந்தப்புரங்களில் நெருக்கம் கண்டனர்.

இக்காலகட்டத்தில்தான் டயானாவையும் காதலிக்க ஆரம்பித்தார் சாள்ஸ். எலிஸபெத் மகா ராணியும் சாள்ஸுக்கு டயானா பொருத்தமானவர் என்று பச்சைக்கொடி காட்டினார்.

1981ம் ஆண்டு பத்திரிகைகளில் வர்ணப்படங்களுடன் அந்தச் செய்தி வெளியானது.

"இளவரசர் சாள்ஸ், டயானா ஸ்பென்சர் என்ற அழகிய இளம்பெண்ணை தன் மனைவியாகத் தேர்ந்தெடுக்கிறார்," என்பதே அந்த பரபரப்பான செய்தி.

பத்திரிகைகளில் டயானாவின் படத்தைப் பார்த்த பிரிட்டிஷ் மக்கள் உடனடியாகவே டயானாவின் இரசிகர்களாகிவிட்டனர். அந்தக் சாந்தக் கண்கள், தசை போடாத கட்டான உடலமைப்பு, நீண்ட கால்கள், சிரிக்கும் உதடுகள் என்று டயானாவின் இலட்சணங்கள் மக்களை வசீகரித்தன.

அப்போது ஆரம்பித்த பரபரப்புத்தான்.. அது தொடர்ந்து வளர்ந்து விசுவரூபமாகி டயானா மரணமாகும்வரை ஓயவேயில்லை.

டயானாவின் தலை அலங்காரம் முதல் டயானா என்னவிதமான காலணி அணிகிறாரோ அதுதான் 'ஃபாஷன்' என்னுமளவுக்கு டயானா மோகம் உலகெங்கும் புகுந்து கலக்கியது.

சாள்ஸ்-டயானா திருமணம் நடந்த சில நாட்களுக்குள்ளேயே உலகப் பத்திரிகைகளில் அதிகம் இடம்பெற்ற பெருமையை டயானா தட்டிக்கொண்டார். அப்போதெல்லாம் சமூக சேவை செய்ததும் இல்லை. சமூகம் பற்றி டயானா பேசியதும் இல்லை.

அழகு, ஆளுமை, பிரிட்டிஷ் குடும்ப மருமகள், ஜோடிப் பொருத்தம், கவர்ச்சியாக உடையணியும் பாணி என்பவற்றின்மூலம் டயானாவின் புகழ் ஓங்கியது.

டயானாவின் புகழோடு பிரிட்டிஷ் குடும்ப புகழும் வளர்வதுகண்டு பூரித்துப்போனார் மகாராணி. ஆடை அலங்காரம் முதல் காலணிவரை ஒரு டேஸ்ட்டோடு செய்யும் மருமகள்மீது மகாராணிக்கும் பிரியம் ஏற்பட்டது.

ஆனால் டயானாவுக்கோ பிரமாண்டமான பக்கிங்ஹாம் அரண்மனை ஆரம்பத்தில் பிரமிப்பையும், போகப்போக திகைப்பையும் ஏற்படுத்தியது. பல வாயில்கள், பல ஜன்னல்கள் கொண்ட பக்கிங்ஹாம் அரண்மனையின் உள்ளே எது எங்கே இருக்கிறது என்று பழக்கப்பட டயானாவுக்கு பல மாதங்கள் பிடித்ததாம்.

இளவரசர் சாள்ஸைப் பார்க்க கமீலா தொடர்ந்து வந்து போனார். ஆரம்பத்தில் அவரை குடும்ப நண்பி என்றே நினைத்தார் டயானா. பின்னர்தான் அவர்களது நெருக்கம் டயானாவுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இருவரையும் இசகுபிசகான தருணத்தில் டயானா ஒருநாள் கண்டுவிட சந்தேகம் உறுதியானது. இளவரசர் சாள்ஸுக்கும் டயானாவுக்கு முன்பாக தன் ஆளுமை குறைந்து வருவதாக ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டுவிட்டது.

டயானாவும், சாள்ஸும் எங்கு ஜோடியாகப் போனாலும் டயானாவிடம்தான் எல்லோரும் விழுந்து விழுந்து பேசினார்கள். கமராக்களும் டயானாவைத்தான் குறிவைத்தன.

### சாள்ஸ் அலட்சியம்

முதல் குழந்தை இளவரசர் வில்லியம் பிறந்த நேரத்தில் லேசாக ஏற்பட்டிருந்த விரிசல், இரண்டாவது குழந்தையான ஹரி பிறந்தபோது அதிகமாகியது.

இரண்டு பிள்ளைகளும் அம்மாவைப் போல பரட்டைத் தலையுடன் இருப்பதும் சாள்ஸுக்குப் பிடிக்கவில்லையாம். இரண்டாவதாக பெண் குழந்தை பிறக்கவில்லையே என்ற கோபத்தில் முகத்தை உர்ரென்று வைத்துக்கொண்டு டயானாவுக்கு கடுப்பை ஏற்படுத்தினாராம் சாள்ஸ்.

பிள்ளைகள் மீதான சாள்ஸின் வெறுப்புக்கு உதாரணமாக ஒரு சம்பவம் நடந்தது.

இளவரசர் வில்லியம் சற்று வளர்ந்த பின்னர், கோல்ஃப் விளையாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது தலையில் பலமாக அடிபட்டு இரத்தம் கொட்டியது. மகனை தூக்கிக்கொண்டு மருத்துவமனைக்கு ஓடினார் டயானா. அச் செய்தியைக் கேள்விப்பட்ட பின்னரும் ஜாலியாக நடன நிகழ்ச்சி ஒன்றை இரசித்துக்கொண்டிருந்தார் சாள்ஸ்.

பொறுக்கமாட்டாத டயானா ஒரு முறை சாள்ஸிடம் "நான் தற்கொலை செய்யப் போகிறேன்," என்று கூறியிருக்கிறார். ஆனால் சாள்ஸ் கொஞ்சமும் அசராமல், "ஏன் ஒநாய் மாதிரி கத்துகிறாய்?" என்று திட்டிவிட்டு குதிரையில் ஏறி சவாரிசெய்யப் போய்விட்டார்.

ஒருநாள் டயானா சொன்னபடி செய்துவிட்டார். மாடியிலிருந்து குதித்த டயானா அதிஷ்டவசமாக சிறுகாயங்களுடன் உயிர் தப்பினார். இந்த விடயம் சாள்ஸுக்கு தெரிவிக்கப்பட்டது. "அப்படியா?" என்று அலட்சியமாகக் கேட்டுவிட்டு குதிரைச் சவாரியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாராம்.

மற்றொருமுறை பிளேட்டை எடுத்து



இளவரசி மார்க்ரெட்

தன் மணிக்கட்டு நரம்பை துண்டிக்க டயானா முயற்சி செய்தாராம். பின்னர் ஒரு தடவை டயானாவை சாள்ஸ் கன்னத்தில் ஓங்கி அறைந்திருக்கிறார். உடனே டிரஸ்ஸிங் டேபிளில் இருந்த பேனாக்கத்தியை எடுத்து தன் கழுத்திலும் தொடையிலும் கீறிக் கொண்டார் டயானா. இரத்தம் குபு குபு வென்று கொட்டியும் சாள்ஸ் அசைந்து கொடுக்கவில்லை.

"இதெல்லாம் என்னை ஏமாற்றும் நாடகம்," என்று கூறிவிட்டுப் போய்விட்டார் சாள்ஸ்.

சாள்ஸ் அரண்மனைக்கு வராமல் வெளியே கமீலாவுடன் சுற்றத்தொடங்கினார். டயானாவின் தூக்கம் தொலைந்தது. இரவுகள் கண்ணீரில் கரைந்தன.

பக்கிம்ஹாம் அரண்மனை ஊழியர் ஒருவர் மூலமாக அதிர்ச்சியான தகவல் ஒன்றை அறிந்தார் டயானா. அவரால் நம்ப முடியவில்லை. திகைப்பூட்டும் அந்தரங்கம் அது.

(மிகுதி அடுத்த வாரம்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? டிக்கோயா வாசகிக்கு அதிஷ்டம்!

| | |
|---|---|
| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான். | சா. முத்துலட்சுமி<br>மே/பா. சா. மனோகரன்,<br>தரவளை கீழ் பிரிவு, டிக்கோயா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## சிந்தனைக்கு.....!



அரசன் சிறையினில்
ஆண்டி அரசினில்–
அற நெறி தவறின்
அப்படி அமையும்!
*
உன்னுயிர் வாழ
தன்னுயிர் ஈய்பவன்
தியாகி எனப்படுவான்;
தன்னலம் பேண
மன்னுயிர் வதைப்பவன்
எந்த வகைப்படுவான்?
*
செந்தணல் தீயினில்
வெந்து கருகிட
மைந்தர் பிறந்தனரோ?
அவனியில் அவனும்
உயர்ந்து வாழ்ந்திட
பெற்றவர் எண்ணினரோ?
*
இன்னும் தாமே
தலையென சொல்பவர்
தீர்வொன்றைக் கொள்ளாரோ?
காரணம் சொல்லியே
காலம் கடந்தால்
காரியம் ஆகிடுமோ?
*
மொழி வேறாயினும்
உயிர் ஒன்றேயென
உணர்தல் வேண்டுமன்றோ!
உயிர் போன பின்னாலே
திருப்பி எடுத்தல்
யாரால் முடியுமந்தோ!
*
ஒரு நாட்டினர் நாமென
அந்நியர் போமென
சேர்ந்து துரத்தினரே!
இன்று பகையது கொண்டு
சமர்க்களம் சென்று
பிரிந்து நின்றனரே!
*
சுதந்திரம் என்பது
உனக்கும் எனக்கும்
சரி சமமாகுமன்றோ!
நீ மட்டும் எடுத்து
எனக்கில்லையென்றால்
எங்கே நீதி பெற?
*
போதிய சிந்தனை
தீர்க்க தரிசனம்
இல்லாத் தலைவர்களால்,
நம்பிய மக்கள்
இழந்தனர் நிம்மதி
யாரிடம் சொல்லி அழ?
*
வாழும் வழி தர
நிமிர்ந்து நின்றவர்
சோர்ந்து போகலாமோ?
காகித உரிமைகள்
தருபவர் பக்கம்
சார்ந்து நிற்கலாமோ?
*
அதர்மம் பெருகின்
பூமி அழியும்
ஆண்டவன் தீர்ப்பாகும்!
நல்லன எண்ணி
நல்லன செய்து
நலமுடன் வாழ்வோமே!

ம.திருவரசுராசா- தவசிகுளம்- வவுனியா.

## அகாலமாய் அஸ்தமித்தவள்!

வானவில்லின் மீது
வரைந்து வைத்திருந்த
காதலின் வாசகங்கள்
கண்ணீரில் கரைந்தது;
நிலவொளியில்
நடந்து போன தடயங்கள்
உதயத்தில் மறைந்தன!
கரங்களின் இணைப்பில்
கட்டிவைத்திருந்த
நட்சத்திரமாலை
திசைக்கு ஒவ்வொரு மணியாகிச்
சிதறி விழுந்தது!
–o–
தலையில் ஏறிப்
புகழ் சூடக் காத்திருந்த
பிறைக் கிரீடம்
அமாவாசைக்குள் அழிந்தது!
அன்று முதல்
வாழ்வைப் பற்றிய
அனைத்து நம்பிக்கைகளையும்
அவள் இழந்தாள்!
–o–
"பூமியும் உனதே;
வானமும் உனதே;
புறப்பட்டுப் போய்
சிகரங்களைத் தொட்டுவா!" என
எத்தனையோ குரல்கள்
அவளை வழி மறித்தாலும்
வாழ்வைப் பற்றிய நம்பிக்கைகள்
அவளுக்கில்லையே!
–o–
ஆனாலும்,
பறப்பதற்கு முடியாமல்
பாறாங்கல் சுமக்கும் நெஞ்சும்
சிகரங்களை மூழ்கடிக்கும்
சோகமும் வேதனையும்
அவளிடம் இருந்தன!
–o–
மண்ணுக்குள் புதைந்து
மண்ணோடு மண்ணாகிய
அவளது வாழ்க்கையை
மறுபடி அழைத்து வர
எந்தத் திக்கில் போய்
எந்தத் தேவதையிடம்
உதவி கேட்டு நிற்பாள்?
–o–
அவளது பூக்காட்டை
பாலை வனமாக்கிய
முதலும் முடிவுமான
அந்தப் பாதச் சுவடுகள்
மீட்சியில்லாத சாபத்தை
அவளுக்குச் சொந்தமாக்கினவே!
–o–
அவளுக்கென்று
உலகொன்றே இனி
இல்லாத போது,
ஆகாயம் பார்த்த
ஆராதனைகள்
அவளுக்கெதற்காக?
–o–
சூரியனே–உனது
சுடர்களை எடுத்துக் கொண்டு
எங்காவது போய் விடு!
அவளது உலகில்
இருளின் அரசாட்சி
இன்றோடு உதயமாகிறது;
குளிர்ந்த பனிக்கடியில்
அவள் வாழ்வு முடிவாகிறது!
–o–

பஹீமா ஜஹான்- தெமடகொல்ல, மெல்சிரிபுர.

## தேன் கிண்ணம்

காலத்திற்கு கட்டுப்படாத
நீ–
அடிக்கடி
கடிகாரத்திற்குள்
புதைந்திருப்பாயே!
உன் ஞாபகங்களை
பிணைத்துக் கொண்டு
மலைமுகடுகளில்
ஓடிப் பிடித்து விளையாடும்
என் மனம்!
••
அப்போது
பெருமூச்சுக்கள்
ரணமாகிப்போகும்!
••
மஞ்சள் நிலவே!
உன்னையே சுவாசிக்க–
வேண்டும்!
அல்லது
வாசிக்க வேண்டும்
இல்லையேல்–
சுவாசப் புத்தகத்தை
முடிவிடவேண்டும்!
••
வாழ்க்கைப் புத்தகத்தில்
உன்னை மட்டுமே
கவிதையாக–
எழுதவேண்டும்!
••

## உனக்குள்....!



நீ
என்னுள்
சொட்டுச் சொட்டாய்
வேர்பிடித்திருக்கும் உருவம்!
••
பெண்ணே நீ!
சிரித்துவிட்டால்
முறிந்து ஒட்டிக்கொள்ளும்
உசிரு!
••
நீ
கண்களுக்குள் விழுந்து
நெஞ்சினுள்
அமுக்கப்பட்டிருக்கிறாய்!
••
என்னவளே!
கண் கரித்ததிற்காக
'என்ன விழுந்தது?'
நலம் விசாரித்துப் போனாய்!
நீயே விழுந்துவிட்டாய்
என்று எப்படிச் சொல்லும்
இந்த மனசு...?
••
ஞாபகங்களாக
உன் உருவம்
பிணைந்து பிணைந்து
இதய நிலத்திற்குள்
இறங்கி இறுகிக்
கொண்டது.
••
உன் ஞாபகங்களை
பிடுங்கி எடுத்தால்
பாவம்–
பிஞ்சிவிடும்
நெஞ்சு நிலம்!
••
பனி
குடித்த ரோஜாவாக
உதட்டு தண்டுகளும்
வியர்வை சொட்டுகளும்!
••
வேஷம் போடாத
புருவ நகர்வு
••
காற்றாக இருந்தால்
உன் மனசின் அடியின்
சுவாசப் பரப்பை
உரசித்தான் பார்த்திருக்கலாம்!
••

யெம்யே-தஸ்ரிப்-அக்கரைப்பற்று.

## மரணம்

ஜீவித வாசலின்
கதவடைப்பு!
***
சுவாசத்
தொழிற்சாலையின்
மூடு விழா!
***
வயதெல்லையின்றி
யாவருக்கும்
கிடைக்கும்
சமவுரிமை!
***
வாழ்க்கைத்
திரைப்படத்தின்
வணக்கம்!
***
இலஞ்சம் கொடுத்து
தப்பிக்க இயலா
உறுதியான
தண்டனை!
***
பின்போட முடியா
கட்டாய பரீட்சை!
***
துப்பாக்கி
அறுவடை செய்யும்
சமகாலப் பயிர்!
***
கடவுள்
விளையாடும்
கிரிக்கெட் விளையாட்டில்
எடுக்கப்படும்
உயிர் விக்கெட்டு!
***
வழித்துணையையும்
வாழ்க்கைத்துணையையும்,
விழித்துணையையும்
விட்டு விட்டு
விதித்துணையோடு
போகின்ற தனிப்பயணம்!
***

மெய்யன் நட்ராஜ்- பூண்டுலோயா.

## அந்த நாள் ஞாபகம்



↑ திருமணமுத்தம். ஜூலை 1981




← டயானாவுடன் கமீலா. ஆரம்பத்தில் தோழிகள். பின்னர்தான் டயானாவுக்கு தெரிந்தது கமீலா தோழியல்ல வில்லி என்று! 1981ல் எடுக்கப்பட்ட படம்.

↓ 1987ல் எலிசபெத் மகாராணியுடன். கண்டிப்பான மாமியார்தானாம்.



↑ பக்கிங்ஹாம் மாளிகைச் சுவர்களுக்குள் இளவரசியின் கனவுகள் கானல்நீராகின. இனிமைபோய் கசப்புச் சூழ்ந்த தனிமை.





வெறுப்பான முத்தம்– முறிந்த உறவு. →

## இந்த வாரம் உங்கள் பலன்

(21.09.1997 தொடக்கம் 27.09.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், புதன். |
| விருட்சிகம் | - செவ்வாய், வெள்ளி. |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு |

★ சந்திரன்- இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- முயற்சிகளில் வெற்றி, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பெரியோர் சகவாசம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- கடன்படல், ஆடம்பர வாழ்க்கை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| சனி- வீண்குறை கேட்டல், மனச்சஞ்சலம். | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் பேறு, அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பலவித பேறு, துயர் நீங்கும். | பகல் | 11 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பெரியோர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை).

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பிரயாண மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- கடன் சுமை, காரியக் கேடு. | பி.ப. | 10 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- பெரியோர் பகை, காரிய நன்மை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பண நெருக்கடி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | மு.ப. | 10 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, பணவரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- தொழிலில் பிரச்சனை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, பணக் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- துயர் நீங்கும், புதிய முயற்சி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, வெளியிட வாழ்க்கை. | பகல் | 11 | மணி |
| சனி- பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, மனக் குழப்பம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணவரவு குன்றும். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- அந்நியர் பகை, அதிகார சம்பத்து. | பகல் | 11 | மணி |
| சனி- வீண் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், மனக் குழப்பம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- உறவினர் பகை, மனக் கிலேசம். | பி.ப. | 2 | மணி |
| புதன் - பெரியோர் உதவி, புதிய முயற்சி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- பொருள் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, கடன் சுமை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- கடன்சுமை நீங்கும், பயனுள்ள செயல். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, அந்நியர் சகவாசம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, கௌரவம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, பணக் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| சனி- தொழில் மந்தம், மனக் கிலேசம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பெரியோர் உதவி. | பகல் | 11 | மணி |
| திங்கள்- பணக் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, கௌரவம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், பெரியோர் பகை. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, அந்நியர் சகவாசம். | பி.ப. | 3 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், அந்நியர் பகை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், தொழில் மந்தம். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, கடன் தொல்லை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பண வரவு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, தேகசுகக் குறைவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, பொருள் பேறு. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும். பெரியோர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| சனி- உறவினர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4



படிப்பகம்

www.padippakam.com





> வையகம் காப்பவரேனும்-சிறு
> வாழைப் பழக்கடை வைப்பரேனும்.
> பொய்யகலத் தொழில் செய்தே-பிறர்
> போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்.
> -சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கெடுவார், கேடு நினைப்பார்!

அந்தக் காட்டில் கெட்ட சுபாவமுள்ள தேள் ஒன்று வசித்து வந்தது. காட்டின் நடுவில் ஒரு நீரோடை இருந்தது. அந்தத் தேளுக்கு இக்கரையில் இருந்து அக்கரைக்குப் போக வேண்டி இருந்தது.

அக்கரைக்குப் போவதற்காக அந்த நீரோடையில் இருக்கும் பெரிய மீன்கள், நண்டு, தவளை போன்றவைகளிடம் தேள் உதவி கேட்டது. ஆனால் அந்தப் பொல்லாத தேள் தமக்குக் கொட்டிவிடும் என்று அவை மறுத்து விட்டன.

எப்படி நீரோடையைக் கடப்பது என்று தேள் யோசித்துக் கொண்டு இருந்தபோது அந்த நீரோடையில் ஆமை ஒன்று வந்து கொண்டிருந்தது. ஆமையைக் கண்ட தேள்,


"ஆமையாரே! நான் அக்கரைச் செல்லவேண்டும். என்னை அங்கு கொண்டு போய் விட்டு விடுவீரா?" என்று கேட்டது.

"நானும் அக்கரைக்குத் தான் போகிறேன். என் முதுகில் ஏறிக்கொள்ளும் உம்மை நான் அக்கரையில் விட்டு விடுகிறேன்!" என்றது ஆமை. தேளும் ஆமையின் முதுகில் ஏறிக்கொண்டது. ஆமை நீரில் நீந்திச் செல்ல ஆரம்பித்தது.

சிறிது தூரம்தான் ஆமை சென்றிருக்கும் தேளுக்கு ஒரு யோசனை வந்தது. 'நான் பல பேரைக் கொட்டியிருக்கிறேன். அவர்கள் வலியால் துடிதுடித்ததையும் பார்த்திருக்கிறேன். ஆனால் நான் ஒரு நாளும் ஆமைக்குக் கொட்டவில்லை. இந்த ஆமைக்குக் கொட்டினால் எப்படித் துடிக்கும்? இதைவிட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது, என்று ஆமைக்குக் கொட்டிப் பார்க்க நினைத்தது.

தேள், ஆமையின் முதுகில் கொட்டியது. ஆனால், ஆமை பேசாமல் போய்க்கொண்டிருந்தது. உடனே தேள், ஆமையைப் பார்த்து,

"ஆமையாரே! உமது முதுகு கடினமாக இருக்கிறதே, உமது உடம்பில் வலியே வருவதில்லையா?" என்று கேட்டது.



தேளின் கெட்ட எண்ணத்தைப் புரிந்து கொள்ளாத ஆமை,

"எனது முதுகு கடினமான ஓட்டினால் மூடப்பட்டுள்ளது. அதனால் எனக்கு அந்த இடத்தில் வலியே வருவதில்லை. ஆனால் எனது கழுத்துப் பக்கம் மென்மையாக இருக்கும். இதில் தான் எனக்கு வலிகள், காயங்கள் ஏற்படும்," என்று சொன்னது ஆமை.

"ஓஹோ அப்படியா?", என்று கேட்ட தேள், மெதுவாக ஆமையின் கழுத்துப் பகுதியை நோக்கிச் சென்றது. கழுத்திலிருந்து தலைப் பகுதிக்குச் சென்ற தேள், ஆமைக்குக் கொட்ட ஆரம்பித்தது.

தலையில் ஏதோ குத்தியதால் விடுக்கென்று தலையை உள்ளே இழுத்துக் கொண்டது ஆமை. தேள் நீரோடையில் விழுந்துவிட்டது.

தனக்கு உதவி செய்த ஆமைக்குக் கேடு விளைவிக்க நினைத்த தேள் தண்ணீரில் மூழ்கி இறந்தது. ஆமை கரையை நோக்கி நீந்திச் சென்றது.


# அதிசயம் - ஆனால் உண்மை!



**செண்ட் ஆன் தேவாலயம்:**
பெல்ஜியம் நாட்டில் அன்டர்கம் என்னுமிடத்திலுள்ள இந்தத் தேவாலயத்தில் வருடத்திற்கு ஒரு முறையே- அதாவது புனித ஆன் அன்னையின் பிறந்த நாளன்று மட்டுமே பிரார்த்தனைக்காகத் திறக்கப்படுகிறது. இது 800 வருடங்களாக நடைபெற்று வருகிறது.

**கொமன் சப்சக்கர்:**
இந்தப் பறவைகளின் உணவு விஷக்கனிகள். ஆனால் விஷக்கனிகளால் இவற்றின் உடலுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது.





**லூமினஸ் ரியூப் வேர்ம்:**
ஒளி வீசும் இந்தப் புழு இருளில் சிறிய டோர்ச் வெளிச்சம் போல பிரகாசிக்கிறது.

# வாரம் ஒரு நாடு

## பெலாரஸ்

தலைநகர் - மின்ஸ்க்
பரப்பு - 2,07,600 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை - 1.01 கோடி
மொழி - பெலோரஷ்யன், ரஷ்யன்
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - பெலாரஸ் ரூபிள்
புதிய நாணயம் - ஸாய்சிக்
தனிநபர் வருமானம் - 2679 டொலர்

**அமைவிடம்:**
இந்நாட்டின் தென்மேற்கே போலந்தும்: வடக்கில் லாட்வியா மற்றும் லிதுவேனியாவும்: கிழக்கில் ரஷ்யாவும்: தெற்கில் உக்ரைனும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**
முன்னாள் சோவியத் குடியரசு. 1991 டிசம்பரில் சுதந்திரம் பெற்றது. பைலோ ரஷ்யா எனவும் அழைக்கப்படுகின்றது.



**பொருளாதாரம்:**
பெரும் சதுப்பு நிலங்கள் பல உள்ளன. மரத்தொழில்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. உருளைக்கிழக்கு ஏராளமாகப் பயிரிடப்படுகின்றது. கால்நடை வளர்ப்பு முக்கிய வருமான மூலம். கட்டடத்தளபாடங்கள், இயந்திரங்கள், வாகனங்கள் சார்ந்த தொழிற்சாலைகள் உள்ளன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27.09.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 211
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 209

பரிசுக்குரியவர்:
நர்மதா வேல்முருகு,
வின்சன் மகளிர் தேசியபாடசாலை, மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| நிஷாந்தன் வாமதேவன், இந்து தமிழ் மகா வித்தியாலயம், புத்தளம். | ஏ.எஸ்.ருல்பீகா, அல்/அக்சா மத்திய கல்லூரி, கல்பிட்டி. |
| ஞா.சுமதி, இரம்பைக் குளம் மகளிர் மகாவித்தியாலயம் தேசிய பாடசாலை. | செல்வி பே.விஜிதா, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| ஆர்.ஹராத், தி/அந்தோனியார் மகா வித்தியாலயம், மூதூர். | எம்.தினேஷ்குமார், ரோ.க.தமிழ் பாடசாலை, அம்பிட்டிய. |
| குணரட்ணம் பிரியதர்சன், 230 மன்னார் வீதி, புத்தளம் . | செல்வி பாலசூரியம் சத்தியவாணி, க/மு.மகா வித்தியாலயம், பாண்டிருப்பு-01, கல்முனை. |
| சு.கஜன், நீர்/விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | சுசான் பௌஸான், றோயல் சர்வதேச பாடசாலை, கேகாலை. |

# பாஸ்ச்சரைஸ்ட் மில்க்



* **'பாஸ்ச்சரைஸ்ட் மில்க்' என்றால் என்ன?**
பாலில் இருக்கும் பக்டீரியாக்கள், குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னர் பாலைக் கெட்டுப் போக வைக்கின்றன. அதனை உட்கொண்டால் உடலுக்குக் கேடு ஏற்படுகிறது. இதைத் தடுக்க, பாலைக் காய்ச்சிப் பின்னர் குளிர வைத்து பக்டீரியாக்களை அழிக்கும் முறை பாஸ்ச்சரைஸ்ட் முறை எனப்படும். இப்படிச் செய்யப்பட்ட பாலைத்தான் பாஸ்ச்சரைஸ்ட் மில்க் என்பர்.

* **பாலை பாஸ்ச்சரைஸ்ட் செய்வது எப்படி?**
பாலை அரைமணி நேரத்திற்கு 62 பாகை செண்டிக்கிரேட் முதல் 65.5 பாகை செண்டிக்கிரேட் வரை காய்ச்சி உடனடியாகப் பாலைக் குளிரச் செய்தால் பக்டீரியாக்கள் அழிக்கப்படுகின்றது.

* **பாலை 65.5. பாகை செண்டிக்கிரேட்டிற்கு மேல் ஏன் சூடாக்குவதில்லை?**
இதைவிட அதிகமாகச் சூடாக்கினால் பாலின் சுவை கெட்டுவிடும். இந்த வெப்ப நிலையே பாலைக் கெட வைக்கும் பக்டீரியாக்களை அழிக்கப்போதுமானது.

* **இந்த முறை பாலுக்கு மட்டும்தான் பயன்படுத்தப்படுகிறதா?**
இல்லை. பழங்கள், காய்கள், முட்டை, இறைச்சி போன்ற பொருட்களைப் பதப்படுத்தி வைக்க இந்த முறை பயன்படுத்தப்படுகிறது.

* **இந்த முறையைக் கண்டுபிடித்தவர் யார்?**
ஃபிரான்ஸ் நாட்டு விஞ்ஞானியான லூயி பாஸ்ச்சர் இதைக் கண்டுபிடித்தார். அதனால்தான் இம்முறைக்கு இப்பெயர் வந்தது.

# முக்கிய சிகரங்கள்

உலகில் உள்ள 10 முக்கிய மலைச் சிகரங்களும் அவை அமைந்துள்ள நாடுகளும், அவற்றின் உயரங்களும் வருமாறு:

| பெயர் | நாடு | உயரம்(மீட்டர்) |
|---|---|---|
| 1. எவரெஸ்ட் | நேபாளம்-திபெத் | 8,848 |
| 2. காட்வின் | பாகிஸ்தான் | 8,611 |
| 3. கஞ்சன்ஜுங்கா | நேபாளம்-சிக்கிம் | 8,600 |
| 4. லகோட்சி | நேபாளம்-திபெத் | 8,501 |
| 5. மகாலு | நேபாளம்-திபெத் | 8,475 |
| 6. தௌலகிரி | நேபாளம் | 8,172 |
| 7. மான்சாலு | நேபாளம் | 8,156 |
| 8. சோஒள | நேபாளம்-திபெத் | 8,153 |
| 9. நங்கபர்வதம் | பாகிஸ்தான் | 8,126 |
| 10. அன்னபூர்ணா | நேபாளம் | 8,078 |

# எப்படிச் சொல்வது?

இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் அதை 'டுவின்ஸ்' (TWINS) என்று சொல்கிறோம். மூன்று குழந்தைகள் பிறந்தால் எப்படிச் சொல்வது?

ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறந்தால் அதை 'ட்ரிப்லெட்ஸ்' (TRIPLETS) என்று சொல்வார்கள்.

இதே போல் ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறந்தால் அதை 'குவாட்ரப்லெட்ஸ்' (QUADRUPLETS) என்றும், நான்கிற்கு மேற்பட்ட குழந்தைகள் பிறந்தால் அதை 'பொலிப்லெட்ஸ்' (POLYPLETS) என்றும் சொல்வார்கள்.

# எமு பறவை

தீக்கோழியை அடுத்து நிலத்தில் வாழும் மிகப்பெரிய பறவை எமு. ஒரு சராசரி மனிதனின் உயரத்தைவிட இதன் உயரம் அதிகம். இது 6 1/2 அடி உயரம்வரை



வளர்கிறது. இதே போல் சராசரி மனிதனின் எடையைவிட இதன் எடையும் சற்று அதிகம்தான். இதன் எடை அதிகபட்சம் 75 கிலோ வரை இருக்கும்.


அவுஸ்திரேலியாவின் சமவெளி பரப்பிலும் அடர்த்தியான காடுகளிலும் இவை காணப்படுகின்றன. 250 வருடங்களுக்கு முன்பு இலட்சக்கணக்கான எமு பறவைகள் அவுஸ்திரேலியாவில் இருந்தன. ஆனால் வெள்ளைக்காரர்களின் குடியேற்றத்திற்குப் பிறகு இவை அதிகமாக வேட்டையாடப்பட்டதால் இவற்றின் இனம் இன்று அழிந்து விடும் நிலையில் உள்ளது.

வெள்ளைக்காரர்கள் இறைச்சிக்காகவும், இவற்றின் இறகுகளுக்காகவும் இவற்றை வேட்டையாடினார்கள். இந்தப் பறவையில் இருந்து எண்ணெயும் எடுக்கப்படுகிறது.

எமுவால் பறக்க முடியாது. ஆனால் படுவேகமாக ஓடக்கூடியது. இவை நன்றாக நீந்தக் கூடியவை.

எமுவின் முக்கிய உணவு பழங்கள், விதைகள், சில மரங்களின் வேர்கள் போன்றவை. பருவ காலத்தில் 5 முதல் 6 முட்டைகளை இடும். முட்டைகளை அடைகாப்பது ஆண் எமுக்களின் வேலை.

# வெள்ளை மாளிகை



வாஷிங்டன் நகரிலுள்ள அமெரிக்க ஜனாதிபதி மாளிகை 1814ல் தீப்பற்றிக் கொண்டபோது, தீயை அணைத்து அந்த மாளிகைக்கும் வெள்ளை வர்ணம் அடித்தனர். அதற்குப் பிறகே அமெரிக்க ஜனாதிபதி மாளிகை 'வெள்ளை மாளிகை' (WHITEHOUSE) என்று அழைக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# உடைந்த இரவு

17

## சென்றவாரம்

மைத்ரேயியை வீட்டில் விட்டுவிட்டுப் போய் விடுகிறான் பாஸ்கர். பங்களாவைத் திறந்து தாளிட்டு விட்டு சோபாவில் சாய்ந்தாள் மைத்ரேயி.

வையாபுரி மாமாவும் அத்தையும் சினிமாவிலிருந்து திரும்பி மாடிக்குச் சென்று படுத்துவிட; மைத்ரேயியும் சோபாவிலிருந்தபடியே கண்ணயர்ந்துவிட்டாள்.

டெலிஃபோன் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள். தினேஷ் தான் மெட்ராஸ் மீனம்பாக்கம் ஏர்போர்ட்டில் நிற்பதாகவும் டாக்ஸி பிடித்து வீடு வந்து சேர்வதாகவும் கூறி ரிசீவரை வைத்ததும் மைத்ரேயி அதிர்ந்தாள்.

மணி 2.55. மைத்ரேயி போர்ட்டிக்கோவிற்கு வந்து தெருவைப் பார்த்தாள். ஹெட்லைட் வெளிச்சம் ஒன்று கேட்டை நெருங்கியது. வருவது யார் 'தினேஷா... பாஸ்கரா...?. பயத்தின் உச்சக் கட்டத்தில் மைத்ரேயி நின்றிருக்க ஹார்ன் சத்தம் எழுந்தது.

இனி

மைத்ரேயி தாறுமாறான இருதயத்துடிப்போடு காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே பார்வையைக் கொண்டு போக, நின்றிருந்த கார் மறுபடியும் ஹார்ன் கொடுத்தது.

கடவுளே!

'வந்திருப்பது யார் என்று தெரியவில்லையே?'

'பாஸ்கரா... தினேஷா...?'

வேக வேகமாய் கேட்டை நோக்கிப் போனாள். கேட்டை நெருங்க நெருங்கவே அவளுக்கு கார் பிடிப்பட்டுவிட்டது.

அவளுடைய கார் தான். டிரைவிங் சீட்டில் பாஸ்கர் தெரிந்தான்.

ஓடிப்போய் கேட்டைத் திறந்தாள். கார் மெதுவாய் உள்ளேவர பாஸ்கரிடம் போய் குனிந்தாள்.

"பாஸ்கர்...! போன காரியம் என்னாச்சு...?"

"பட்டாபியோட பாடியை கச்சிதமா டிஸ்போஸ் பண்ணியாச்சு..."



"சரி....! நீங்க மொதல்ல காரை விட்டு இறங்கி இப்படியே உங்க வீட்டுக்கு கிளம்புங்க..." படபடத்த மைத்ரேயியை வியப்பாய் பார்த்தான் பாஸ்கர்.

"என்ன மைத்ரேயி... இவ்வளவு டென்ஷனா இருக்கே? பட்டாபியோட பாடியை நான் எப்படி டிஸ்போஸ் பண்ணினேன்னு கேட்க மாட்டியா...?"

"பாஸ்கர்...! அதைப்பத்தியெல்லாம் இப்போ பேசிட்டிருக்க நேரம் இல்லை..."

"ஏன்...?"

"என்னோட கணவர் டெல்லியிலிருந்து புறப்பட்டு மெட்ராஸ் ஏர்போர்ட் வந்தாச்சு; எந்த நிமிஷமும் அவரோட டாக்ஸி இங்கே வரலாம்...."

பாஸ்கர் முகம் மாறினான்.

"என்ன திடீர்னு முன் அறிவிப்பு எதுவும் இல்லாமே உன்னோட கணவர் புறப்பட்டு வர்றார்...?"

"தெரியலை.... அவர் வந்த பின்னாடிதான் தெரியும். நீங்க மொதல்ல கிளம்புங்க... எது இருந்தாலும் நாளைக்கு பேசிக்கலாம்."

பாஸ்கர் காரை விட்டு இறங்க மைத்ரேயி காரின் டிரைவிங் சீட்டுக்குப் போய் ஸ்டீயரிங்கைப் பிடித்தாள்.

"ஸீ..யூ... பாஸ்கர்!"

பாஸ்கர் கையசைத்துவிட்டு தெருவில் பரவியிருந்த இருட்டுக்குள் கரைய, மைத்ரேயி காரை நகர்த்திக்கொண்டு போர்டிகோவுக்கு வந்தாள். காரின் ஹெட் லைட் விளக்குகளை அணைத்து விட்டு கீழே இறங்கினாள். போர்டிகோ படிகளில் ஏறும் போது வாசல் கதவருகே வையாபுரி மாமா நிற்பதைப் பார்த்து லேசாய் துணுக்குற்றாள்.

அவர் கேட்டார்,

"என்னம்மா காரைக் கொண்டு வந்துட்டாங்க போலிருக்கு!"

"ஆ... ஆமா..."

"இந்த அகால நேரத்துல காரைக் கொண்டு வரணுமா? நாளைக்குக் காலையில கொண்டு வந்தா என்னவாம்..?"

"அது வந்து... நாளைக்குக் காலையில அவங்க வெளியூர் போகப் போறாங்களாம்... அதான் காரை இப்பவே கொண்டு வந்து விட்டுட்டு போறாங்க...."

"நீ இன்னும் தூங்கவேயில்லை போலிருக்கு.. மைத்ரேயி...?"

"ஆமா... தூங்கப்போற நேரத்துல உங்க மருமகன் ஃபோன் பண்ணியிருந்தார்."

"யாரு தினேஷா...?"

"ஆமா..."

"எங்கே டெல்லியிலிருந்தா...?"

"இல்லை... மெட்ராஸ் ஏர்போர்ட்டிலிருந்து..."

"தினேஷ் டெல்லியிலிருந்து புறப்பட்டு வந்தாச்சா? தினேஷ் மெட்ராஸ் திரும்ப இரண்டு மூணு நாளாகும்னு சொன்னே...?"

"நேத்து ஃபோன்ல பேசும்போதுகூட அப்படித்தான் சொன்னார். கொஞ்ச நேரத்துக்கு முந்தி மெட்ராஸ் ஏர் போர்ட்டிலிருந்து ஃபோன் பண்ணி 'டெல்லியிலிருந்து திரும்பிட்டேன். ஏர்போர்ட்டிலிருந்து டாக்ஸியைப் பிடிச்சு இப்போ வந்துட்டேயிருக்'கேன்னு சொன்னார். அவருக்காகத்தான் தூங்காமே காத்திட்டிருக்கேன்...."

"ஃபோன் எப்ப வந்தது...?"

"ரெண்டே முக்கால் மணி இருக்கும்..."

வையாபுரி தன் மணிக்கட்டில் இருந்த பழையகால வாட்சைப் பார்த்துவிட்டு நெற்றிப் பரப்பைச் சுருக்கினார்.

"மணி மூணே முக்கால் ஆகப்போகுது. இன்னுமா ஏர்போர்ட்டிலிருந்து வரலை...?"

"அதான் நானும் யோசனை பண்ணிட்டிருக்கேன்...."

"டாக்ஸி ஒரு வேளை கிடைக்கலையோ?"

"அப்படியிருந்தா... மறுபடியும் எனக்கு போன் பண்ணியிருப்பாரே...?"

"கொஞ்சம் வெயிட் பண்ணிப் பார்ப்போம். எனக்கும் தூக்கம் போயிடுச்சு. தினேஷ் வந்ததும் பார்த்துப் பேசிட்டே படுக்கப் போறேன்."

சொன்ன வையாபுரி பேர்டிகோ வராந்தா ஓரமாய் போட்டிருந்த கூடை நாற்காலிக்கு தன்னுடைய உடம்பைக் கொடுத்தார்.

மைத்ரேயியும் வேறு வழியில்லாமல் பக்கத்தில் இருந்த நாற்காலியில் குழப்பத்தோடு சாய்ந்தாள்.

நேரம். கரைந்தது.

3.48

3.50

3.55

4.00

வையாபுரி அடிக்கடி மணிக்கட்டையும் கேட்டையும் மாறி மாறிப் பார்த்தார். நேரம் 4.10ஐ தொட்ட போது கவலையாய் மைத்ரேயியை ஏறிட்டார்.

"என்னம்மா.... இது...? தினேஷ் மெட்ராஸ் ஏர்போர்ட்டிலிருந்து வர்றானா.... இல்லை... பாம்பே ஏர்போர்ட்டிலிருந்து வர்றானா?"

"ஏன் இவ்வளவு லேட்டுன்னு தெரியலை...."

"நீ காரை அனுப்பி வைக்கிறதா சொன்னியா?"

"இல்லையே..."

"சரி...! ஏர்போர்ட்டுக்கு ஃபோன் பண்ணி லௌன்ஞ்ச்ல தினேஷ்னு யாராவது வெயிட் பண்றாங்களான்னு கேட்டுப்பாரு....."

## க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

மைத்ரேயி எழுந்து உள்ளே போய் டெலிஃபோன் எடுத்து பேசி விட்டு வந்தாள்.

"என்ன சொன்னாங்க...?"

"லௌன்ஞ்ச்ல யாருமே இல்லையாம்...."

"தினேஷ் வந்த டாக்ஸி வழியில ரிப்பேராகி நின்னிருக்குமோ...?"

"அப்படியிருந்தா போன் பண்ணி சொல்லியிருப்பாரே...?"

"எதுக்கும் நீ காரை எடும்மா...! ஏர்போர்ட் வரைக்கும் போய் பார்த்துட்டு வந்துடலாம்...."

"இன்னும் ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணிப் பார்க்கலாம். வராத பட்சத்தில கிளம்பிப் போகலாம்...."

மைத்ரேயி சொல்லி வாயை மூடவில்லை.

உள்ளே.....

டெலிபோன் ஒலிக்கும் சத்தம் கேட்டது.

மைத்ரேயி ஓட்டமும் நடையுமாய் போய் ரிஸீவரை எடுத்தாள். காதுக்கு பொருத்திக் கொண்டு பதட்டமாய் கேட்டாள்.

"ஹலோ..."

"இது தினேஷ் வீடா...?" ஒரு ஆண்குரல் கேட்டது.

"எஸ்...."

"பேசறது யாரு...?"

"தினேஷோட ஒய்ப்..."

"உங்க பேரு....?"

"மைத்ரேயி."

"மிஸஸ் மைத்ரேயி.... நாங்க பொலிஸ்!"

மைத்ரேயி திடுக்கிட்டாள்.

"எ... என்ன விஷயம்....?"

"ஸாரி டு ஸே திஸ்... உங்க கணவர் மிஸ்டர் தினேஷ் ஏர்போர்ட்டிலிருந்து டாக்ஸியில் திரும்பிட்டிருக்கும்போது...."

"திரும்பிட்டிருக்கும் போது....?"

"ஹி மெற் வித் அன் ஆக்ஸிடெண்ட்...."

"ஆ... ஆக்ஸிடெண்ட்...?"

"எஸ்... கிண்டிக்குப் பக்கத்துல டாக்ஸி ஒரு லாரியோட மோதி டாக்ஸி டிரைவர் ஸ்பாட் டெட். உங்க கணவர்க்கு தலையில் அடிபட்டு ஹாஸ்பிடலுக்கு கொண்டு போகப்பட்டிருக்கார்..."

"எ... எந்த ஹாஸ்பிடல்...?"

"கிண்டியில் இருக்கிற குட்டே ஹாஸ்பிடல்...."

"அ...அ... அவரோட உயிர்க்கு...?"

"இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாதுன்னு டாக்டர் சொல்லிட்டார். நீங்க உடனே புறப்பட்டு ஹாஸ்பிடலுக்கு வாங்க..."

"இதோ... புறப்பட்டுட்டேன்..." சத்தமாய் சொல்லி ரிஸீவரை வைத்த மைத்ரேயி மனசுக்குள் மகிழ்ச்சி முளை விட்டது.

'பொலிஸ் சொல்வதைப் பார்த்தால் தினேஷ் பிழைக்கமாட்டார் போலிருக்கிறதே...'

'பட்டாபி இல்லாமல் போன இதே ராத்திரியில் தினேஷும் இல்லையென்று ஆகிவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?'

வையாபுரி உள்ளே வந்தார்.

"ஃபோன் பண்ணினது யாரம்மா தினேஷா...?"

"இல்லை...."

"பின்னே...?"

ஃபோனில் வந்த விஷயத்தை சொல்ல வையாபுரி அதிர்ந்து போய் முகம் வியர்த்தார்.

★★★

கிண்டி. குட்டே ஹாஸ்பிடல்.

மைத்ரேயி வையாபுரி, வையாபுரியின் மனைவி, மூன்று பேரும் காரைவிட்டு இறங்கி ஹாஸ்பிடலுக்குள் நுழைய வராந்தாவிலேயே அந்த இன்ஸ்பெக்டர் எதிர்ப்பட்டார்.

மைத்ரேயி செயற்கையான அழுகையோடு கேட்டாள்.

"இன்ஸ்பெக்டர்... அயாம் மைத்ரேயி... என்னோட கணவர் இப்போ எப்படியிருக்கார்....?"

"அவர் இப்போ ஐ.ஸி. யூனிட்ல இருக்கார்! ட்ரீட்மெண்ட் ஈஸ் கோயிங் ஆன். டாக்டர் வெளியே வந்த பின்னாடி தான் மிஸ்டர் தினேஷோட கண்டிஷன் தெரியும்..."

"ஆக்ஸிடெண்ட்டானதும் அவர் கண்டிஷன் என்ன...? அவர்க்கு சுய நினைவு இருந்ததா...?"

"நோ... நோ! தலையில் அடிபட்டதுமே அவர் கோமா ஸ்டேஜுக்கு போயிட்டார்"

"பின்னே எனக்கு எப்படி ஃபோன் பண்ணீங்க...? டெலிஃபோன் நெம்பர் யார் கொடுத்தாங்க..?"

"யாரும் தரலை... ஆக்ஸிடெண்ட் நடந்த ஸ்பாட்டில் உங்க கணவருடைய சூட்கேஸ் இருந்தது. ஒப்பன் பண்ணிப் பார்த்தோம். டயரி கிடைச்சது. டயரியின் முதல் பக்கத்தில் பர்சனல் மெமோரண்டா பகுதியில் மிஸ்டர் தினேஷ் தன்னைப் பற்றின எல்லாக் குறிப்புகளையும் எழுதி வைச்சிருந்தார். அதிலேயே ஃபோன் நெம்பரும் இருந்தது. உடனே ஃபோன் பண்ணிட்டேன்."

இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த நர்ஸ் ஓடி வந்தாள். **(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எம். ஸ்ரீபன்,
வயது: 23
முகவரி: 133, ஹில் ரோட், தெஹிவளை.
பொழுது போக்கு: நண்பர் தொடர்பு.



பெயர்: எம். பாயில்,
வயது:19
முகவரி: 141, பஸார் வீதி வவுனியா.
பொழுதுபோக்கு: கரம், கிரிக்கெட்.



பெயர்: இ. கஜேந்திரன்,
வயது: 25
முகவரி: P.O.BOX-30291, DOHA. QUTAR.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: கே. நாகேந்திரன்,
வயது: 24
முகவரி: வம்மி வட்டவான் கதிரவெளி.
பொழுது போக்கு: பத்திரிகை.



பெயர்: எம். நௌபர்,
வயது: 29
முகவரி: 7ம் வட்டாரம், எருக்கலம்பிட்டி.
பொழுது போக்கு: தொலைக்காட்சி.



பெயர்: ஆர். ரமீஸ்,
வயது: 26
முகவரி: P.O.BOX-2497, AL JAHAR-01026, KUWAIT.
பொழுதுபோக்கு: பேனா நட்பு.

பெயர்: எம்.ஆரிப்,
வயது: 26
முகவரி: 148/1, மருதானை, பேருவளை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம்.பௌசல் அமீஸ்,
வயது: 19
முகவரி: கெப்பிட்டிய, கலேவெல.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், வானொலி.

பெயர்: கே.ரமேஷ்,
வயது: 17
முகவரி: 52,வி.சி.பி., கந்தப்பளை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ரி.தவகிலி,
வயது: 28
முகவரி: பெரியகல்லாறு-03, கல்லாறு.
பொழுது போக்கு: ரீ.வி., கதைப்புத்தகம்.

பெயர்: பி.வில்சன்,
வயது: 27
முகவரி: INDEN HAIN BUHAN-2, 76833. BOCHINEN, GERMANY.
பொழுது போக்கு: உதைபந்து.

பெயர்: எம்.நபீஸ்,
வயது: 18
முகவரி: 50,மடவளை பஸார், கண்டி.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

## அத்தியாயம் 29

சுமதி பள்ளியாசிரியரின் மகள். அவர் சுமதிக்கு தந்தையாகவும் தோழனாகவும் இருந்து அன்புடன் ஆளாக்குகிறார். சுமதி கணேசனை காதலிக்கிறாள். இருவரும் திருமணம் செய்கின்றனர். கணேசனைவிட சுமதிக்கு நல்லவேலை, நல்ல சம்பளம். அதனால் கணேசன் தாழ்வு மனப்பான்மை கொள்கிறான். வக்கிரமான அவனது மறுபக்கம் சுமதிக்கு அதிர்ச்சி தருகிறது. சுமதியை கணேசன் கொடுமைப்படுத்துகிறான். வீட்டை விட்டு அடித்துவிரட்டுகிறான். சுமதி தனியாகச் செல்கிறாள். ஒரு மிருகத்துடன் வாழ முடியாத நிலையில் விவாகரத்து கோரும் முடிவுக்கு வருகிறாள்.

"அந்தப் பெரிய வார்த்தை இங்கு சினிமா அளவில் அல்லவா சிறுத்துப்போய் விட்டது. அது மாதிரித்தான் பெண் விடுதலையும். விடுதலை கோரும் பெண், மானுட ஜாதிக்கு வேண்டிய அனைத்துச் சுதந்திரங்களையும் கோர வேண்டும். உலகத்து அனைத்து உரிமைகளுக்கும், அனைத்துச்சுகங்களுக்கும், அனைத்துச் சௌகரியங்களுக்கும் உரிமை கோர வேண்டும். அவள் இலட்சியம் பரிபூரணமாக இருக்க வேண்டும். துரதிருஷ்டம் என்னவெனில், இங்கு பெண் விடுதலை கோரும் பெண்கள், ஆண்களை முன்வைத்து தன் இலட்சியங்களை, கோரிக்கைகளை வைக்கிறார்கள். அவர்கள் தங்களின் எல்லைகளாக ஆண்களைக் காண்கிறார்கள். அது அவர்கள் செய்கிற அடிப்படைத் தவறு. மற்றொன்றையும் நான் சொல்கிறேன். பெண்களின் விடுதலை, ஆண்கள் இல்லாமல் சாத்தியம் ஆகாது. ஏனெனில், விடுதலை போராடிப் பெறுவது; கேட்டு வாங்கிக் கொள்ளும் கடைச் சரக்கல்ல. எந்தப் போராட்டமும் ஆண்களோ, பெண்களோ தனித்து நின்று சாத்தியம் ஆகாது. ஆண்களோடு பெண்களும் சேர்ந்து போராடியே விடுதலை பெற முடியும். எங்கும் இல்லாத ஒரு நிலைமை இங்கு இருக்கிறது. அதாவது பெண் ஆணுக்கு அடிமைப்பட்டிருக்கிறாள். ஆண், பொருளாதாரத்துக்கு, சமூக மூடத்தனங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறான். இந்த இரண்டு அடிமைகளும் சேர்ந்துதானே போராடவேண்டும்?"

பீட்டர் சிறிது நேரம் யோசித்தவாறு இருந்தான்; பிறகு தொடர்ந்தான்.

"எனக்கு நீங்கள் சொல்கிற இரண்டு பெண்களையும் தெரியும். கூட்டங்களில் பார்த்திருக்கிறேன். தலைக்கூந்தலை வெட்டிக்கொள்வது, பூவை வெறுப்பது, மை இட்டுக் கொள்ளாமல் இருப்பது, புடவையை இகழ்ந்து கமிஸ் போன்ற ஆடைகளை அணிவது, அல்லது அழுக்கு ஜீன்ஸ் அணிவது, பொது இடங்களில் சிகரெட் பிடிப்பது, அமெரிக்க ஆபாச வார்த்தைகளான 'ஃபக்' போன்ற வார்த்தைகளைப் பேச்சுக்குள் பயன்படுத்துவது போன்ற பழக்க வழக்கங்களை அவர்கள் கொண்டிருப்பவர்கள். இதன் மூலம் ஆண்களின் ஆதிக்கத்தை அவர்கள் போக்கி விட்டதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். என்ன மடத்தனம்? சதா சர்வகாலமும் ஆண்களை நினைத்தே பேசுவதும், ஆடை உடுத்துவதும், பழகுவதும் ஆணின் ஆதிக்கத்தை உங்களுக்குள் மேலும் உசுப்பி விடாதா? அவர்களை எரிச்சல் அடைய வைக்கும் ஒவ்வொரு முயற்சியும், உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளச் செய்கிற முயற்சி என்பதை ஏன் மறந்து விடுகிறீர்கள்? ஏனெனில் இந்தப் போலிப் பெண்களுக்கு, தத்துவம் தெரிவதில்லை. சமூக நாணம் இல்லை. இவர்கள் முட்டாள்கள். சமூகத்தில் நடைபெறும் எந்தப் போராட்டத்திலும் பங்கு கொள்ளும் அக்கறை இல்லை. தைரியம் இல்லை. ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் மாநாடு கூட்டி அல்வாவும், முந்திரிப் பருப்பும் தின்று கலைகிற இந்தப் பைத்தியங்களால், ஒரு நாளும் பெண் விடுதலை சாத்தியம் இல்லை. இந்த மூடங்கள் இன்னும் புடவை ஆசையை ஒழிக்கவில்லை. நகை ஆசையை ஒழிக்கவில்லை. வம்பு பேசுவதை நிறுத்தவில்லை. இதுகள் எந்தக் காலத்திலும் விடுதலை அடையாது. நான் சொல்கிறேன். மூடர்கள் முழுமையை எய்த முடியாது."

வசந்தி சிரித்தாள்.

"பீட்டர்.... உனக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது?"

"பெண் விடுதலை என்கிற உயர்ந்த இயக்கத்தில் இந்த மாதிரிக் குப்பை, கூளங்கள் வந்து சேர்ந்து விடுகிறதே. அதை நினைத்துத்தான்."

"குப்பைகள், கூளங்கள் எல்லா இயக்கத்திலும் முதலில் வந்து கதவைத் தட்டி உள்ளே புகுந்து விடுகிற உபத்திரவங்கள். புது வெள்ளம் வரும்போது அழுக்குகளும் வெள்ளத்தில் வரத்தானே செய்யும்! காலப் போக்கில் இந்த அழுக்கு அடித்துச் செல்லப் பட்டுவிடும்."

சுமதி யோசித்துப் பார்த்தாள். இந்தப் பாரு தன் மீது ஏன் இவ்வளவு ஆத்திரம் உடையவளாக இருக்கிறாள்? பொதுவாக மனிதர்களுக்கு இருக்கிற பொறாமைக்குணம் தானா? இவ்வளவு சிறுமைக் குணம் கொண்டவளாக இருக்கும் பட்சத்தில், தொடக்கத்தில் தன்னிடம் அவ்வளவு இனிமையாகப் பழகியது பொய்யா?

கடைசிச் சந்திப்புகளை அவள் நினைவுக்குக் கொண்டு வர முயன்றாள்.

எப்போதும் பாரு உணவு நேரம் பார்த்துத்தான் சுமதியின் அலுவலகத்துக்கு வருவாள். சுமதி அவளுக்கும் அடுத்திருக்கும் உடுப்பி ஓட்டலில் இருந்து இட்லியும் தோசையும் வாங்கிக் கொடுப்பாள்.

சுமதி அடக்கமாக, அதே சமயம் மிக அழகாக உடுத்துபவள். இருநூறு ரூபாய் புடவைகூட அவள் கட்டினால் இரண்டாயிரம் ரூபாய் புடவையாகப் பரிணமிக்கும். தினம் தினம் அவள் கட்டிவரும் புடவைகளைப் பார்க்க என்றே பெண்கள் கூட்டம் அவள் அறைக்குத் திரளும்.

ஒரு நாள் பாரு கேட்டாள்,

"நீங்கள் ஆடை அணிவதில் மிகவும் விழிப்போடு இருக்கிறீர்கள்?"

"ஏன் இருக்கக்கூடாதா?"

"இவ்வளவு கவனம் எதற்கு?"

சுமதி, அவளைப் பார்த்தாள். அழுக்கும், வியர்வை நாற்றமும் வீசுகிற சட்டை ஒன்றை அணிந்து கொண்டு ஆபாசமாக இருந்தாள் அவள்.

"லுக். நான் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் மிகவும் விழிப்பாக, கவனத்தோடு செய்கிறேன். நான் அணியும் புடவை, நகைகள் முதல் அனைத்தும் என்னைப் பற்றிச் சொல்பவை என்பதை நான் அறிவேன். நான் கௌரவமானவள் என்பதை உணர்ந்து இருக்கிறேன். என் ஆடை, அணிகளும் கௌரவமானவைகளாக இருக்க வேண்டும் என்று நான் நினைப்பது தவறு இல்லை தானே?"

"நம் போன்ற பெண் விடுதலை விரும்பிகள் இப்படி உடுத்தலாமா?"

"பெண் விடுதலைக்காரர்கள் உங்களைப் போன்ற நாற்றம் அடிக்கிற தொள தொளச் சட்டை அணிய வேண்டும் எனில், அந்த மாதிரிப் பெண் விடுதலையே எனக்கு வேண்டாம். அழகு, மேன்மை, வெளிப்பட வேண்டும் நம் ஒவ்வொரு செயலிலும். என்ன பாரு இப்படி அறிவிலியாக இருக்கிறீர்கள்? உங்களைப் போன்ற சிலர் இருப்பதால்தான், இந்த இயக்கமே மரியாதை இழந்துவிடுகிறது."

சுமதிக்கு உண்மையில் கோபமே வந்து விட்டது. அறியாமையைக் கண்டால், அறிவாளர்க்கு ஏற்படும் கோபம் அது.

பாரு இப்படித்தான் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் அலங்காரம் பண்ணிக்கொள்வது ஆண்களை மயக்கவா?"

"இல்லை. நான் அலங்காரம் பண்ணிக் கொள்வது என்னை அழகாக வைத்துக் கொள்ள."

இது போன்ற பல கேள்விகளை சுமதியை நோக்கி அவள் வீசி எறிந்தாள்.

"உங்களுக்கு ஆண் தொடர்பு உண்டா?"

"உங்கள் பல் ஏன் வெண்மையாக இருக்கிறது?"

"இவ்வளவு விலை உயர்ந்த பேனாவால் தான் எழுதுவீர்களா?"

"தினமும் ஒரு தடவை குளிக்கத்தான் வேண்டுமா?"

"உங்கள் நகங்களில் அழுக்கே இல்லையே, ஏன்?"

"உங்களிடம் வருகிறவர்கள் எல்லோரிடமும் மரியாதையாகப் பழகுகிறீர்களே, அது ஏன்?"

"என்னைப் போல 'பீர்' குடிக்க மாட்டேன் என்கிறீர்களே, அது ஏன்?"

"அப்பா அம்மா மேல் உங்களுக்கு ஏன் இவ்வளவு அன்பும் மரியாதையும்?"

"நீங்கள் ஏன் சிகரெட் குடிப்பதில்லை?"

"சாயங்காலங்களில் பாய்பிரண்ட்களோடு நீங்கள் ஏன் சுற்றப் போவதில்லை?"

"உங்கள் செருப்பு இவ்வளவு சொகுசாக இருக்கிறதே அது ஏன்?"

"நீங்கள் கட்டுகிற பாவாடையின் ஓரம் கூட அழுக்காக இல்லாமல் இருக்கிறதே, அது எப்படி?"

"ஆபீஸ் மேஜையை இவ்வளவு சுத்தமாக வைத்திருக்க உங்களால் எப்படி முடிகிறது?"

இவை பாரு சுமதியின் முன்பு வைத்த கேள்விகள்.

சுமதி ஒரு முடிவுக்கு வந்தாள். 'இனி இந்த மூடப் பெண்ணோடு சிநேகிதம் வைத்துக்கொள்ளக் கூடாது' என்பதே அது.

முகத்துக்கு நேராகச் சொன்னாள் சுமதி.

"பாரு நீங்கள் மிகுந்த கோளாறான கருத்துக்களும், நடைமுறைகளும் கொண்டவராக இருக்கிறீர்கள். ஆகவே, உங்கள் நட்பு எனக்கு வேண்டாம்."

பாரு நேராகச் சென்ற இடம் கணேசன் வீட்டுக்குத்தான். அவனிடம் அவள் சொன்னாள்:

"விவாகரத்து வழக்கில் நான் உங்களுடன் இருப்பேன், மிஸ்டர் கணேசன்." என்றாள்.

•••

விடிந்தது.

இருபத்து நான்கு மணி நேரங்களுக்கு ஒரு முறை சூரியன் தோன்றி உலகத்துக்கு வெளிச்சம் தர மறுப்பது இல்லை. இயற்கை மனிதனுக்கு, மேலும் ஒரு நாளைக்கொடுக்கிறது. நாளைக் கொடுப்பது என்பது மனிதனுக்கு மேலும் ஒரு வாய்ப்புக் கொடுப்பது என்று பொருள். தன்னை மேலும் சந்தோஷப் படுத்திக்கொள்ள, நாகரிகப் படுத்திக்கொள்ள, மேலும் ஒரு பரிசுப் பொருள்.

சுமதி, குளித்து கூந்தலைத் தளர விட்டு, அதைக் காய வைக்கும் பொருட்டு பேப்பருடன் மொட்டை மாடிக்கு வந்து அமர்ந்தாள். தமிழும் ஆங்கிலமும் ஆக இரண்டு பேப்பர்களை அவள் வாங்குவது வழக்கம். தமிழ்ப் பத்திரிகைகள் பொதுவாக அக்கப் போர் பத்திரிகைகள் ஆகையால் ஆங்கிலப் பத்திரிகையும் அனாவசியமாக வாங்க வேண்டியிருக்கிறதே என்று சுமதி கவலைப் படுவாள்.

அரைமணி நேரம் பத்திரிகையில் செலவழித்த பிறகுதான் அவளுக்கு ஒரு கருத்து தோன்றியது. அரை மணி நேரம் ஒருவன் வாழ்க்கையில், ஒரு நாளில் எவ்வளவு முக்கியம் பெறுகிறது? இந்த அரைமணியில், அவள் என்ன தெரிந்து கொண்டாள்? சுகாசினிக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது; நாடு சுபீட்சத்தை நோக்கிப்போய்க் கொண்டிருப்பதாகப் பிரதமர் பொய் சொல்லியிருந்தார். தாம்பரத்துக்குப் பக்கத்தில் புதிதாக உருவாகியிருக்கும் ஒரு குடியிருப்பில், முகமூடிக் கொள்ளை கோஷ்டி புகுந்து கொள்ளை அடித்தது; யாரோ ஒரு அமைச்சர் ஸ்வீடன் நாட்டுக்குப் பயணம் போய்க் கொண்டிருந்தார். வளைகுடா நாட்டைச் சேர்ந்த ஒரு ஜனாதிபதித் தம்பதிகளைக் கைகுலுக்கி அணைத்து வரவேற்கிறார்கள், இந்திய ஜனாதிபதித் தம்பதியினர். இருவர் முகத்திலும் பொய்யான புன்னகை; லாட்டரிச் சீட்டு முடிவுகள்; விளம்பரங்கள்.

சுமார் நாற்பது ரூபாய்கள் மாதம் தோறும் அழுது இந்தப் பொய்களை ஏன் அவள் வாங்கிக் கொண்டிருக்கிறாள்? என்ன செய்தியை அவள் தெரிந்துகொண்டாள்? இந்திரா காந்தி சுடப்பட்டது போன்ற முக்கிய செய்திகள் என்றால், படிக்காமலேயே அவை அவளை வந்து சேர்ந்துவிடாதா?

சலிப்போடு சமையல் அறைக்குள் நுழைந்தாள். பசித்தது. வேலைக்காரப் பெண் விடுமுறை கேட்டுக் கொண்டு சொந்த ஊர் போயிருந்தது அவள் நினைவுக்குவந்தது. ஆகவே அவள் ஓட்டலுக்குத்தான் போகவேண்டும். ஆகவே உடை உடுத்திக்கொண்டாள். முந்தின நாளே எடுத்து வைத்திருந்த நூல் சேலையையும் அதற்கு உகந்த வண்ண பிளவுசையும் அணிந்து கொண்டாள். கணேசனை விட்டுப் பிரிந்த நாளாக அவள் நெற்றியில் பொட்டு வைப்பதை விட்டிருந்தாள். பொட்டு வைப்பது அவளுக்குப் பிடிக்காத ஒன்று. கணேசன்தான் வற்புறுத்தி அவளைப் பொட்டணியச் சொல்லியிருந்தான். அவன் போனதில் இருந்து பொட்டும் அவளை விட்டுப் போய்விட்டிருந்தது.

டிரைவர் எட்டு மணிக்கே வந்து விட்டிருந்தான். வண்டியை உட்லண்ட்ஸ் டிரைவ் இன்னுக்கு விடச் சொன்னாள். காலை உணவை உண்டு கொண்டிருந்த போது குழந்தையின் ஞாபகம் வந்தது. குழந்தைகள் தாத்தா பாட்டியின் அரவணைப்பில் மிகச் சிறப்பாகவே வளர்ந்து கொண்டிருந்தன. அவைகளைப் பற்றிய கவலை அவளுக்குத் தேவையில்லைதான். எனினும், குழந்தைகளின் நினைப்பைத் தொடர்ந்து, அன்பு மயமான கணவன், அழகே உருவான குழந்தைகள், இன்பமயமான குடும்பம் பற்றிய நினைவு அவள் மனதில் எழத்தான் செய்தது.

தன்னைப் பூ மாதிரி வைத்துக் கொள்கிற கணவன், தனக்காக, தனக்கு எது வேண்டும் என்று சிந்திக்கிற கணவன்–

இந்தச் சிந்தனை அவளுக்கு இனிமையாக இருந்தது. மறுகணமே தலையை உலுக்கி அந்தச் சிந்தனையைத் தன்னை விட்டுப் போக்கிக் கொள்ளவும் செய்தாள். எவ்வளவு முட்டாள்தனமான சிந்தனைகள் அவைகள். இப்படி அறிவீனமான சிந்தனைகள் பெண்களுக்குத் தோன்றக் காரணம், சினிமாவும், பத்திரிகைகளில் வரும் கதைகளும், பொய்யான காதல் கதைகள்! அவள் அவனுக்காகவே வாழ்ந்து கண்ணீர் சிந்தி, தியாகம் செய்து அவனை வாழ வைத்துத் தான் சாகிற கதைகள்.

'சுமதி ஏன் இந்தக் கெட்ட கனவு உனக்கு? நிமிர்ந்து நடக்க நேரான முதுகுத் தண்டும், வலுவான கால்களும் உள்ள நீ, எதற்காகச் சாய்ந்து கொள்ள தோள் வேண்டும் என்கிறாய்? உனக்குப் பசிக்கும் போது உன் காதலனுக்குப் பசிக்காது என்று நினைக்கிறாய்? நீ சாப்பிட்டால் அவனுக்கு வயிறு நிறையுமா? உன் வலி அவனுக்கு எப்படித் தெரியும்?

(தொடர்ந்து வரும்)



பிரபஞ்சன்

---

# அழகு...?

காந்தி அருணாசலம்–கனடா

> ராஜிக்த தாங்க முடியவில்லை. அவமானத்தால் முகம் கறுக்க, தலையைக் குனிந்தபடி இருந்தாள்.

"ஹும்ம...ஹும்ம...ஹும்மா..." என்று ஒரு துள்ளலுடன் இரட்டைப் பின்னல்கள் குதியாட்டம் போடப் படியேறிக் கொண்டிருந்த ரதி அம்மா பார்வதியைக் கண்டதும் அவசரமாக வாயை மூடிக்கொண்டாள்.

'இந்த அம்மாவுக்கு நான் சந்தோஷமாயிருந்தால் பிடிக்காதே.. ஒவ்வொரு அம்மாக்களும் தங்கள் பெண்கள் அழகாக இருந்தால் தூக்கித் தலைமீது வைத்துக் கொண்டாடுவார்கள். எனக்கென்றும் ஒரு அம்மா வாய்த்தாவே' என்று மனதில் நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

பார்வதிக்கும் கணவன் சுந்தருக்கும் இரட்டைக் குழந்தைகள்; அதுவும் இரண்டும் பெண்குழந்தையாய்ப் பிறந்ததில் சிறிது வருத்தம்தான். ஆனால் அவர்கள் வளர்ந்து மழலை பேசி வீட்டைக் கலகலக்க வைத்தபோது எல்லாமே மறந்து சொக்கிப் போனார்கள்.

மூத்தவள் ராஜி. அப்பா சுந்தரைப் போல் கறுப்பென்றால் அப்படியொரு கறுப்பு. இளையவள் ரதி பெயருக்கேற்றாற்போல் ரதியேதான். அதுவும் இளமையின் வாசலை எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும் இந்தப் பதினாறு வயதில் அவளது ரோஜா நிற மேனியையும் வட்ட நிலா முகத்தையும் முத்துப் பல் வரிசையையும் பற்றிப் பேசாதோரே கிடையாது. அப்படியொரு அழகு அவளுடையது.

அன்றும் அப்படித்தான் அவளுக்குத் தமிழ் படிப்பித்த ஆசிரியர், அழகிய பெண் ஒருத்தியின் அழகுக்கு உவமை சொல்ல ரதியைக் காட்டி விளக்கம் சொன்னார். ரதிக்குப் பெருமை பிடிபடவில்லை. எல்லாப் பெண்களுடைய கண்களும் அவளையே பொறாமையுடன் பார்ப்பதைத் தெரிந்தும் தெரியாதவளாகக் கர்வத்துடன் தலையை நிமிர்த்திச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

"பரவாயில்லையே. அழகுக்கும் அசிங்கத்துக்கும் உவமை சொல்ல ஒரே குடும்பத்திலேயே இருவரும் இருக்கிறார்களே. அசிங்கத்துக்கு அக்கா ராஜி. அழகுக்கு எங்கள் தேவதை ரதி" என்று ஆண்கள் பக்கத்திலிருந்து ஒரு குறும்புக்கார மாணவன் சத்தம் போட வகுப்பே 'கொல்'லென்று நகைத்தது.

ராஜிக்குத் தாங்க முடியவில்லை. அவமானத்தால் முகம் கறுத்துச் சிறுக்க தலையைக் குனிந்தபடி இருந்தாள். கண்களின் ஓரத்தில் நீர் முத்தாகி உருண்டது.

பாடசாலை முடிய ரதி துள்ளல் நடையுடன் புறப்பட்டாள். வீடு வந்தவுடன் மளமளவென்று உடை மாற்றி, முகம் கழுவிவிட்டு சாப்பிட அமர்ந்தாள்.

"ராஜி எங்கே காணேல்லை?" என்று வாசலைப் பார்த்தபடி பார்வதி கேட்டாள்.

"என்ரை பிரெண்ட்ஸ் எல்லாம் வடிவு தானே அம்மா. அதாலை ராஜிக்கும் அவைக்கும் சரிவராது. அவ தன்ரை பிரெண்ட்சோடை வாறா," என்று அலட்சியமாகச் சொன்னபடி ரதி சாப்பாட்டை ஒரு பிடி பிடிக்கத் தொடங்கினாள்.



வாடி வதங்கிய முகத்துடன் உள்ளே வந்து கொண்டிருந்த ராஜியைக் கண்டதும் பார்வதிக்குப் பகீர் என்றது.

"என்ன முகம் ஒரு மாதிரியிருக்கு? காய்ச்சலா ராஜிம்மா?" என்று ராஜியின் கழுத்தில் கை வைத்தபடி கேட்டாள் பார்வதி.

"ம் ஹூம்... ஒரே தலையிடியாயிருக்கு." என்றபடி சீருடையைக் கூட மாற்றாமல் கட்டிலில் போய்க் குப்புறப்படுத்தாள் ராஜி.

"பாவம் பிள்ளைக்கு யார் கண்ணோ பட்டுவிட்டது.. ஒருக்கால் நாவூறு சுத்தினால் தான் சரி வரும்," என்று கூறியபடி சுடச்சுடத் தேநீருடன் வந்த பார்வதி ராஜி அதைக் குடிக்கும்வரை பக்கத்திலிருந்து முதுகை ஆதரவுடன் தடவினாள்.

ரதிக்கு உலகத்திலேயே முதல் தரமான ஜோக் ஒன்றைக் கேட்டது போல் சிரிப்புப் பொங்கிக் கொண்டு வந்தது.

"ஐயோ அம்மா. ராஜியின் கலருக்கும், அழகுக்கும் யாரம்மா கண் வைப்பார்கள்? இப்போ சொன்னதுபோல் வேறு யாரும் நிற்கும் போது சொல்லிவிடாதீர்கள். கேலி பண்ணுவார்கள்!" என்று. சிரிப்பிடையே சொன்னாள் ரதி.

ராஜிக்கு இயலாமையும் ஏக்கமும் ஒன்று சேரக் கண்களில் நீர் திரண்டது. பார்வதிக்குப் பொறுக்கவில்லை. ரதியைத் தரதரவென்று இழுத்து வந்து ராஜிக்குப் பக்கத்தில் இருத்தினாள்.

"அடியே ரதி! நீயும் ராஜியும் ஒரே கருப்பையில் ஒண்டாக வளர்ந்த பிள்ளையள். உனக்கு உன்ரை வெளி அழகுதான் தெரியுது. அழகெண்டால் என்னெண்டு விளக்கம் தெரியாமலிருக்கிற உன்னைப்பார்த்துப் பரிதாபப்படுகிறதா, கவலைப்படுகிறதா எண்டு தெரியேல்லை. இண்டைக்கு உன்ரை அக்கா கறுப்பெண்டு நீ விலகிநடக்கலாம் நாளைக்கு உனக்கு அப்பிடி ஒரு பிள்ளை பிறந்தால் ஒதுக்கித்தான் வைப்பியா?" பார்வதியின் கேள்வி ரதிக்கு நெற்றிப் பொட்டில் அடித்தது போல இருந்தது. ரதி துணுக்குற்று நின்றாள்.

"உனக்கும் சரி, உன்ரை அக்காவுக்கும் சரி, உள்ளே சிவப்பு ரத்தம் தான் ஓடுது. சிவப்புத் தோல் ஆக்கள் தான் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா? உலகத்திலேயே புகழ் பெற்றவர்கள் பலர் கறுப்பு நிறத்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள். 'குஞ்சு அழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சழகும் அழகல்ல' எண்டதை படிச்சதோடை மட்டும் மறந்திட்டியே? உனக்கு ஒரு அந்தஸ்தைத் தர, நல்லறிவு தரும் கல்வியறிவும், ஒழுக்கமும்தான் எல்லா அழகையும் விடச் சிறந்ததெண்டு உனக்கு விளங்கேல்லை. அந்த அழகிலை உன்ரை அக்கா உன்னைவிட நூறு மடங்கு மேல். நீயும் அதில் அவளைப் போல் பேரழகியாக வரவேண்டுமென்பதே இந்த அம்மான்ரை பெரிய ஆசை" என்று உணர்ச்சியோடு ஆவேசமாகப் பார்வதி கூறி முடித்தபோது ரதி அம்மாவின் காலைக் கட்டிக்கொண்டு அழுது கொண்டிருந்தாள்.

தாழ்வுணர்ச்சியால் கூனிக்குறுகிக் கொண்டிருந்த ராஜி இருட்டிலிருந்து வெளிப்பட்ட புத்துணர்வுடன் தங்கையைத் தூக்கி நெஞ்சில் அணைத்து முத்தமிட்டாள்.

அதிக நாள் நெஞ்சில் பாரமாக இருந்த சுமை விலக மகிழ்ச்சியோடு பார்வதி தன் இரு பெண்களுக்கும் சேர்த்து மிளகாய் சுற்றி நாவூறு கண்ணூறை விரட்டிக் கொண்டிருந்தாள். ●



படிப்பகம்

www.padippakam.com

> "விமலாவை அடிக்கடி வீட்டுக்கு கூட்டி வர்றாரு. அவள் முன்னாடியே என்னை திட்டுறாரு..."

# அவள் பறந்து போனாளே



**ரவிவர்மன்**

அரிச்சந்திரன் புராண பாத்திரம்! அது கற்பனை என்பார்கள். இன்று யாரும் அரிச்சந்திரன் இல்லையா? இருக்கிறார்கள். ஏராளமான அரிச்சந்திரர்கள் இந்த பூமியில் உண்டு. பெரும்பாலான அரிச்சந்திரர்கள் ஒயின் ஷாப்களில் இருக்கிறார்கள்.

நிதானம்- அது, கள்ளத்தனம்!

போதை- அது உள்மன உசுப்பல்! கள்ளத்தனம், நம்மைக் கைக்குள் வைத்திருக்கும் எமோஷனல் படுத்தாது. அழவைக்காது.

உள்மனம் உசுப்பி விடும்போது வெளிப்பாடுகளுக்கு இடம், பொருள், ஏவல் தெரியாது. அண்ணாசாலையில் நின்று கொண்டு கூச்சலிட வேண்டும் போல் தோன்றும். பொலிஸ்காரரையே அறைந்து விட்டு பதிலுக்கு அவரிடம் லட்டி அடி வாங்க வேண்டியதிருக்கும். அழத்தோன்றும் சிகரெட்டால் சூடு வைத்துக்கொள்ளத் தோன்றும்.

சரவணனுக்குத் தோன்றியது. அவன் மூர்க்கத்தில் இருந்தான். கைகளாலேயே அடித்து யாரை யாவது கொன்று போடமாட்டோமா? என்ற வெறியில் இருந்தான் அவன். இந்த உலகமே தனக்கு எதிராய் சதி செய்து விட்டதாக நினைத்தான்.

எதிரே கடல் உறுமிக் கொண்டிருந்தது. சற்று நேரத்துக்கு முன் திருவல்லிக்கேணியில் இறக்கிக் கொண்டு வந்த 'ஓல்ட் காஸ்க்' வயிற்றில் மெல்லிய தீயாய் எரிந்து கொண்டிருந்தது. இவன் கடற்கரை மணலில் சரிந்து கிடந்தான். சற்று தூரத்தில் ஓர் இளஞ்ஜோடி ஒரு கட்டுமரத்தின் மீது சாய்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தது.

உடனே இவனுக்கு கோமதி டீச்சரின் ஞாபகம் வந்தது. எழுந்து உட்கார்ந்தான். ஆவேசம் வந்தவன் போல் பையிலிருந்து சிகரெட் எடுத்துப்பற்ற வைத்துக்கொண்டான். சிகரெட்டின் முனை சுடர்ந்தது.

இடது கையை வெறித்தான் புள்ளி புள்ளியாய் கோமதி என்கிற பெயர்! சிகரெட் நெருப்பாலேயே எழுதியது. மறுபடியும் சூடு வைக்க முடியாத அளவுக்கு அந்தப் பெயர் கையில் பெரிதாய் பதிந்திருந்தது. அது மனதில் பதிந்த காயம்! கோமதி டீச்சரை நினைக்கும்போது, அவனது உணர்வுகளில் இன்னும் அதிகப்படியாய் மூர்க்கம் ஏறியது. வாயிலிருந்த சிகரெட்டை எடுத்தான்.

அதன்சுடர் முனையை வலது கைக்கு அருகே கொண்டு வந்தான். அதன்தணல் வெப்பமாய் இருந்தது.

வைத்து அழுத்தினான்.

ஒரு 'சுரீர்'- இப்போது களைப்பாக இருந்தது. மீண்டும் மணலில் படுத்துக் கொண்டான். முதன் முறையாக அவன் கையில் சூடு வைத்துக் கொண்டது பசுமையாய் நினைவில் இருந்தது.

கோமதி டீச்சர் பணிபுரியும் பாடசாலையில் சரவணன் க்ளார்க் ஆக இருந்தான்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு குழந்தை ஏங்கிக்கொண்டிருக்கிறது. 'தன்னை யாரும் நேசிக்க மாட்டார்களா?' என்று அந்தக்குழந்தை காத்துக் கிடக்கிறது. கோமதியின் கணவன் அந்தக் குழந்தையைக் கண்டு கொள்ளவே இல்லை. அந்தக் குழந்தை கவனிப்பாரற்று ஏங்கி சவலைப் பிள்ளையாய் கிடந்த போதுதான்- சரவணனைச் சந்தித்தாள் கோமதி.

லஞ்ச் வேளைகளில் 'ஹலோ'வில் ஆரம்பித்தது. சரவணனுக்குள்ளும் குழந்தை ஏங்கிக் கிடந்தது. தனக்கு சமதையான இன்னொரு குழந்தை கிடைத்தவுடன் விரல் பிடித்துக் கொண்டது. நலம் விசாரித்தது. பேசப் பேச புரிந்து கொள்ளல் வளர்ந்தது. வலிகள் குறைந்தன.

குழந்தை குழந்தைக்குத் தோள்கொடுத்தது. ஒருவரின் அருகாமை மற்றவருக்கு இனிமை தந்தது. எதுவும் அளவுடன் இருந்தால்- இனிமை! அதற்கு மேல் ஒரு இஞ்ச் போனாலும் நரகமாகிவிடும். அவர்கள் நட்பு- பள்ளியில் மட்டுமே நின்றிருந்தால் பிரச்சனை இருந்திருக்காது. அன்று வியாழக்கிழமை. கணவன் வர லேட்டாகும் என்பதால் மாலையில் அவனை அவள் வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தாள்.

இரண்டுபேருமே எமோஷனாக இருந்தார்கள். உணர்ச்சி நிலைக்கு கண்கிடையாது. அதனால்தான் 'காதலுக்கு கண் இல்லை' என்றார்கள்.

சரவணன் அவளைப் பார்க்க அவளது வீட்டுக்குச் சென்றான். அதுதான் அவளைக் கடைசியாகப் பார்ப்பது என்பது அவனுக்குத் தெரியாது.

"சரவணன்.... இப்பவெல்லாம் எனக்குப் பல விஷயங்கள் பிடிக்கலே.... தவிப்பாக இருக்கு... பாதுகாப்பு இல்லாத மாதிரி பயமா இருக்கு... குழப்பம்... எனக்கே நல்லா தெரியுது... அவருக்கு நான் ஒரு பொருட்டே கிடையாது. வீட்டிலே நான் ஒருத்தி இருக்கேன்கிற விஷயம் அவருக்கு இப்பவெல்லாம் நினைவுக்கு வர்றதே இல்லே... அவரோட ஆபீஸ் டைப்பிஸ்ட் விமலாகூடதான் அதிகமாக நேரத்தைச் செலவிடுகிறார். ராத்திரி ரொம்பவும் லேட்டாக வீட்டுக்கு வர்றாரு... சின்ன சின்ன விஷயத்துக்கெல்லாம் தகராறு... கடுமையான திட்டு... ரொம்பவும் அவமானமா இருக்கு... உடம்பு கூசுது... இருக்கு...

"விமலாவை அடிக்கடி வீட்டுக்குக் கூட்டி வர்றாரு... அவள் முன்னாடியே என்னைத் திட்டுறாரு..."

"அவர் கிட்டே பேசிப்பார்க்கலாமே...?"

"பேச்சு...? பேசினால் உண்மை வரும்னு நினைக்கிறீங்களா? ஒரு வேளை நான் உண்மையைப் பேசினாலும் அதை அவர் ஆரோக்கியமா எடுத்துப்பாருங்கறீங்களா? ம் ஹூம்...

புருஷன் பொண்டாட்டிக்கிட்ட எந்த அளவுக்கு ஸ்நேகமா இருக்கிறானோ, அது மாதிரி டபுள் பங்கு ஸ்நேகித்தத்தை அவனோட மனைவி தருவாள். புருஷன் விலகிப் போனால், அதைவிட இரண்டு மடங்கு மனைவி விலகிப் போவாள். இன்னும்... இன்னும்... அதிகமாக விலகிப் போகணும் போலதான் தோணுதே தவிர, அவர்கிட்ட எனக்குப் பேசணும்னு தோணலே.." கூறிய கோமதி மேலே சுவரில் மாட்டியிருந்த அவர்களது திருமண போட்டோவைப் பார்த்தாள். அவளது விழிகளின் ஓரம் நீர் கசிந்திருந்தது.

"என் முதலிரவே ரொம்ப வேடிக்கையாக நடந்தது. முதலிரவில் ரெண்டு பேரும் பேசிக்கவே இல்லை தெரியுமா? முதலிரவு முடிஞ்சவுடனே அவர் அந்த பக்கமா திரும்பிப் படுத்துக்கிட்டாரு... நான் அழுதேன். எனக்குள்ளே நான் உருவாக்கி வச்சிருந்த என் கணவன்...என்னுடன் ரொம்ப நட்பாய் இருந்த கற்பனை ஸ்நேகிதன்...ஆதரவாய் என் தலைமுடியை வருடிவிடும் தாய்மை கலந்த ஆண்மகன்... எல்லாமே பொய்யாய் போச்சு..... என் முதலிரவே என்னால் ஜீரணிக்க முடியாத விஷயமா போச்சு... அதுக்குப் பிறகு, என் கற்பனைக் கணவனோடு தான் என் பேச்சு... என் பகிர்ந்து கொள்ளல்....

தண்ணீர் தேங்கிய சதுப்பு நிலம் மாதிரி மனசு ரொம்பவும் நெகிழ்ந்து போயிருந்துச்சி... யார்கிட்டேயாவது விஷயங்களை பகிர்ந்துக்கணும்னு ஏக்கமா இருந்தது. உங்களைப் பார்த்த பிறகுதான் எனக்கு கொஞ்சம் சந்தோஷம். ஆறுதல்! அடிக்கடி நீங்க எங்க வீட்டுக்கு வரணும்னு மனசு ஏங்குது. நீங்க எப்பவும் என்கூடவே இருந்துடமாட்டீங்களான்னு தோணுது... உங்களோட அருகாமை-அது பலம்."

வாசலுக்குச் சென்றாள். கதவைச் சாத்தி தாழிட்டாள். திரும்பிவந்தாள் சேரில் உட்கார்ந்திருந்த அவனுக்கு எதிரே மண்டியிட்டு அமர்ந்தாள். அவனது மடியில் தலைவைத்துக் கொண்டாள்.

"சரவணன் எனக்கு நீங்க வேணும்...."

அவளிடமிருந்து அழுகை கிளம்பியது.

அப்போது... கதவு தட்டப்பட்டது. "கோமதி... கதவைத்திற..." இருவரும் ஸ்தம்பித்து போனார்கள்.

அவள் அவசரமாய் எழுந்தாள். கண்களைத் துடைத்துக்கொண்டாள். சரவணனும் எழுந்து நின்றான்.

"ராஜா வந்துட்டார்..." என்றவள் பதட்டத்துடன் கதவருகே சென்றாள். கதவை திறந்தாள். ராஜா நின்றிருந்தான். சரவணன் 'ஹலோ...' சொல்லிவிட்டு அவசரமாக வெளியே வந்து விட்டான். ராஜா கோமதியை ஊடுருவி பார்த்தான்.

மறுநாள்... சரவணன் பள்ளிக்கூடத்துக்குச் சென்றபோது, அன்று பள்ளி விடுமுறை என்றார்கள். காரணம் தெரிந்து கொண்ட போது-

அவன் ஸ்தம்பித்துப் போனான்.

கோமதி தற்கொலை செய்து கொண்டாளாம். அன்று உடைந்து போனவன்தான். புத்தி பேதலித்தது போல் ஆனது. அன்று ஆரம்பித்தவைதான் எல்லா பழக்கங்களும்.

சிகரெட் சூடு அன்று இரவு வைத்துக் கொணடதுதான். கோமதியின் நினைவுகள் சுடும்போது சிகரெட் சூடுதான் அவனைப் பாதுகாக்கும்.

கோமதி தென்றல்!

புயலாய் மாறிப்போன தென்றல்! அவனது ரோஜாத் தோட்டத்தை நிர்மூலமாக்கிய தென்றல்!

கோமதி எப்படி செத்தாள்? தற்கொலையா? கொலையா? அதைத் தெரிந்து கொள்ள அவனுக்கு சுவாரஸ்யம் இல்லை. கணவன் அவளைத் திட்டியிருப்பானோ? நான் செய்தது தவறோ? ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டு அதிகப்படியாய் என்னை வெளிப்படுத்திக் கொண்டு விட்டேனோ? அவனது உள்ளுணர்ச்சி அவனையே உறுத்தும் அடிக்கடி.

"கோமதி..." கூவினான் கடலலையைப் பார்த்து. கடலில் அலைகள் வரலாம்- போகலாம். கோமதி ஒருத்திதான்! வந்தாள் போனாள். இனி திரும்பி வரமுடியாது. ஏனென்றால் கோமதி மாதிரி அன்பான, மென்மையான, நட்பான, இனிமையான, கொஞ்சம் கள்ளத்தனமும், நிறைய பாமரத்தனமும் கலந்த ஒரு பெண் வரமாட்டாள். வரவும் முடியாது. ■

---

# நோதலும் தணித்தலும்

**சஞ்சீவி சிவகுமார்**

> "ஓம் கட்டிவந்த சீதனம் பேங்கில கொட்டிக்கிடக்கு முடிவைச் சொல்லு?"

சியாமினியின் முக வாட்டம் ரகுவை வேதனைப்படுத்தியிருக்க வேண்டும். தன் கைகளால் அவள் விரல்களை இறுகப்பற்றிக் கொண்டான். இமை மடல்கள் விரித்து விழிகள் அன்பைப் பரிமாறிக் கொண்டன. சலனமின்றி அவள் அன்பை முழுமையாக உறுஞ்சிக் கொள்வதாக ஓர் ஆழ்ந்த சுவாசிப்பு. இல்லை பெருமூச்சு அவனிடத்தில் பிறந்து மடிந்தது. அப்போது அக் கட்டிடத்தின் மேலாகக் கிக்கிலுப்பை ஒன்று "குக்குக்குக்குக்கூ...." சொல்லிப் போயிற்று. உதடுகள் துடிக்க ஏதோ கேட்க முயன்ற ரகுவின் நெற்றியை ஆதரவாக அவள் வருடி விட்டாள். கட்டாயப்படுத்தி வரவழைத்த புன்னகை அவள் உதடுகளில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தது.

அவனது விழி ஓரம் அவனை மீறிப் பனித்துக் கொண்டது. அவள் முகத்தை ஊடுருவி, மிக ஊடுருவி எதைத் தேடுகிறான். சில காலமாய்த் தொலைந்துபோன அவளது குறும்புத்தனத்தையா? இல்லை கரப்பான் பூச்சிக்கே



பயந்து கொண்டு குசினிக்குள் போக முரண்படுகின்ற அவள் குழந்தைத்தனத்தையா? எதைத் தேடுகிறான்.

மீண்டும் கிக்கிலுப்பையின் "கூக்குக்குக்குக்குக்கூ....." சற்று தள்ளி இருந்த 'பெஞ்சில்' அமர்ந்திருந்த ரகுவின் தாய் மீனாட்சி "என்ன இந்தக் கிக்கிலுப்பை திரும்பத் திரும்ப தலைக்கு மேலால அடிச்சுப் போகுது... ஆகாது...!" என்று பொருமிக் கொண்டாள்.

● ●

ரகு- சியாமினி திருமணம் நடந்து 3 மாதம் 6 நாட்கள் ஆகிறது. இப்போதெல்லாம் நடக்கும் நடுத்தர வர்க்கத் திருமணங்கள் போலத்தான் இதுவும். காதலில் தொடங்கி, சீதனத்தில் சுணங்கி, மாப்பிள்ளையின் குடும்பம் என்ற வரட்டு ஆதிக்கத்தை நிலை நிறுத்தி நிறைவேறிய திருமணம்.

ரகுவின் காதல் விடயத்தைக் கேள்விப்பட்டதும் ருத்திர தாண்டவமே ஆடினாள் மீனாட்சி. "பத்து மாதம் சுமந்து பெற்று, அனுபிணியெல்லாம் தாங்கி, வளர்த்துப், படிப்பிச்சி, ஆளாக்கிவிட்டதுக்கு என்ர விருப்பத்திற்கு எதிராக விரும்பினவளைக் கட்டிட்டு வாழ்ற என்றால் உன்ர இஷ்டப்படி நடாத்து. பிறகு தாயெண்டு என்ர கண்ணிலையும் முழிக்காத.." தாயின் வார்த்தைகள் அவனது காதல் கோட்டையை எறிகணைகளாகத் தாக்கியது.

தந்தை சண்முகம் கூட உக்கிரமாகவே நின்றார். "சீரழியப் போறாடா... சீரழியப் போறா..." என்று தொடங்கி பஜனையே பாடினார்.

ஒன்றரை வருட இழுபறிக்குபின் மூன்று இலட்சம் சீதனம், வீடுவளவு, நகை என்ற திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டது. சியாமினியின் பெற்றோரும் வேறு வழியின்றித் தலையசைத்தனர். ரகுவாலும் பெற்றோரை மீறுவது கஷ்டமாயிருந்தது.

"ரகு நகையெல்லாம் வித்தாலும் ஒரு லட்சம்தான் தேறும். அப்பாவும், அம்மாவும் யோசனை பிடித்துப் போய் இருக்காங்க. பாவம், அவங்க தான் என்ன செய்வாங்க?" சியாமினி கண் கலங்கச் சொன்னபோது ரகுவால் அவளைச் சமாதானப்படுத்த முடியவில்லை.

"இன்னும் இரண்டு இலட்சத்திற்கு எங்கு போற" ரகு நீண்ட நேர யோசனையின் பின் தன் முடிவைச் சொன்ன போது சியாமினி ஒரு தடவை ஆடித்தான் போனாள்.

"ரகு... நீங்க... என்ன...?" என்று அவன் கைகளைப் பற்றிக் கொண்டு அழுதாள். ரகுவிடமிருந்து இப்படியொரு முடிவை அவள் எதிர்பார்க்கவில்லை.

"சியா, எனக்கு இதைத்தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை." ரகு வெற்று வானை வெறித்துக் கொண்டிருந்தான்.

கிக்கிலுப்பை மீண்டும் அவர்களின் தலைக்கு மேலாக அலறிப்போனது. அந்த 'நேசிங் ஹோமின்' அருகாக இருந்த சேற்றுக் குளத்தில் மீனைக் கௌவித் தன் வயிற்றை நிரப்பிக் கொள்வதில் கொண்ட ஆர்வத்தினால் கத்திப்போயிருக்கும்.

"பேசன்டின் மனைவி நீங்கதானே? டொக்டர் கூப்பிடுறார்" நேர்ஸ் சொல்லிவிட்டு மறைந்தாள். சியாமினி டொக்டரின் அறையை நோக்கி நடந்தாள். பதட்டமும், கேள்வியுமாக அவள் முகம் அங்கலாய்த்து கொண்டிருந்தது.

"அது... சாதகப் பொருத்தம், யோனிப் பொருத்தம். பெண்ணின் தாரபலன், இதெல்லாம் பார்த்துத்தான் கல்யாணம் செய்யிற. அவரின்ர இஷ்டத்திற்கு லவ்வு, கிவ்வு என்று சொல்லிவிட்டு கட்டிக்கிட்டார். இப்ப வாறதை அவர் அனுபவிக்கிறார்." நேசிங் ஹோம் வராந்தாவில் சண்முகம் யாருடனோ பேசிக் கொண்டு நின்றார். இதயம் கருங்கற் பாறையாகக் கனத்தது. சியாமினிக்கு. இவற்றையெல்லாம் உள் வாங்கியே ஆக வேண்டும் என்ற வக்கிரத்தை வரவழைத்துக் கொண்டாளோ என்னவோ டொக்டரின் அறையை நோக்கி விசையாக நடந்தாள்.

"நீங்கதான் மிஸிஸ் ரகுசங்கரா?"

தலையாட்டினாள்.

"எக்ஸ்றே றிபோர்ட் வந்திருக்கு. அவரின்ர ஒரு சிறு நீரகம் ஏற்கனவே அகற்றப்பட்டிருக்கு. மற்றச் சிறு நீரகம் முழுமையாகப் பழுதடைந்த நிலையில் இருக்கு. ஆபத்தான கட்டத்திற்கு வந்தாயிற்று. நான் நினைக்கிறன் முதல் சிறு நீரகம் அகற்றப்படும் போதுதான் இன்ஸ்பெக்சன் நடந்து மற்றதுக்கும் 'நெப்ரைட்டிஸ்' வந்திருக்க வேண்டும். உடனடியாக சிறு நீரகம் மாற்றீடு செய்யப்பட வேண்டும். 4-5 இலட்சம் செலவாகும். அதுவரைக்கும் செயற்கையாக சிறு நீர் வடிப்புக்கருவி மூலம்தான் அவரை உயிரோடு வைத்திருக்க முடியும். உங்கள் உடல் நிலையும் சிறு நீரகமும் ஆரோக்கியமாக இருக்கும் என்றால், நீங்கள் விரும்பினால் உங்கள் ஒரு சிறு நீரகத்தை கணவருக்கு மாற்றீடு செய்யலாம். அல்லது வெளியில் பணம் கொடுத்து உடனே பெறுவதும் கஷ்டம்...."

சியாமினியால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எந்தச் சிறு நீரகத்தைச் சியாமினி கொடுப்பாள்? உள்ளதே ஒரு சிறு நீரகம். அவள் அதையும் கொடுக்கத் தயார்தான் ஆனால் டொக்டர் மறுப்பாரே!

ரகு.... நமது காதலுக்கு சீதனம் தடையாக நின்றபோது துணிந்து சொன்னீங்களே.. 'நாம் சிறு நீரகங்கள் ஒவ்வொன்றை விற்போம். இரண்டு இலட்சத்திற்கு வரும். இதுதான் எனது அம்மா அப்பாவைப் பிரியாமல் நமது திருமணம் நடைபெறுவதற்கு உள்ள ஒரே வழி. ஒரே பிள்ளையான நான் அம்மா, அப்பாவைப் பிரிந்து, எதிர்த்துத் திருமணம் செய்தால் அவங்க வேதனைப்படுவாங்க! என்று உறுதியாக நின்றீங்களே! இப்போ காதலை வாழ வைத்துவிட்டு நீங்க நோயாளி ஆகிட்டீங்களே ரகு! கடவுளே! எனது சிறு நீரகமும் அகற்றப்பட்டதுதானே. எனக்கு இந்த நோயைத் தந்திருக்கலாமே. ரகு உங்கட தியாகத்தில் பங்கு கொண்ட எனக்கு உங்கள் துன்பத்தில் பங்கு கொள்ள இடம் கிடைக்கவில்லையே. இவ்வாறு தடுமாறிய சிந்தனைகளுடன் கண்களைத் துடைத்து நிமிர்ந்தாள் சியாமினி.

"சரி. மிஸிஸ் ரகுசங்கர். நீங்க போகலாம், யோசித்து முடிவை நாளைக்குச் சொல்லுங்க!" டொக்டர் சொல்லி விட்டுத் தன் வேலையில் ஆழ்ந்தார்.

தளர்ந்த நடையுடன் சியாமினி டொக்டரின் அறையிலிருந்து வராந்தாவில் நடந்து கொண்டிருந்தாள். உலகமே கண்ணொளிமங்கலில் நிழலாகத் தெரிந்தது அவளுக்கு.

"நம்மட பார்வதிக் கிழவி கடைசியாகக் கட்டியிருந்த கந்தப்பர், புகையிலைத் தோட்டத்திற்கு தண்ணி பாய்ச்சக் குள்ள நெஞ்சுக்குத்து என்று குந்தினவர். துடிக்கப் பதைக்கப் போனார்.. அதுக்கு முதல் அந்த மனுசியைக் கட்டியிருந்த இரண்டு பேரும் இப்படித்தான் கல்யாணம் கட்டி 6 மாசம், ஒரு வருசத்தில போயிட்டாங்க. மனுசி ஏழு தாலிக்கு ஆகாதாம்... இதுவும் எத்தனை தாலியை...." சியாமினியைக் கண்டதும் வார்த்தைகளை விழுங்கிக் கொண்டார் அங்கு பேசிக் கொண்டு நின்ற முதியவர்.

ரகு படும் வேதனை, முனுகல் ஏற்படுத்திய துயரம் ஒரு புறம். டொக்டர் கூறிய வார்த்தைகள் ஏற்படுத்திய ஏக்கம் மறுபுறம். இதனுடன் 'ஏழு தாலிக்கு ஆகாதவள்' என்று ஊரே அடிக்கடி படம் போட்டுப் பேசும் பார்வதிக் கிழவியுடன் தன்னையும் ஒப்பிட்டுப் பேசும் அயலவரின் பேச்சும் சேர்ந்து இதயத்தை இறுக்கிப் பிழிந்தது.

'ஏழு தாலிக்கு ஆகாதவள்' என்பது போன்ற சாஸ்திர சம்பிரதாயங்களில் உண்மை இருக்குதா?' சலனப்படுகையில் சில வேளைகளில் மனம் சம்பந்தமின்றிச் சிந்திக்கும். அவளுக்குள்ளும் இந்த வேண்டாத ஆராய்ச்சி எழுந்தது. தீவிரமாக விடைதேடும் அளவுக்கு அவள் மனம் தெளிவாக இல்லை. ஆனால் பார்வதிக் கிழவிபோல தானும் பேசப்படுகிறோமே என்பது மட்டும் ஜீரணமாகாத உணவுத்திரளையாக நெஞ்சில் முட்டியது.

"டொக்டர் என்னவாம்?" ரகுவின் தாய் மீனாட்சிதான் கேட்டாள். "சிறுநீரகம் மாற்றணுமாம், 5 இலட்சம் செலவாகுமாம். நாளைக்கு முடிவு சொல்லட்டுமாம்" சியாமினி தட்டுத் தடுமாறிச் சொன்னாள். "ஓம் கட்டிவந்த சீதனம் பேங்கில கொட்டிக் கிடக்கு... முடிவைச் சொல்லு".

மீனாட்சி கொட்டிய வார்த்தைகள் அவள் இதயத்தை அனலாய்த் தகித்தது. ஜன்னலூடு வெளியே வெறித்தாள். கிக்கிலுப்பை வேலிக்கட்டையில் நின்று தன்வாயில் கௌவி வைத்திருந்த மீனை விழுங்கிவிட்டு மீண்டுமொரு முறை கத்திக்கொள்ள தயராகிக் கொண்டிருந்தது.

'இல்லை... நான் ரகுவைக் காப்பாற்றுவேன்... என் விழிவெண்படலம், இரத்தம் இவற்றை விற்பேன்.' மனதுக்குள் முடிவெடுத்துக் கொண்டாள். முகம் உக்கிரத்தால் சிவப்பேற வெளியே நடந்தாள்.

வழியில் ரகுவின் நண்பன் சங்கரி வந்து கொண்டிருந்தான். ரகுதான் நோய்வாய்ப்பட்ட ஆரம்பத்திலேயே தனது சிறு நீரகம் அகற்றப்பட்டது பற்றி சங்கரிக்குக் கூறியிருந்தான். சங்கரியின் முயற்சியால் ரகு உறுப்பினராய் இருக்கும் பொது நிறுவனம் ஒன்று நிதி வசூலித்து ரகுவைக்காப்பாற்ற முன் வந்திருந்தது.

சங்கரி அந்த செய்தியை சொன்னதும் சியாமினிக்கு வயிற்றில் பால்வார்த்தது போலாகிவிட்டது.

போலியான சகுனங்கள், சம்பிரதாயங்கள் அந்த மகிழ்ச்சியில் அடிபட்டு போய்க்கொண்டிருந்தன.

மீண்டும் கிக்கிலுப்பை அதே "குக்குக்குக்கூ....."வுடன் அவர்களின் தலைக்கு மேலாகப் பறந்து போனது. ■



படிப்பகம்

www.padippakam.com

# காதல் பார்வை



"கண்ணே உன்னில் எனக்கொரு
கண்தான்!
பெண்ணே! எனக்கு நீ யொரு
பொன்தான்!"

சொல்லிப் பார்த்தான்
மனதுக்குள்.
ஒத்திகை பார்த்த வார்த்தைகள்
ஒத்துவரவில்லை.

"ஒளி உமிழும் கண்களடி
குழி விழுந்த கன்னமடி
களி கொள்ளும் இதழ்களடி
கிளி கொத்தும் கவனமடி"

இரண்டாவது ஒத்திகையும்
மனதோடு முரண்டுபிடித்தது.

"தேன் கலந்த கள் குடிக்க.
நான் விரும்பி நிற்கிறேன்.
மாங் கனிகள் இரண்டை அள்ளும்
கள்வனாகத் துடிக்கிறேன்.

கண்டதுமே கட்டவிழும்
ஆசைக்குதிரை மீதிலே
கண்ணே உனை வட்டமிட்டு
காதல் பூசைசெய்ய சுற்றினேன்.

உள்ளம் என்ன ஊமையோ
உள்ளே இல்லை ஈரமோ
வெள்ளம் எனப்பாயும் காதல்
உட்புகவே இல்லையோ?"

ஒத்திகை பார்த்தவனுக்கு
ஓரளவு திருப்தி வந்தது.

'உருப்பெற்றுவிட்ட வார்த்தைகளை
உதட்டால் பேசலாமா- அல்லது
ஒரு மடலாய் எழுதி நீட்டலாமா?'

ஒரு முடிவுக்கு வரமுடியாமல்
உள்ளம் அங்குமிங்கும் அலைந்தது.

'காதலை வெளியிடுவதும்
பிரசவ வேதனைக்கு
ஈடானதுதானோ?'
உள்ளம் வினா எழுப்பி விசாரித்தது!

'ஈடானதுதான்,
சுகப் பிரசவம் காணும்வரை
தாய் படுவாள் வேதனை
சுபமுடிவு எட்டும்வரை
காதலர் தாம் படுவார் வேதனை!'

புறப்பட்டான்,
கும்பிடப்போன தெய்வம்
குறுக்கே வந்தது!

'தன்னைப் பார்க்கிறாளா
தாண்டி அப்பால் பார்க்கிறாளா?'
கண்ணை நம்பி முடிவெடுக்க முடியாமல்
தயக்கம் தடைச்சுவர் எழுப்பியது!

மறு தரப்பிலும் அதே நிலைதான்
குறு குறுப்புத்தான் மனதில்

"ஓங்கிய வாள் போல் வந்தார்
ஏன் ஒதுங்கிப் போய்விட்டார்
வீங்கிய புஜ வீரன்
ஏன் பதுங்கி ஓடுகிறார்?

கண்ணெதிரே வேல் வரினும்
கலங்கிடாத வீரர்
பெண்ணெதிரே வந்தவுடன்
கலங்குவதும் ஏனோ?"

கேட்கத்தான் நினைத்தாள்
நாக்குத்தான் மறுத்தது.
பார்க்கத்தான் நினைத்தாள்
நாணம்தான் தடுத்தது.

அவன் நிலையும்
முரண் நிலைதான்!

"பேசிவிடு- காதல் வலை
வீசி விடு" என்றது மனது!

"தூசி என்று நினைத்து
தூக்கி எறிவாளோ-என்
காதலை வீசியெறிவாளோ?"
என்றது இன்னொரு மனது.

எதிரும் புதிருமாக
அருகருகே வந்தபோது
இதயத்துடிப்பு செவியில் கேட்டது!

'அருகே வந்தபோது
அவள் தாமதித்தாளா?
அல்லது மெல்லத்
தரை மிதித்தாளா?'

சிந்தித்தபடியே கடந்தான்
அவள் விட்டுச் சென்ற வாசனை
அவன் சுவாசத்தில் கலந்து போனது!

"உன்னைத் தொட்ட
காற்று வந்து
என்னைத் தொட்டதா
என்னைத் தொட்ட
காற்றும் வந்து
உன்னைத் தொட்டதா?"
எங்கோ படித்த கவிதை
இதயத்திற்கு சுகமளித்தது!

"பேசுவதும் ஒரு சுகம்
பெண்ணே நீ
பேசாமல் போவதும் ஒரு சுகம்!"
இப்போது அவனே
ஒரு கவிஞனாகினான்.

'என் காதலுக்கு விதையும் நீ
என் கவிதைக்கு விதையும் நீ
எப்போது பெண்ணே நீ
எனக்குள் நீரூற்றப் போகிறாய்?'

வினாக்களும் விதையாகின
கனாக்களும் கதையாகின.

'என்னருகில் நீ சென்றாய்
உன்னருகில் நான் சென்றேன்
கண்களுக்கே தெரியாமல்
உள்ளிருந்த உயிர்கள்
இடம் மாறிக் கொண்டதடி!

சுவாசப் பரிமாற்றம்
சுகமாக நடந்தேறியதால்
எனக்காக நீயும்
உனக்கா நானும்
மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறோம்!

கூடுவிட்டுக் கூடுபாயும்
வித்தையடி நம் காதல்
ஒருவர் உயிரை இன்னொருவர்
சுமந்து திரிவதே சுகம்தான்!'

எழுதி எழுதி தோய்ந்தன விரல்கள்
நழுவி நழுவிப் போயின நாட்கள்.

"திறந்து விடு மனதை
கறந்து கொடு உன் கனவை
பிறந்துவிடும் காதல்"
என்றான் நண்பன்.

"நேசமாய் பார்வை இல்லை
வாசமாய் நகைப்பும் இல்லை
நான் என்ன செய்வேன் நண்பா?"

கலக்கமாய் கேட்டவனை
இணக்கமாய் தோளில் தட்டி
நண்பன் நகைத்தான் மெல்ல.

## இலக்கிய நயம்



தருவது ரசிகன்

"அருகிலே சென்ற உன்னை
அயலவர் போன்றோ பார்த்தாள்?"

"ஆமடா! ஆமாம்,
அன்பென்ற நோக்கம் இல்லை!"

"அதுதாண்டா காதல் பார்வை
அகத்தினில் அன்பை நோக்கி
புறத்தினில் பொய்யைப் பூசி
பார்ப்பதே காதல் பார்வை!"

"நம்பலாமா நண்பா-ஒன்றும்
வம்பாகிடாதோ?

நான் சொன்னால் நம்பமாட்டாய்
நற் தமிழ் மறை திருக்குறளில்
நான் சொன்ன கருத்தறிவாய்
பார் இதை பாடல் கேட்பாய்.

"ஏதிலர் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலர் கண்ணே யுள"
குறள்-1099. அதிகாரம்.110

## ஸ்போர்ட்ஸ்

### தாமதமாக வந்த சிங்



இந்திய கிரிக்கெட் அணியில் அண்மையில் இடம்பிடித்து, சிறப்பாக விளையாடி வரும் சகலதுறை ஆட்டக்காரர் ரொபின் சிங்.

தமிழ்நாட்டு அணிக்காக விளையாடிய ரொபின் சிங்கிற்கு 32 வயதிற்குப் பின்னர்தான் இந்திய அணியில் இடம் கிடைத்தது.

மேற்கிந்தியத் தீவுகளில் பிறந்த இந்தியரான இவர் கிரிக்கெட் விளையாடுவதற்காக இந்தியாவில் குடியேறியவர். சென்னையில் வசிக்கும் இவர் தமிழ்ப்பெண் ஒருவரையே திருமணம் செய்துள்ளார்.

தனது 25வது வயதில் இந்திய அணியில் இடம்பெற்றார். ஆனால் சேர்க்கப்பட்ட வேகத்தில் நீக்கப்பட்டார். அதன் பின்னர் இவ்வளவு காலமும் இவர் ஒதுக்கியே வைக்கப்பட்டிருந்தார்.

இந்தக் காலத்தில் உள்ளூர்ப் போட்டிகளில் நன்றாக விளையாடினார். இருப்பினும் இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வாளர்கள் கண்டு கொள்ளவேயில்லை.

இந்திய அணிக்கு ஒரு சகலதுறை வீரர் தேவை என்றபோதுதான் ரொபின் சிங் சேர்த்துக் கொள்ளப்பட்டார். கிடைத்த சந்தர்ப்பத்தை இவர் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்.

முதலில் 6வது வீரராக களத்தில் இறக்கப்பட்ட ரொபின் சிங் சம்பத்திய ஒருநாள் போட்டிகளில் சிறப்பாக விளையாடியதால் 3வது இடத்திற்கு உயர்த்தப்பட்டார்.

இந்திய அணியில் மிகச் சிறந்த சகலதுறை வீரராக மட்டுமல்லாது சிறந்த களத்தடுப்பு வீரராகவும் ரொபின் சிங் இருக்கிறார்.

### 13வது இடத்தில் ஸ்டெபி

டென்னிஸ் போட்டிகளில் சிறப்பாக விளையாடி 2 கிராண்ட் ஸ்லாம் பட்டத்தையும், 103 ஒற்றையர் பட்டத்தையும் வென்றுள்ளவர் ஸ்டெபி கிராஃப். 28 வயதான ஜேர்மனிநாட்டு வீராங்கனையான இவருக்கு காலில் ஏற்பட்ட மூட்டுவலி காரணமாக சிறிது காலம் போட்டிகளில் பங்கு பெறாமல் ஒதுங்கியிருந்தார்.

தற்போது உடல்நிலை தேறிவரும் இவர் வரும் நவம்பர் மாதத்தில் இருந்து மீண்டும் போட்டிகளில் கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. உலகடென்னிஸ் வீராங்கனைகள் வரிசையில் முதலிடத்தில் இருந்த ஸ்டெபி கிராஃப் தற்போது 13வது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறார்.

### ஓய்கிறார் லூயிஸ்

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல தடகள வீரர் கார்ல் லூயிஸ் விளையாட்டில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 1996ம் ஆண்டு அட்லாண்டாவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் நீளம் தாண்டுதலில் தங்கம் வென்றவர். அப்போதே அவர் ஓய்வு பெற முடிவு செய்தார்.

கார்ல் 'லூயிஸ் ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து அவருக்கு செப்டெம்பர் 13ம் திகதி அமெரிக்காவில் வழியனுப்பு விழா நடந்தது. இதில் உலகம் முழுவதிலுமுள்ள ஏராளமான தடகள வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

### சாதனை படைப்பார் டெண்டுல்கர்

ஒருநாள் போட்டிகளில் அதிரடியாகவும், டெஸ்ட் போட்டிகளில் நிதானமாகவும் ஆடும் பக்குவத்தை பெற்று, எவரும் குறை கூற முடியாத அளவு சிறப்பாக ஆடி வருகிறார். இந்திய அணியின் கப்டன் சச்சின் டெண்டுல்கர்.

24 வயதான டெண்டுல்கர் குறைந்தது இன்னமும் 8 ஆண்டுகள் இந்திய அணியில் இடம்பெற்று விளையாடலாம். டெஸ்ட், மற்றும் ஒருநாள் போட்டிகளில் டெண்டுல்கர் மற்ற வீரர்களைவிட, அதிக ஓட்டங்களைக் குவித்துச் சாதனை படைப்பார் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

அதேநேரம் கப்டன் ஆனவுடன் டெண்டுல்கரின் ஆட்டம் மோசமாகிவருவதாக ஒரு பக்கம் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுபற்றி டெண்டுல்கர் தெரிவித்த கருத்து:

"அடிப்படையில் நான் போராடும் குணம் கொண்டவன். அதனால் சவால்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. நான் கிரிக்கெட்டை தொழில் ரீதியாக ஆடி வருபவன். அதனால்தான் இப்போதும் கிரிக்கெட்டில் இருக்கிறேன்.

என்னை மறுமதிப்பீடு செய்து கொள்வதும் புதிய தொழில் நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வதும் என்னுடைய முக்கிய கடமைகளும் ஒன்றாகும்" என்று கூறியுள்ளார் டெண்டுல்கர்.

"ஒரு நாள் போட்டிகளில் துவக்க ஆட்டக்காரராக இறங்கும் போது அதிரடி ஆட்டம் நடத்தி ரன்களைக் குவித்தால்தான், பின்னால் ஆடுபவர்கள் நெருக்கடி இன்றி ஆடுவார்கள். அடித்து ஆடும்போதுதான்நான் சந்தோஷமாக விளையாடுகிறேன்." என்றும் தெரிவித்திருக்கிறார் டெண்டுல்கர்.

## சிந்தியா பதில்கள்

* இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஐ.தே.கட்சி நினைத்தால் உதவலாம்தானே?

கே.சியாமளா, கொழும்பு-08.

"அவர்கள் நினையார்கள், முடியார்கள்!" என்று சொல்லித்தானே இவர்கள் பதவிக்கு வந்தார்கள், இப்போது இவர்களே அவர்கள் பக்கம் கைகாட்டிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தமுங்க?!

❑✦

* சந்தன வீரப்பன் சரணடையவில்லையே ஏன்?

எம்.தினேஷ், டிக்கோயா.

கலைஞர் கருணாநிதியும் 'நக்கீரன்' ஆசிரியரும் இணைந்து அரங்கேற்றிய நாடகத்தை கர்நாடக அரசு ரசிக்காததுதான் காரணம்.

❑✦

* செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் வாழலாம் என்ற சாத்தியக்கூறு பயன் அளிக்குமா?

வீ.ஸ்ரீராஜன், திருகோணமலை.

பயன் அளித்தால் முதலில் பறிபோவது அங்குள்ள நிம்மதிதான். பொல்லா மனிதச் சகவாசக் காற்றுப்பட்டாலே போதும்; கிரகங்களும் கெட்டுப்போம்!

❑✦

* தொடர்ச்சியாக இலங்கைக் கிரிக்கெட் அணி குவிக்கும் வெற்றிகளைப்பற்றி பிரபாகரன் என்ன நினைப்பார்?

எஸ்.மதுரா, ஹட்டன்.

அதிரடிதான் பயனளிக்கிறது என்று!

❑✦

* தமிழ்நாட்டில் தற்போது பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கும் திரைப்படம் எது?

சி.பாயிஸ், பேருவளை.

'பகைவன்.'

❑✦

* டியர் சிந்தியா! இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே நடைபெற்ற முதல் டெஸ்ட்டில் ஆடுகளம் பற்றி இந்தியப் பத்திரிகைகளும், டெண்டுல்கரும் குறை கூறி உள்ளனரே?

க.விஜயகுமாரி, நாரஹேன்பிட்டி.

அதே ஆடுகளத்தில்தானே அவர்களும் ஆடினார்கள்! தவிர இந்திய-பாகிஸ்தான் இடையேயான போட்டியில் அதே ஆடுகளம் தொடர்பாக பாகிஸ்தான் அணி குறை கூறியபோது, இந்திய அணி பாராட்டியும் இருந்ததே.

❑✦

* சிந்தியா! காணாமல்போன ஆயுதக் கப்பலைக் கண்டுபிடித்துவிட்டார்களா?

என்.ரீ.அமீனுதீன், அக்கரைப்பற்று-05.

ஆம்! ஆனால் ஆயுதங்கள் இல்லாமல்!

❑✦

* விளையாட்டுத் துறையில் இலங்கையின் வளர்ச்சி எப்படி?

எம்.கனகராஜா, மட்டக்களப்பு.

அரசியல்துறையில் உள்ளவர்களும் பயன்படுத்திக் கொள்ளும் அளவில் இருக்கிறது.

❑✦

* சிந்தியா! சினிமா உலகில் அதி உயர் விருது எது?

எம்.ஐ.எம்.ஹசீன், மருதமுனை-01.

சிறந்த ரசிகர், ரசிகைகளின் மனம் திறந்த பாராட்டு.

❑✦

* விரோதி-துரோகி இரண்டுக்கும் என்ன வேறுபாடு?

கே.எம்.நஜீம், சின்னப்பாலமுனை.

முகம் தெரிந்த எதிரியை விரோதி எனலாம். முதுகுக்குப்பின் இருக்கும் எதிரியை துரோகி எனலாம்.

❑✦

* சிந்தியா! பந்து எல்லையைத் தொட்டால் நாலு ரன்கள் (பவுண்டரி) கிடைக்கிறது. போகுமா போகாதா என்று தெரியாமல் அதற்குள் இரண்டு மூன்று ஓட்டங்களை ஓடிச் சேர்த்துவிட்டு களைத்துப் போகும் ஆட்டக்காரர் பாவம்தானே? அதற்கும் சேர்த்து கணக்குப் போட்டால் என்னவாம்?

ஜே.வில்பிறட், காலி.

பாவம்தான். அப்படிப் போடமாட்டார்கள். ஆனால், பவுண்டரிக்கு அடித்த பந்தை சேகரித்து வீசும் பந்து தடுப்பாளர் வேகமாக வீச மறுபடி வந்து பவுண்டரியைத் தொட்டால் 8 ரன் கிடைக்கும்.

❑✦

* ஏமாளிகளாக நாம் இருப்பதால்தானே ஏமாற்றுகிறவர்கள் இருக்கிறார்கள்? ஒப்புக் கொள்கிறீர்களா?

ஆர்.விஜயகுமார், மன்னார்.

நூறு வீதம் ஆம்! ஒரு குட்டிக் கதை:

ஏப்ரல் முதல் திக்தியன்று தன் நண்பனைத் தேடிப் போனான் ஒருத்தன்.

"டேய்! எனக்கு உன்னை ஐந்து வருடமாகத் தெரியும். நீ மிகவும் நல்லவன். எனக்கு ஒரு ஐந்நூறு ரூபா கடனாகக் கொடுக்க முடியுமா?" என்று கேட்டான்.

"மன்னித்துக்கொள்! நான் கடன் கொடுக்கிறதாய் இல்லை," என்றான் நண்பன்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

அதற்கு நண்பன் சொன்னான்: "எனக்கும் உன்னை ஐந்து வருடமாகத் தெரியும்!"

❑✦

* ஞாபக சக்தியை ஏற்படுத்த மருந்து உண்டா?

என்.தர்மலிங்கம், வவுனியா.

உண்டு. பதட்டமில்லாத நிதான சிந்தனை!

ஒரு தமாஷான கதை ஞாபகம் வருகிறது:

ஒரு தபால் பெட்டிக்கு முன்பாக ஒருவர் பரிதாபமாக முழித்தபடி நின்று கொண்டிருந்தார்.

"என்ன நடந்தது?" என்று கேட்டார் இன்னொருவர்.

"ஒரு தப்பு நடந்து போச்சு. ஒரு கவரை இந்தப் பெட்டிக்குள் போட்டுவிட்டேன். ஆனால் கவருக்குள் நான் எழுதிய லெட்டரை வைக்க மறந்து விட்டேன்!" என்றார்.

இதைக் கேட்டதும் மற்றவர் சிரித்தார். சோகமான சிரிப்பு.

"ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார் அவர்.

"நான் கவருக்குள்ளே லெட்டரை வைத்து மூடி, ஒட்டி சரியாத்தான் போட்டேன். இருந்தாலும் ஒரு தப்பு நடந்து போச்சு" என்றார்.

"அப்படி என்ன தப்பு?"

"முகவரி எழுத மறந்துவிட்டேன்!"

❑✦

* சிந்தியா! யாழ்ப்பாணத்துக்கு கடிதங்கள் போட்டாலும் போய்ச்சேரத் தாமதமாகிறது. அந்தக் காலம்போல புறாக்களின் கால்களில் கட்டி அனுப்பினால் என்ன?

பூ.ராகவன், கொழும்பு-09.

இப்படித்தான் ஒரு மன்னன் தன் மந்திரியைப் பார்த்துக் கேட்டான்:

"அமைச்சரே! அந்நிய தேசத்துக்கு புறா மூலமாக ஓலை அனுப்பினோமே; பதில் வந்ததா?"

"பதில் வந்தது மன்னா?"

"என்னவென்று?"

"அந்தப் புறாவின் கறி ருசியாக இருந்தது என்று!"

❑✦

* சுயநலம் இல்லாத மனிதர்களே கிடையாதா?

ம.ஈஸ்வரமூர்த்தி, கற்குடா.

கிடையாது. சுயநலம் இருக்கவேண்டியதுதான். அடுத்தவர் நலத்தை கெடுக்காத அளவுக்கு இருக்கும்வரை பாதகம் இல்லை.

கடவுள் ஒருநாள் பூமிக்கு வந்து ஒரு வீட்டுக்கதவைத் தட்டினார். வீட்டுக்காரன் வெளியே வந்து பார்த்தான். கடவுளைப் பார்த்ததும் ஒரு கும்பிடு போட்டான்.

கடவுள் அவனிடம்; "உனக்கு விரோதி யாரப்பா?" என்று கேட்டார்.

"அடுத்த வீட்டுக்காரன்தான் விரோதி!" என்றான்.

"என்ன காரணமப்பா?"

"அவன் எப்போதும் சந்தோசமாக இருக்கிறான். என்னால் அப்படி இருக்க முடியாவில்லை," என்றான் அவன்.

கடவுள் சொன்னார்:

"சரி உன்னையும் சந்தோசமாக இருக்கச் செய்கிறேன். என்ன வரம் வேண்டுமோ கேள். நீ கேட்டது உடனே கிடைக்கும். ஆனால் ஒரு நிபந்தனை, உனக்கு என்ன பலன் கிடைக்கிறதோ அதைப்போல இரண்டு பங்கு உன் பக்கத்துவீட்டுக்காரனுக்கும் கிடைக்கும்" என்றார்.

அவன் கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு வரம் கேட்டான்.

"கடவுளே! எனக்கு ஒரு கண் தெரியாமல் போகணும்!"

❑✦



பிரான்ஸ் கடற்கரையொன்றில் டயானா

* டயானாவின் மறைவுக்கு யார் காரணம்?

ஆ.கோகிலா, தெகிவளை.

டயானாவும்தான்! புகைப்படப்பிடிப்பாளர்கள் தன்னை தொடர்கிறார்கள், உடற்பயிற்சிக் கூடத்தில்கூட ஒளிந்திருந்து புகைப்படம் எடுத்திருக்கிறார்கள் என்று தெரிந்த பின்னரும் கடற்கரைகளிலும், கப்பல் வெளித்தளங்களிலும் நீச்சல் உடைகளில் நடமாடினார். டோடி ஃபயட்டுடன் நெருக்கமாக இருந்தபோதும் சன்னல் ஸ்கீரினை இழுத்துவிட்டிருந்தால் கமராக்காரருக்கு கழுத்து சுளுக்கியிருக்குமே தவிர, வெளுத்துக்கட்டக் கூடிய புகைப்படங்கள் கிடைத்திருக்குமா? எனக்கென்னவோ டயானா அந்தத் திரிலை விரும்பியது போலத்தான் தோன்றுகிறது. சும்மா புகைப்படப்பிடிப்பாளர்களை, மட்டுமே கும்பலோடு கோவிந்தாவாக வசைபாடுவதில் எனக்கு உடன்பாடில்லை. தீனி கிடைத்ததால்தானே அலைந்தார்கள்?

❑✦



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 100

இராமபிரான் விபீடணரை தம்மிடம் அழைத்து வருமாறு ஆஞ்சநேயரை அனுப்பியிருந்தார். அதன்படி விபீடணரும் இராமபிரானின் பாசறையை வந்தடைந்தார். தனது படைகளையும் படைக்கலங்களையும் இழந்து இலங்கை திரும்பியதை அடுத்து மேற்கொண்டு இராவணன் எத்தகைய நடவடிக்கையில் இறங்குவான் என்பதைப் பற்றி விபீடணரிடம் கேட்டு அறிந்து கொள்ளவே இராமபிரான் விரும்பினார்.

விபீடணர், தனக்கு முன்பிறந்த தனது அண்ணன் கும்பகர்ணன் பற்றிய விபரங்களை இராமபிரானிடம் எடுத்துக் கூறினார். மிகப் பெரிய மாமிச மலையான தனது அண்ணன் மிகப் பெரும் பலசாலி என்றும் தொடர்ந்து ஆறு மாதங்கள் தூங்குவார் என்றும், உணவு உட்கொள்வதானாலும் மலைபோல் அன்னத்தைக் குவித்து, பல மிருகங்களின் இறைச்சியைப் பக்குவமாய்ச் சமைத்து வைத்தால் அவற்றை உண்டும் பசி அடங்காமல், வேறு பல உணவு வகைகளையும் உட்கொள்ளக்கூடியவர் எனவும் கும்பகர்ணனைப் பற்றி விரிவாக விபீடணர் எடுத்துரைத்தார்.

உடல் வலிமையும் முரட்டு சுபாவமும் கொண்டவராக கும்பகர்ணன் தோன்றினாலும்- எப்போதும் நித்திரை செய்துகொண்டிருந்தாலும்- இராவணனைப் போலல்லாது நீதி நியாயங்களுக்கு முன்னுரிமை வழங்கும் நேர்மையாளன் என்றும் விபீடணர் கூறினார்.

இராவணன், அடுத்த நாள், தானே நேரடியாகப் போர்முனைக்கு வராமல் கும்பகர்ணனை பெரும் அரக்கர் படையுடன் அனுப்பி வைக்கலாம். அல்லது தன் மகனான இந்திரஜித்தையே போர் முனைக்கு அனுப்பிவைக்கக்கூடும் என்றும் சொன்னார். இராமபிரானுடன் இலக்குவன், சுக்கிரீவன், ஆஞ்சநேயர், அங்கதன் ஆகியோரும் இருந்து விபீடணரின் கூற்றைக் கேட்டுக் கொண்டிருந்தனர். கும்பகர்ணன் பயங்கரத் தோற்றமுடையவராக இருப்பதனால் வானரப் படையினர் அவரைக் கண்டு அஞ்சி ஓட்டமெடுக்கக்கூடும் என்று படைத்தளபதிகளுக்கு அறிவுறுத்தி. அஞ்சாமல் நின்று போரிடும் துணிவினை அவர்களுக்கு ஊட்டுமாறு சுக்கிரீவன் அங்கதனிடமும் ஆஞ்சநேயரிடமும் கூறினார்.

## துயிலெழுப்பிய காரணம்

கும்பகர்ணன் கண்விழித்ததும் வண்டி வண்டியாக கொண்டு வந்து குவிக்கப்பட்டிருந்த உணவினை உண்டான். குடங்குடமாக கள்ளைப் பருகினான். அப்படியும் அவன் பசி அடங்கவில்லை. மண்டபத்தைவிட்டு வெளியே வந்ததும்

இராஜகுமாரன்

கண்ணில் பட்ட மாடுகளைப் பிடித்து, கைகளால் அவற்றை அடித்துப் பிய்த்து, இரத்தம் சொட்டச் சொட்ட பச்சையாகவே இறைச்சியைப் புசித்தான். அவனுடைய உடலிலும் வாயிலும் மாட்டு இரத்தம் பட்டு வழிந்தது.


அப்போதுதான் சுற்றி நின்றவர்களை ஒருமுறை திரும்பிப் பார்த்தான். தானாகவே நித்திரை விட்டு எழும்பாமல்- எழுப்பப்பட்டுள்ளதை உணர்ந்தான். இதனால் கடும் சினங்கொண்டவனாகச் சீறினான். "யாரடா என்னை எழுப்பியவன்?" என்று கர்ஜித்தான். இடியோசை போன்ற ஒலி கேட்டு மண்டபத்தின் உள்ளேயும் வெளியேயும் நின்றிருந்த வீரர்கள் நடுங்கினர். பதில் கூறுவதற்கு எவருக்கும் நா எழவில்லை. தன்னுடைய அதட்டலால் காவலர்கள் கதிகலங்கிப் போய் நிற்கின்றனர் என்பதைத் தானாகவே உணர்ந்த கும்பகர்ணனுக்கு சிரிப்பு வந்துவிட்டது. தனது குரலைத் தணித்தவனாக ஓர் ஓரத்தில் நின்றிருந்த ஓர் அரக்க வீரனை சைகையால்- தன்னிடம் வருமாறு அழைத்தான். சற்று இன்முகம் காட்டி அழைத்தமையினால் அந்த வீரனும் தைரியமாக கும்பகர்ணனை அணுகினான்.

"பயப்படாதே! என்னை எதற்காக எழுப்பினீர்கள்? ஏதாவது விசேஷமுண்டா?" என்று கும்பகர்ணன் கேட்டான். அந்த வீரனுக்கு அப்போது நாட்டில் நடைபெறும் யுத்தம் பற்றிய விபரங்கள் தெரியாது என்பதனால், பிடிகொடாமல், "மாமன்னர் இராவணேசன் தங்களை உடனடியாகத் தன்னிடம் அழைத்து வரும்படி உத்தரவிட்டுள்ளார்! அவ்வளவுதான் எனக்குத் தெரியும் இளவரசரே!" என்றுரைத்தான்.

"யார் அண்ணாவா என்னை அழைத்தார்? அப்படியானால் ஏதோ முக்கியமான காரணம் இருக்கத்தான் வேண்டும்!" என்று கூறிக்கொண்டே, "எங்கே... நான் அரண்மனை புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்!" என்று கட்டளையிட்டான். கும்பகர்ணன் குளிப்பதற்கென்றே கடல் போன்று ஒரு தடாகம் இருந்தது. அதில் போய் நீராடினான். வேகமாகத் தன் அலங்காரங்களை முடித்துக்கொண்டு, (உடலால் பருத்த தான்,) தன் அண்ணனிடம் கலந்துரையாடுவதற்காக அமைக்கப்பட்டிருந்த பிரத்தியேக மண்டபத்துக்கு கும்பகர்ணன் சென்றான். தன் தம்பி தன்னிடம் வரப்போவதை காவலர் மூலம் முன்னதாகவே அறிந்து கொண்ட இராவணன், ஏற்கனவே அந்த மண்டபத்தில் வந்து காத்திருந்தான்.

தன் தம்பி தன்னைத் தேடி வருவதைக் கண்டதும் இராவணன் சற்று உணர்ச்சி வசப்பட்டு ஓடோடி வந்து தம்பியைத் தழுவிக் கொண்டான். இரு பெரு மலைகள் ஒன்றை ஒன்று தழுவுவதைப் போலிருந்தது அந்தக் காட்சி. இராவணனுடைய பிடி தளர்ந்ததும் தனது பெரும் உடம்பினைக் கீழே கிடத்தி,

## போர்க்களத்தில் கும்பகர்ணன்



அண்ணன் தாள்தொட்டு வணங்கினான். இராவணனும் தன் முழுப்பலத்தையும் பிரயோகித்து கும்பகர்ணனைத் தூக்கி நிறுத்தி மீண்டும் அணைத்து உச்சிமோந்தான். பின்னர் இருவரும் ஒரே இருக்கையில் அமர்ந்தனர்.

## அண்ணன் காட்டிய பரிவு

பலவிதமான பட்டுப் பீதாம்பரங்கள், மாலைகள், அணி மணிகள், வாசனைத் தைலங்கள் எல்லாம் இருக்கையின் அருகே பரவலாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்து கும்பகர்ணனை இராவணன் அலங்கரித்தான். பெரிய குடங்களில் கள் கொண்டுவரச் சொல்லி கும்பகர்ணனின் வாயில் ஊட்டிவிட்டான். பலவகையான புலால் உணவுகளையும் கூட இராவணன் தன் தம்பிக்கு ஊட்டிவிட்டான். நறுமணம் வீசும் செஞ்சந்தனக் குழம்பை கும்பகர்ணன் உடல் முழுவதும் பூசினான்.

தேவேந்திரனுடன் அரக்கர் படை- இந்திரஜித் தலைமையில் சென்றபோது, தனது ஐராவதம் எனும் யானையுடன் இந்திரன் தப்பியோடினான். அப்போது அந்த யானையின் நெற்றியிலணியப்பட்டிருந்த விலை மதிப்பிடற்கரிய மணிகளால் புனையப்பட்ட பட்டயம் அறுந்து விழுந்தது. அதனை வெற்றியின் அடையாளமாக இராவணனிடம் கொண்டு வந்து சேர்த்திருந்தனர். அதனை எடுத்து கும்பகர்ணனின் நெற்றியில் இராவணன் கட்டிவிட்டான். அத்துடன் இராவணனுக்கு சிவபிரானால் கொடுக்கப்பட்டிருந்த மார்புக் கவசத்தையும் எடுத்து வந்து கும்பகர்ணன் மார்பிலே சுற்றிக்கட்டினான்.

வெற்றிப் பட்டையத்தையும் மார்புக் கவசத்தையும் இராவணன் கும்பகர்ணனுக்கு அணிவித்ததும் கும்பகர்ணனுக்கு சந்தேக அலைகள் எழலாயின. அண்ணனிடமே கேட்டுவிட்டான்: "அண்ணா! போருக்குச் செல்ல வேண்டியவர்களுக்கான அலங்காரங்களை எல்லாம் எனக்கேன் இப்போது செய்கிறீர்கள்? யாராவது பகைவர்கள் எமது நாட்டை அபகரிக்கப் படைகளுடன் வந்துவிட்டனரா?" இவ்வாறு கும்பகர்ணன் கோபத்தில் கத்தினான்.

இலங்கையர்கோன் கும்பகர்ணனின் குணம் அறிந்தவன். ஆகவே, முன்னதாக, "போருக்குக் கிளம்பு!" என்று சொல்லாமல் அதற்குரிய அலங்காரங்களை நிறைவாகச் செய்துவிட்டான். கும்பகர்ணன் தானாகவே வினவியதையடுத்தே யாருடன் போரிட வேண்டும் என்பதைக் கூறலானான்.

**வானரப் பெரும் தனையர் மானிடர்**
**கோ நகர்ப் புறம் சுற்றினர் கொற்றமும்**
**ஏனை உற்றனர் நீ அவர் இன் உயிர்**
**போனகத் தொழில் முற்றுதி போய் என்றான்.**
(யுத்த காண்டம்-1290)

பொருள்:

"பெரும் வானரப் படையுடன் இரு மனிதர்கள் வந்து சிறப்புமிக்க எமது இலங்கை மாநகரைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். அவர்களே வெற்றியும் பெற்று வருகின்றனர். அவர்களுடன் போரிட்டு அவர்களின் உயிரைப் பறித்துவிட்டு வருவாயாக!" என்றான்.

## தம்பியின் அறிவுரை

இராவணன் இவ்வாறு கூறியதும் கும்பகர்ணனுக்கு நிலைமை புரிந்துவிட்டது. "போர் தொடங்கிவிட்டதா? இராம- இலக்குமணருடனா போர்? அண்ணா! கற்பின் உறைவிடமான சீதாப்பிராட்டியாரை இராமபிரானிடம் கொண்டுபோய்ச் சேர்க்குமாறு அன்றே தங்களிடம் கூறினேனே! அதனால் தான் இப்போது போர் தொடங்கியிருக்கிறதா? அவர்கள் பக்கம் தர்மமும் நீதியும் நிலைபெற்றிருக்கும்போது எமது வீரத்தால் அவர்களை வெல்லவே முடியாது. இதனை நீ நன்கு அறிவாய். நாம் வெற்றி பெறப்போவதேயில்லை. நமது அரக்கர் இனமும் நாமும் நிச்சயமாக அழியப்போகிறோம். எப்படியாவது சீதையை விடுவித்து சமாதானமாகப் போக வழிபார் அண்ணா!" என்று கண்ணீர் மல்கிய வண்ணம் அண்ணனை இரந்தான்.

கும்பகர்ணனின் அறிவுரைகளைக் கேட்கும் நிலையில் இராவணன் இல்லை. "உன் அண்ணனாகிய நான் இடும் கட்டளைக்கு ஏற்ப அந்த மானிடரையும், வளைந்த முதுகுகளையுடைய வானரங்களையும் போர்முனையில் அழித்துவிட்டுவா! இல்லையேல் கள்ளைக் குடித்து விட்டு புலாலை உண்டுவிட்டுப் போய் படுத்துறங்கு!" என்று கடிந்துரைத்தான். அத்துடன் "எனக்கு எவருடைய உதவியுமே தேவையில்லை! நானே போர் முனைக்குச் செல்கிறேன்!" என்று புறப்பட ஆயத்தமானான்.

கும்பகர்ணன் ஒரு கணம்தான் யோசித்தான். போரின் முடிவு எவ்வாறிருக்கும் என்பதை அவன் நன்கு அறிந்தவனாக, "அண்ணா! எனக்கு இன்று எல்லாம் நீயே! நீ போர்முனை செல்ல வேண்டாம். என்னைப் போன்றவர் உயிருடன் இருக்கும்வரை நீ போரிடப் போக வேண்டியதில்லை. நானே போகிறேன். விடைகொடுங்கள் அண்ணா!" என்றான்.

இராவணன் முகம் மலர்ந்தது. தம்பியை வாரி அணைத்து உச்சியில் முத்தமிட்டான். இராவணன் தாள் தொட்டெழுந்த கும்பர்கணன் அரண்மனையை விட்டு வெளியேறி அவனுக்காகக் காத்திருந்த தேரில் ஏறினான். முன்னும் பின்னும் கடல் போல் அரக்கர் படை அணியணியாகச் சென்றது. இராவணன், தம்பி கும்பகர்ணன் யுத்தமுனை நாடிச் செல்வதை அரண்மனை உப்பரிக்கையிலே நின்ற வண்ணம் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

போர்க்களத்தில் கும்பகர்ணன் வருவதை இராமபிரானும் விபீடணரும் பார்த்துக் கொண்டிருந்தனர். ஏற்கனவே கும்பகர்ணன் குண நலங்களையெல்லாம் விபீடணரிடம் கேட்டு இராமபிரான் அறிந்திருந்தார். ஆகவே, போரை விடுத்து தமது அணியில் வந்து சேர்ந்துவிடுமாறு கும்பகர்ணனைக் கேட்டுப் பார்க்கும்படி விபீடணரை தூதனுப்பினார் இராமபிரான். தன்னிடம் தன் தம்பி விபீடணன் வந்ததைக் கண்டு கும்பகர்ணன் பெருமகிழ்ச்சியடைந்தான். ஆனால் இராவணன் அணியை விட்டு தன்னால் வர முடியாது என்று கும்பகர்ணன் அறுதியாகக் கூறிவிட்டான். இதனால் விபீடணருக்கு பெரும் ஏமாற்றமாகிவிட்டது. மன வேதனையுடன் இராமபிரானிடம் வந்துசேர்ந்தார்.

விபீடணன் இராமபிரானிடம் சென்றடைந்ததைப் பார்த்திருந்த கும்பகர்ணன், தன்னை இராமபிரான் பார்த்துக் கொண்டிருக்கிறார். என்பதனைக் கண்டான். இருகைகளையும் கூப்பி இராமபிரானை வணங்கினான். இராமபிரான் உளம் நெகிழ்ந்து தன் வலது கரத்தை உயர்த்தி கும்பகர்ணனை ஆசீர்வதித்தார்.

உடனே போர்ச் சங்கொலி எழுந்ததும் இருதரப்பினரும் வில்களை வளைத்துப் பாணங்களைப் பொழிய ஆரம்பித்தனர். கும்பகர்ணன் எடுத்த எடுப்பிலேயே வானரப் படைகளைத் துவம்சம் செய்யலானான். இராமபிரான் தனது கோதண்டத்துடன் எழுந்து கும்பகர்ணனை நோக்கிக் கணைகளை வீசலானார். வானரவீரர்கள் மரங்களையும் கற்களையும் வீசி கும்பகர்ணனைத் திக்குமுக்காடச் செய்தனர். (தொடர்ந்து வரும்)

## இராமாயணப் போட்டி: 98

**சரியானவிடை:-** சிவபிரான் அல்லது சங்கரன்.

1. சி. கௌரி,
உப்போடை வீதி, 1ம் ஒழுங்கை, வந்தாறுமூலை.
2. என். பாலசுப்பிரமணியம்,
உடரதல்ல தோட்டம், நானுஓயா.
3. பிர்தௌஸியா சுபைர்.
கொத்தாந்தீவு, முந்தல்.
4. செல்வி திலகவதி இராமையா,
மாடன் தோட்டம், டிக்கோயா.
5. எஸ். வினோதினி, மொன்டிகிரிஸ்டோ, நாவலப்பிட்டிய.

**போட்டி இல. 100** கேள்வி:- கும்பகர்ணனிடம் உள்ள இயற்கைக்கு மாறான பழக்கம் என்ன?

செப்டம்பர் 27 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி- இல.100, தினமுரசு வாரமலர், த.பெ.இல- 1772, கொழும்பு.**

# பாணும் பவுண்டரியும்

காதிலை பூ கந்தசாமி

**மன்னர்:** அமைச்சரே! போர் நிலவரம் எப்படியிருக்கிறது?

**அமைச்சர்:** மூன்று பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் என்று ஒரு ஓவரிலேயே வெளுத்துக் கட்டிவிட்டார்கள்.

**மன்னர்:** மக்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?

**அமைச்சர்:** கடைகளின் முன்னால் கியூ வரிசைகளில் காத்து நின்றுகொண்டிருக்கிறார்கள்?

**மன்னர்:** கடைகளின் முன்னால் நின்று தொலைக்காட்சி பெட்டிகளில் கிரிக்கெட் பார்த்துக்கொண்டிருக்கிறார்களா?

**அமைச்சர்:** அல்ல. அல்ல. அங்குள்ள விலைவாசிப் பட்டியல்களை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம் அணியினர் வெற்றிபெற முன்பாக வாங்க வேண்டிய பொருட்களையெல்லாம் வேண்டி வைத்துக்கொள்ளப் போகிறார்களாம்.

**மன்னர்:** கடைக்காரர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

**அமைச்சர்:** குவிக்கப்படும் ரன் ரேட்டுக்கு ஏற்ப ஒரு குத்துமதிப்பாக பொருட்களின் விலைகளை ஏற்றி விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மன்னர்:** பத்திரிகையாளர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

**அமைச்சர்:** ஜெயசூரியா அடிக்கும் சிக்ஸரில் வானைத் தொடுவது பந்தல்ல, பாண் என்று காட்டூன் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**மன்னர்:** பத்திரிகைச் சுதந்திரத்தை சற்று அதிகமாகவே அனுபவிக்கத் தொடங்கி விட்டார்கள்.

**அமைச்சர்:** அங்கே டயானா காதலிப்பதை கண்டுபிடித்துக் கொண்டிருந்தார்கள். இங்கே நாம் கஜானா நிரப்புவதைக் கண்டித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே டயானா- இங்கே கஜானா!

**மன்னர்:** தொடர்ந்து பாணைத் துரத்தினால் விபத்தில் சிக்கி, எங்காவது மோதி காணாமல்போய்விடும் என்று ஒரு எச்சரிக்கை கொடுத்துவிடும்.

**அமைச்சர்:** குட் ஐடியா! கொடுத்தால் போச்சு!

**மன்னர்:** எதிர்க்கட்சி என்ன செய்கிறது?

**அமைச்சர்:** எதிர்க்கட்சி அல்ல மன்னரே, எதிரிக் கட்சி!

**மன்னர்:** அப்படி மக்கள் முன் சொல்லாதீர் அமைச்சரே, அதை நம்மனதில் மட்டும் வைத்துக்கொள்ளும் போதும். ம்... என்ன செய்கிறார்கள்?

**அமைச்சர்:** பாணின் விலையோ ஏறிக் கொண்டிருக்கிறது. பாணின் எடையோ இறங்கிக்கொண்டிருக்கிறது. ஏறுமுகமான பொருள் நீர் அறியவேண்டும், அடுத்த முறை நாம் ஆள நீர் அருள வேண்டும் என்று ஊர் ஊராக சென்று ஓதிக் கொண்டிருக்கிறார்கள்.

**மன்னர்:** அவர்கள் சென்ற இடமெல்லாம் நீங்களும் சென்று பிரசார சங்கை ஊதவேண்டியதுதானே!

**அமைச்சர்:** அதைத்தான் நமது தொடர்பு சாதனங்கள் துல்லியமாய் செய்து கொண்டிருக்கின்றனவே. பின்னர் நாம் எதற்கு?

**மன்னர்:** நம் தொடர்புச் சாதனங்கள் சொல்லும் செய்திகளைக் கேட்டு மக்கள் சிந்திக்கிறார்கள் என்றா நினைக்கிறீர்? நெவர்... சிரிக்கிறார்கள். அமைச்சரே சிரிக்கிறார்கள்.

**அமைச்சர்:** சிரிப்பும் நோய் தீர்க்கும் மருந்துதானே!

**மன்னர்:** நம் பேர் போக்கும் மருந்தாகி விட்டால்...?

**அமைச்சர்:** போர் நம் பேர் காக்கும்.

**மன்னர்:** அமைச்சரே! அவர்கள் ஆட்சியில் இருந்தாலும் பாண் விலைக்கு வானம் தானே எல்லை!

**அமைச்சர்:** அதில்லை மன்னா, நாம் வானத்தையும் தாண்டி செவ்வாய் கிரகத்துக்கு பாணை அனுப்பிவைத்து விடுவோமோ என்றுதான் பயப்படுகிறார்கள்.

**மன்னர்:** அப்படி நடந்தால் அதுவும் ஒரு சாதனைதானே. ஏன் வேதனைப்படுகிறார்கள்?

**அமைச்சர்:** தம்மால் அந்தச் சாதனையைப் படைக்க முடியவில்லையே என்பதுதான் அவர்கள் வேதனை மன்னா.

**மன்னர்:** பொதுநலம் என்பதே அவர்கள் அகராதியில் கிடையாதோ அமைச்சரே?

**அமைச்சர்:** அரசியல் கட்சிகளின் அகராதியிலேயே அது கிடையாது மன்னா!

**மன்னர்:** போகட்டும், மக்களைக் கவர ஒரு யோசனை சொல்லும்?

**அமைச்சர்:** கிரிக்கெட் அணியை நம் சொந்த அணியாக சுவீகரித்துக் கொள்வோம். அவர்கள் பெறும் வெற்றிகளை நம் வெற்றிகளாக விளம்பரம் செய்வோம்.

**மன்னர்:** எப்படி?

**அமைச்சர்:** தரமற்ற பந்தையும், பலமற்ற துடுப்பையும் கொடுத்து முன்னர் ஆண்டவர்கள் பின்னடையச் செய்த அணியை, தரமான பந்தும், உரமான துடுப்பும், ஊட்டமுள்ள உணவும் கொடுத்து முன்னேற வைத்தது நாம் தான் என்று சொல்லிவிடலாம். ஹி.ஹி.ஹி.

**மன்னர்:** நாட்டு மக்கள் நம்புவார்களா அமைச்சரே?

**அமைச்சர்:** அதற்கும் ஒரு யோசனை வைத்திருக்கிறேன்!

**மன்னர்:** வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று புதிர் போடுவதை தீர்வு யோசனையோடு மட்டும் நிறுத்திக் கொள்வோம். பொட்டென்று செப்பும் உம் யோசனையை?

**அமைச்சர்:** கடந்த கால கிரிக்கெட் அணி விவகாரங்களை ஆராய ஒரு ஆணைக் குழுவை நியமித்துவிடலாம்.

**மன்னர்:** இப்படியே தினமும் ஒரு ஆணைக் குழுவை நியமித்துக் கொண்டிருந்தால் விசாரணைகளை நடத்த விண்வெளியில் தான் இடம் தேடவேண்டியிருக்கும். வேறு யோசனை கூறும்?

**அமைச்சர்:** கடந்த காலத்தில் ஆண்டவர்கள் கிரிக்கெட் உலகுக்கு செய்த துரோகத்துக்கு பரிகாரம் செய்ய வீட்டுக்கொரு பந்து வாங்கும் திட்டத்தை அமுல்படுத்தலாம். பந்துள்ளோர் பந்து தாரீர். துடுப்புள்ளோர் துடுப்பு தாரீர். இரண்டும் இல்லாதோர் அட்லீஸ் மூன்று பொல்லாவது தாரீர். புதுவிக்கெட் தயாரிக்கிறோம் என்று கேட்கலாம்.

**மன்னர்:** சபாஷ்! நல்ல யோசனை! ஊர் ஊராக ஊர்திகள் செல்லட்டும். சேகரிக்கும் பந்தையெல்லாம் அதற்குள் போட்டுக்கொள்ளலாம்! அமைச்சரே எக்கச்சக்கமாய் பந்துகள் சேர்ந்து விட்டால் என்ன செய்வது?

**அமைச்சர்:** வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் முட்டைகளுக்கு பதிலாக பணமாகக் கொடுக்காமல், பந்துகளாக கொடுத்துவிடலாமே!

**மன்னர்:** ஆமாம். அதன் பெயர்தான் பண்டமாற்று. பண்டைய மன்னர்கள் காலத்திலும் அந்த முறை அமுலில் இருந்திருக்கிறது. வரலாற்றை புரட்டி மக்களுக்கு எடுத்துக்காட்டி விடுங்கள்.

**அமைச்சர்:** ஆகட்டும் மன்னா!

**மன்னர்:** முட்டை இறக்குமதியால் உள்ளூரில் ஒன்றும் அதிருப்தியில்லையே?

**அமைச்சர்:** எதிர்க்கட்சிதான் கொக்கரிக்கிறது!

**மன்னர்:** ஹா.ஹா.ஹா. யானைகள் எல்லாம் கோழிகளாகிவிட்டனவா? நன்று, நன்று, மிதிப்பது கலபம். நம் 'கை'யே போதும்!

**அமைச்சர்:** முட்டை விடயத்தில் அதிகம் துள்ளினால் உங்கள் குட்டை உடைத்து விடுவோம் என்று எச்சரித்திருக்கிறோம் மன்னா.

**மன்னர்:** சபாஷ்! ஆமாம், எப்படி உடைப்பீர்கள்?

**அமைச்சர்:** அன்று ஆட்சியிலிருந்தவர்கள் கோழிப் பண்ணைகள் வைத்திருந்தார்கள் என்று கூறிவிடலாம்.



**மன்னர்:** சாட்சி சொல்ல கோழிகள் வருமா?

**அமைச்சர்:** எப்படி வரும் மன்னா? எமது குற்றச்சாட்டே அதுதானே!

**மன்னர்:** என்ன குற்றச்சாட்டு, அதைக் கூறும் முதலில்?

**அமைச்சர்:** பண்ணை நடத்தியது கோழி வளர்ப்புக்கல்ல, கோழி அடிப்புக்கு! தினம் ஒரு விருந்து! அதனால் கோழிகள் பல போயின இறந்து! கோழிகளை கொத்துக் கறியாக்கியதால்தான் நாட்டில் கோழித்தட்டுப்பாடு தோன்றியிருக்கிறது! அவர்கள் தங்கள் வயிற்றுக்குள் கோழிகளை இறக்குமதி செய்தார்கள், அதனால் நாம் இன்று முட்டைகளை இறக்குமதி செய்யவேண்டியதாகி விட்டது என்று கூறிவிடுவோம்.

**மன்னர்:** அமைச்சரே! நமக்கு முன் ஒரு ஆட்சி இருந்திருக்காவிட்டால் நம்பாடு பெரும்பாடு ஆகியிருக்கும்.

**அமைச்சர்:** நாமே சொந்தமாக இயற்றும் இசைப்பாட்டில் குறையிருந்தால்கூட அதற்கு காரணம் முன்பிருந்தவர்கள்தான் என்று வசைப்பாட்டு பாடுவது பொது வழக்கம்தானே மன்னா! நேற்று அவர்கள் செய்ததை, நாங்கள் இன்று செய்கிறோம்.

**மன்னர்:** அப்படியானால் இங்கே மாறிக் கொண்டிருப்பது?

**அமைச்சர்:** ஆட்சிகள்.

**மன்னர்:** மாறாதவை.

**அமைச்சர்:** அரசியல் காட்சிகள்.

**மன்னர்:** தோன்றாதிருப்பது?

**அமைச்சர்:** பொது நலம்.

**மன்னர்:** சேர்ந்தே இருப்பது?

**அமைச்சர்:** இனப்பிரச்சனையும், யுத்தமும்.

**மன்னர்:** சேராதிருப்பது?

**அமைச்சர்:** இலங்கைத்தீவும்- இனப்பிரச்சனை தீர்வும்

**மன்னர்:** பிரிக்கமுடியாதது?

**அமைச்சர்:** பொதி.

**மன்னர்:** பிரித்தால் என்னாகும்?

**அமைச்சர்:** தெரிந்துவிடும் உள்ளே இருக்கும் பொரி.

**மன்னர்:** அமைச்சரே! உம் மதி முழுமதி! நீரே அமைச்சர்களில் அதிபதி. ஹா.ஹா.ஹா!

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)
www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105. காலி வீதி வெள்ளவத்தை கொழு-06.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331


# நாளைய மன்னன்





ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


← இளவரசி-டயானா-சாள்ஸ் மத்தியில் கொழு கொழுவென்று இருப்பவர்தான் இளவரசர் வில்லியம். இன்று இளம் குமரனாக வளர்ந்து விட்டார். தன் இரு பிள்ளைகள்மீதும் டயானாவுக்கு கொள்ளை ஆசை. அடுத்தடுத்து இரண்டும் ஆண் குழந்தைகளாக பிறந்ததில் சாள்ஸுக்குத்தான் வருத்தம். "என்ன உன்னைப் போலவே பிள்ளைகள் இரண்டும் பரட்டைத் தலைகளாக இருக்கிறார்களே" என்று சாள்ஸ் ஒருமுறை சத்தம் போட டயானாவின் மனம் சுருண்டு போனதாம்.

இரண்டாவதாக ஹரி பிறந்தபோது பெண் குழந்தை பிறக்கும் என்ற எதிர்பார்ப்புடன் வந்த சாள்ஸ், பிறந்தது ஆண் குழந்தை என்றதும் முகத்தைத் தொங்கப்போட்டபடி 'கோல்ஃப்' விளையாடப் போய்விட்டாராம். சாள்ஸ் செய்த புறக்கணிப்புக்களும், கொடுமைகளும் வெளியே பத்திரிகைகள் வாயிலாக தெரியவந்தபோதுதான் பிரிட்டிஷ் மக்களின் அனுதாபம் டயானாமீது திரும்பியது.

இன்று வளர்ந்துவிட்ட இளவரசர் வில்லியமுக்குக்கு தாய்மீது மகா பாசம். தனது தந்தையின் நடவடிக்கைகள்தான் தாயாரை அந்நியப்படுத்தியது என்பதை புரிந்து வைத்திருக்கிறார் வில்லியம் என்கிறார்கள்.

# தங்கப் பதுமை



விஷேட

← நடமாடும் நகைக்கடைகளாக உலாவரும் எந்த நங்கையரும் இவர் முன்னால் போட்டிக்கு நிற்கவே முடியாது. அங்கம் தங்கம் என்பர் ரசனையுள்ள புலவர்கள். இவருக்கோ அங்கமெல்லாம் தங்கம். எல்லாமே அசல் தங்கம். ஒன்றுகூட போலி கிடையாது. யார் இந்த தங்கப் பெண் என்று கேட்கிறீர்களா? இவர் ஆபிரிக்க நாடான கானாவைச் சேர்ந்த காரிகை.

ஆபிரிக்காவின் தென் மேற்குக் கரையோரமாக அமைந்துள்ள கானா என்ற நாட்டில் ஆபிரிக்கப் பழங்குடியினர் பல்வேறு பிரிவினராக வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையினராகவும் செல்வமும் செல்வாக்கும் பெற்றவராகவும் விளங்கும் இனம் 'அசந்தே' தேசிய இனமாகும். இவ்வின மக்களின் இன்றைய மன்னனின் பெயர்: அசந்தே ஹென் இரண்டாவது ஒட்டும்ஃபௌ ஒபோகு வாரே. (நீளமான பெயர்) அசந்தேகு ஒபோகு வாரே ஆட்சி பீடமேறி 25வது ஆண்டுப் பூர்த்தி விழா அண்மையில் கானாவின் குமாசி நகரில் இடம் பெற்றது. ஏறத்தாழ 70 ஆயிரம் அசந்தே இன மக்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் பல்லாயிரக் கணக்கான பிறநாட்டுப் பார்வையாளர்களும் கலந்து கொண்டனர்.

அசந்தஹெனிடம் 1300ம் ஆண்டில் அவனுடைய மூதாதையர்கள் பயன்படுத்திய பல்லாயிரக்கணக்கான கிலோ எடையுள்ள தங்க ஆபரணங்கள் பொக்கிஷமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மன்னன் அசந்தஹென்னின் ஆண்டுவிழாவில் இடம்பெற்ற நடன நிகழ்ச்சியில் பங்கேற்ற ஒரு நடன மாது இவள். இவளுடன் வேறுபல இளம்பெண்களும்சேர்ந்து நடனமாடினர். இவர்களுடைய அங்கங்களின் அசைவும் ஒரே மாதிரியாக அமைந்திருந்தன. இந்நடன மாது அணிந்துள்ள நகைகள் அத்தனையும் அப்பழுக்கற்ற பத்தரை மாற்றுத் தங்கம். தங்கம் தாராளமாகக் கிடைப்பதால் போலி நகைகளுக்கு அங்கு இடமில்லையாம். (தங்கப் பிரியர்கள் தாராளமாக பெருமூச்சு விடலாம்)

பாரம்பரிய நகைகளை இன்றும் உருவாக்குவதற்கென்றே அங்கு பொற்கொல்லர்கள் இருக்கிறார்களாம்.

# இசைக் குருவி



→ சின்னஞ்சிறிய கருநீலவர்ணக் குருவி இது. நம் நாட்டில் குயில்கள்தான் இனிய குரலில் பாடுவதாக அறிவோம். ஆனால் இக்குருவிகளின் இனியகானத்துக்கு முன் வேறு எந்தக் குருவியும் சிறப்பாகப்பாட முடியாதாம். இக்குருவிகளின் இன்னிசையை கடந்த 20 வருடங்களாகக் கேட்டு இரசித்துவரும் மிச்சிகன் பல்கலைக்கழக பறவையியல்துறை ஆய்வாளர்களான ரோபேட் பி.பெய்னும், அவர் மனைவி லௌராவும் அடித்துக்கூறுகிறார்கள்.

இப்பறவைகளில் பெண்களைவிட ஆண் பறவைகளே சிறந்த 'பாடகர்களாம்!' இவை ஒரு முறை இசைத்த மெட்டினை மறுமுறை இசைக்கப் பல நாட்களாகுமாம். ஒவ்வொரு முறையும் புதுப்புது மெட்டுகளை இசைக்குமாம். இக்கருஞ்சிவப்புக் குருவிகளின் மெட்டுக்களை இவை வசிக்கும் பிரதேசத்திலுள்ள வேறு சில குருவிகளும் கேட்டு அப்படியே பிரதி பண்ண முயல்வதனால்தான் இவை ஒவ்வொரு தடவையும் மெட்டுக்களை மாற்றிப் பாடுகின்றன என்று பெய்ன் தம்பதியினர் கூறுகின்றனர்.

பெரும்பாலும் ஆண் குருவிகள் தங்களுக்கான இணையினைத் தேடும் காலத்தில்தான் குஷி பிறந்து இசை மீட்ட ஆரம்பிக்கின்றனவாம். உஜ்ஜலாலா என்பது அதுதானோ?!


## 3வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி. அனுகீர்த்தா. (ஜான்சி)

28.08.1997



வேலணை கிழக்கு 1ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு.திருமதி. பிலேந்திரன்- ரூபி சாந்தா தம்பதியினரின் அருந்தவப் புதல்வி (அனுகீர்த்தா ஜான்சி) தனது மூன்றாவது பிறந்தநாளை டோகாவில் உள்ள தமது இல்லத்தில் 28.08.1997 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு, அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா (VELANAI) பெரிய சித்தப்பா- தவநாயகம்(B.Com), சின்னச் சித்தப்பா சந்திரன் (VELANAI), சித்தப்பா வசந்தன் (Doha), அம்மப்பா, அம்மம்மா (INDIA), LONDONல் வசிக்கும் பெரியமாமா பாலச்சந்திரன், பெரிய மாமி கேமாவதி, ZAMBIAவில் வசிக்கும் சின்னமாமா பிரேமச்சந்திரன் (B.SC), சின்னமாமி வாசுகி(B.A), HOLANDல் வசிப்பவர்களான ஆசை மாமா ரவிச்சந்திரன், ஆசைமாமி ஜெயமலர், மாமா செல்வச்சந்திரன், மாமி லதா, சுவாமி மாமா ஜெயச்சந்திரன் (O.M.I) (KOREA), மாமா சந்திரமோகன், மாமி சரளா (INDIA), மச்சான்மார்களான சுரேஸ்குமார் (VELANAI), கிங், றோய் (LONDON), ரவிராஜ் (ZAMBIA), கௌதம் (INDIA), மச்சாள்மார்களான ஜனனி (ZAMBIA), பானுமதி (HOLAND), DOHAவில் உள்ள நண்பர்கள், மற்றும் உற்றார் உறவினர்களும் புனித அந்தோனியார் அருளால் பல்கலைகளையும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: ஞ. தேவசகாயம், வேலணை கிழக்கு, வேலணை-01.


# என்றென்றும் நிலையாக



தினமுரசு

← அல்லல்பட்டோர் துயர் துடைக்க அலுக்காமல் சலிக்காமல் நீண்ட அபயக்கரம் ஓய்ந்துவிட்டது.

சாந்தப் புன்னகை நிரந்தரமாக உறைந்து நின்ற உதடுகள் ஓய்ந்துவிட்டன.

ஓடியோடி தொண்டாற்றிய தொண்டுக்கால்கள் ஓய்ந்துவிட்டன.

இனம், மதம், மொழி என்ற எல்லைகளைக் கடந்து அன்பு என்ற பொதுமொழியால் அன்னை என்ற பொது உணர்வால், துயர் சுமந்தோர் இருள் அகற்றிய மெழுகுவர்த்தி அணைந்துவிட்டது.

அன்னை தெரேசாவின் சேவைக்கு பணம் படைத்தோரும் உதவினார்கள். பரம ஏழைகளும் உதவினார்கள். ஒருமுறை ஏழைப் பெண் ஒருவர் அன்னையிடம் தன்னால் முடிந்த சிறு அளவு நிதி அளித்தார். பெரும் பணம் படைத்தோர், மாளிகைவாசிகள் போன்றோர் செய்த உதவிகளைவிட அந்த ஏழைப் பெண் கொடுத்த நிதிதான் அன்னை தெரேசாவுக்கு பெரிதாக இருந்தது.

அப்போது பைபிள் வாசகத்தை நினைவூட்டிய அன்னை தெரேசா, "பணம்படைத்தவர்கள் தங்களிடம் இருப்பதில் கொடுக்கிறார்கள். ஏழைகளோ தங்களிடம் இருப்பதைக் கொடுக்கிறார்கள்" என்று புகழ்ந்தார்.

அன்னை தெரேசா மாளிகையில் வாழ்ந்தபடி ஏழைகளை எப்போதாவது எட்டிப் பார்த்து நலன் விசாரிப்பவரல்ல. பெரும் குபேர ஆண்களும் பெண்களும் ஏழைகளுடன் நின்று போஸ் கொடுத்தால் அது ஆச்சரிய செய்தி. ஆனால் அன்னை தெரேசா ஏழைகளுடனே வாழ்ந்தது வரலாறு.

தரையில் சிறகடித்த அந்த வெள்ளைப் புறா இப்போது உலக மக்கள் இதயங்களில், அன்பு என்னும் மகத்தான ஆசனத்தில் ஏறி அமர்ந்து கொண்டது.

கால வெள்ளத்தின் கரங்கள் தீண்ட முடியாத பெயர் அன்னை தெரேசா.